KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 33, 13 February 2026 இதழ்:- 06

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# மீண்டும் தலை தூக்கும் சிங்கள பௌத்த தீவிரவாதம்! இரண்டாவது அறகலையின் மூலம் வீழ்த்தப்படுவாரா அநுர?

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் யாழ் திஸ்ஸ விஹாரை சர்ச்சை தொடர்பாக ஜனாதிபதி நிகழ்த்திய உரை கல்வி மறுசீரமைப்பு தொடர்பான சர்ச்சை மற்றும் மிகிந்தலை தேரரை இழிவு படுத்தும் விதத்தில் அமைச்சர் லால்காந்த நிகழ்த்தியதாக கூறப்படும் உரை என்பன 2022 இன் பின்னர் கடும் பின்னடைவைச் சந்தித்து முற்றிலும் முடங்கிப் போயிருந்த சிங்கள பௌத்த தீவிரவாத சக்திகளுக்கு புதுத் தெம்பையும், உற்சாகத்தையும் ஊட்டியுள்ளன. இந்தச் சக்திகள் இது வரையில் ஆவலுடன் எதிர் நோக்கியிருந்த அந்தப் பொன்னான தருணம் இதோ வந்திருக்கிறது. (17ம் பக்கம் பார்க்க)



# ஶ்ரீதரன் தமிழரசில் இன்னொரு இராஜதுரையா?



தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கும், அமைப்புக்களுக்கும், அவர்களின் அரசியலுக்கும் மங்குசனி தொடங்கிய காலம் அது. இதனால் புலிகளின் தலைவர் பிரபாகரனால் வீட்டு சின்னத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்ற லேபல் புதுப்பித்து ஒட்டப்பட்டது. ஒரு வகையில் இதை ஒப்பரேசன் தமிழரசு என்று சொல்ல முடியும். இது முரண்பாடுகளைக் கொண்ட பலரை கூட்டமைப்பு என்ற சாக்குக்குள் போட்டு கட்டி புலிகள் அரசியல் பாடம் எடுத்த தருணம். இந்தபுதிய லேபல் ஏற்படுத்திய பாராளுமன்ற பிரதிநிதித்துவ அதிகரிப்பை தமிழ்தேசிய கூட்டமைப்பால் 2009க்கு பின்னர் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை. (16ம் பக்கம் பார்க்க)

# பிரிட்டீஸ் கொலம்பியா பாடசாலையில் துப்பாக்கிச் சூடு! 18வயதான சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டார்!

கனடாவின் பிரிட்டீஸ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள 'Tumbler Ridge' என்ற சிறிய மலைப்பகுதி நகரத்தில், கடந்த செவ்வாய்க்கிழமை (பிப்ரவரி 10, 2026) நடைபெற்ற கோரமான துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் துப்பாக்கிதாரி உட்பட ஒன்பது பேர் உயிரிழந்துள்ளதாக அரச ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. இந்தத் துயரச் சம்பவத்தில் ஈடுபட்ட சந்தேக நபர் 18 வயதுடைய Jesse Van (6ம் பக்கம் பார்க்கக)



# இந்தியா நீட்டும் நிதி உதவி

# முன்னர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை எதிர்த்த அநுர அரசு இப்போது அதற்கு எதிராக மாறியது ஏன்?



கடந்த காலங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அச்சட்டம் பதிலீடு செய்யப்படல் என்பவற்றுக்கு எதிரான நிலைப்பாட்டில் உறுதியாக இருந்த தேசிய மக்கள் சக்தியினர், இப்போது ஏன் அதற்கு நேரெதிராக மாறிவிட்டார்கள் என ஐரோப்பிய ஒன்றிய அதிகாரியினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு, முன்னர் எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் இப்போது ஆளுந் தரப்பில் இருப்பது ஒன்றே வித்தியாசம் என தமிழரசுக்கட்சியின் பிரதிநிதிகள் பதிலளித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம் – இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் 27 ஆவது கூட்டத்தில் பங்கேற்பதற்காக நாட்டுக்கு வருகை தந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் குழுவுக்குத் தலைமை தாங்கும் அதன் வெளிவிவகார சேவைப் பிரிவின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பதில் முகாமைத்துவப் பணிப்பாளர் பாவோலா பம்பலோனிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா. சாணக்கியன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு 11 பெப் 2026 புதன் கிழமை காலை 9.00 – 10.00 மணி வரை கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதரகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் கார்மென் மொரெனோ ரேமுன்டோவும் பிரசன்னமாகியிருந்தார்.

இதன் போது பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலீடாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவில் உள்வாங்கப்பட்டிருக்கும் மிகமோசமான கூறுகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரியிடம் விளக்கமளித்த தமிழ்ப்பிரதிநிதிகள், முன்னைய அரசாங்கங்களினால் பயங்கரவாத ஒழிப்புச்சட்டமூலம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் என்பன முன்மொழியப்பட்ட வேளையில் அதனை நிராகரித்ததுடன் பயங்கரவாதத் தடைச்சட்டம் எவ்வித பதிலீடுமின்றி முழுமையாக நீக்கப்பட வேண்டும் என தேசிய மக்கள் சக்தி பின்பற்றிய கொள்கை குறித்தும் தெளிவுபடுத்தினர்.

அது மாத்திரமன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என வலியுறுத்தி தாம் நாடளாவிய ரீதியில் முன்னெடுத்த கையெழுத்துப் போராட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு கையெழுத்திட்டமை, இச்சட்டத்தின் தொடர் பிரயோகத்துக்கு எதிராக அவர்கள் நிகழ்த்திய உரைகள் உள்ளிட்ட சகல விடயங்களையும் அவர்கள் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரியிடம் எடுத்துரைத்தனர்.

அவற்றை செவிமடுத்த பாவோலா பம்பலோனி அவ்வாறானதொரு நிலைப்பாட்டில் இருந்தவர்கள், இப்போது ஏன் இவ்வாறு மாறியிருக்கிறார்கள் என்பது பற்றி உங்களுக்கு ஏதேனும் தெரியுமா?' என சுமந்திரன், சாணக்கியனிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன், முதலில் எதிர்க்கட்சியில் இருந்தவர்கள், இப்போது அரசாங்கத்தில் இருக்கிறார்கள். அவ்வளவு தான் வித்தியாசம். ஆனால் இப்போதும் பாதுகாப்புத் தரப்பின் வசமே முழுமையான கட்டுப்பாடு இருக்கிறது என்பதையே இது வெளிப்படுத்துகின்றது.

அத்தோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விட மோசமான புதியதொரு வரைவை முன்மொழியும் போது, நாமனைவரும் அதற்கு எதிராகக் குரலெழுப்புவோம். அதனையடுத்து அரசாங்கத்தினால் அவ்வரைவு வாபஸ் பெறப்படும் பட்சத்தில், அதுவே எமக்குப் பெரிய வெற்றியாகத் தென்படும். ஆனால் மறுபுறம் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்து நடைமுறையிலேயே இருக்கும். இதுவே இப்புதிய வரைவு முன்மொழியப்பட்டதன் உள்நோக்கமாகும். ஆகையினாலேயே பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கத்தை வலியுறுத்தி சாணக்கியன் பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையொன்றை சமர்ப்பித்திருக்கிறார்' எனச் சுட்டிக்காட்டினார்.

அதனையடுத்து பயங்கரவாதத்தடைச் சட்டம் நீக்கப்படும் அதேவேளை, அதற்குப் பதிலாகப் புதிய சட்டமொன்று கொண்டு வரப்படும் பட்சத்தில், அது சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவாறு அமைய வேண்டியது அவசியம் என்ற தமது நிலைப்பாட்டை ஐரோப்பிய ஒன்றிய அதிகாரி பாவோலா பம்பலோனி மீளவலியுறுத்தியதுடன், கட்சி சார்பில் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவு பற்றிய கரிசனைகள் மற்றும் விளக்கங்களை உள்ளடக்கிய ஆவணமொன்றை நாளைய தினத்துக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# அல்லைப்பிட்டியில் வான் மீது பொலிசார் துப்பாக்கிச்சூடு! இளைஞன் பலி! பொலிசாரின் அறிக்கை கூறுவது என்ன?





அல்லைப்பிட்டியில் பொலிஸாரின் கட்டளையை மீறித் தப்பிச் செல்ல முயன்ற வான் ஒன்றை நிறுத்துவதற்காகப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந் தார். மேற்படி சம்பவம் 10பெப் 2026 அதிகாலை ஊர்காவற் றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லைப்பிட்டி சந்திக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான வான் ஒன்றை நிறுத்துமாறு பொலிஸார் சைகை காட்டிய போதிலும், அந்த வான் பொலி ஸாரின் கட்டளையை மீறி மண்டைதீவு திசை நோக்கிச் சென்றுள்ளது.

அந்த நேரத்தில் மண்டைதீவு வீதித் தடையைப் பரிசோதித்து விட்டு அல்லைப்பிட்டி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஜீப் வண்டிக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டது. அதற்கமைய குறித்த ஜீப் வண்டி அந்த வானை நிறுத்த முயற்சித்த போதி லும், அது தொடர்ந்தும் நிறுத்தாமல் தப்பிச் சென்றதால், பொலிஸார் வானை நிறுத்துவதற்காக வானத்தை நோக்கி எச்சரிக்கை துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

அப்போதும் நிறுத்தாமல் தப்பிச் சென்ற வேனை நிறுத்து வதற்காக பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அதன் சாரதி காயமடைந்து யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். உயிரிழந்தவர் வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த 17 வயதுடைய இளை ஞர் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வானின் பின் இருக்கைகள் கழற்றி அகற்றப்பட்டி ருந்த நிலையில், வானில் இருந்த மேலும் இருவர் ஊர்கா வற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸாரும் யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவினரும் மேற்கொண்டனர்..

இது தொடர்பில் 11 பெப் 2026 பொலிஸ் ஊடகப் பிரிவானது ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் இறந்த சந்தேக நபர் ஐஸ் மற்றும் ஹெரோயின் பயன்படுத்திய தாக உடற்கூற்று பரிசோதனைகளின் போது தெரிய வந்ததாக அரசு மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார். யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று சட்ட வைத்திய அதிகாரி எம். மயூரதன் முன்னிலையில் உடற்கூற்றுப் பரிசோதனை நடை பெற்றது. அதன் முடிவில் துப்பாக்கிச் சன்னமானது இளைஞ னின் நெற்றியில் பாய்ந்து, தலைக்குள் ஊடுருவியுள்ளது. அவ்வாறு ஊடுருவிய சன்னம் மூளையைத் துளைத்துச் சென்றமையால் ஏற்பட்ட பாரிய பாதிப்பினால் மரணம் சம்பவி த்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வாகனத்தில் இருந்த மற்ற இரண்டு சந்தேக நபர்களும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதில் மேலும் ஒரு சந்தேக நபர் போதைப்பொருள் பயன்படுத்தியது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த வாகனம் டால்பின் ரக வேன் ஆகும். பின் இருக்கை அகற்றப்பட்டிருந்ததால், குற்றப் புலனாய்வு அதிகாரிகளின் உதவியுடன் வாகனத்தை சோதனை செய்த போது 17 கிராம் 500 மில்லி கிராம் கஞ்சா, ஒரு வாள், ஒரு கத்தி, ஒரு கயிறு மற்றும் சாணம் ஆகியவை கண்டு பிடிக்கப்பட்டன.


குற்றம் நடந்த இடத்திலிருந்து தப்பிச் செல்ல முயன்ற வேன், ஊர்காவற்றுறை பகுதியில் கால்நடை திருட்டுக்குப் பயன் படுத்தப்பட்ட அதே வாகனமா அல்லது அது வேறு குற்றங் களில் ஈடுபட்ட வாகனமா என்பதை அறிய, ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையமும் யாழ்ப்பாணப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகமும் உதவி காவல் கண்காணிப்பாளரின் மேற்பார்வை யின் கீழ் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளை பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சிறுவனின் இறுதிக் கிரியைகள் வட்டுக்கோட்டை சித்தங் கேணியில் உள்ள அவரது இல்லத்தில் 12 பெப் 2026 வியாழக் கிழமை அன்று இடம் பெற்றது. அதன் பின்னர் பதாகை களை தாங்கியவாறு சவப்பெட்டியுடன் வந்த உறவுகள் வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# கனடாவில் பொது இடங்களில் அத்துமீறி வீடியோ எடுத்த இலங்கையரான முகமட் அக்சர் ரிசாக் பொலிசாரால் கைது





கனடாவில் பொது இடங்களில் அத்துமீறி வீடியோ எடுத்தும், அநாகரிகமாகப் பேசியும் தொல்லை கொடுத்ததாக 45 வயதுடைய இலங்கையரான முகமட் அக்சர் முகமட் ரிசாக் என்பவர் டொராண்டோ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சமூக ஊடகங்களில் 'இன்புளுயன்சர்' என அறியப்படும் இவர் மீது குற்றவியல் துன்புறுத்தல் உள்ளிட்ட நான்கு முக்கிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

டொராண்டோ பொலிஸால் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி இவர் மீது பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் கண்டறிக2025 ஆம் ஆண்டு மே மாதம் கடமையில் இருந்த பெண் பொலிஸ் அதிகாரி ஒருவரை வீடியோ எடுத்து, அவரது தோற்றம் குறித்து அநாகரிகமாக விமர்சித்துள்ளார். ஜீன் மாதம் டண்டாஸ் ஸ்ட்ரீட் பகுதியில் பெண் ஒருவரை அனுமதியின்றி வீடியோ எடுத்தபோது, அதைத் தட்டிக்கேட்ட பாதுகாப்பு அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதேவேளை, ஆகஸ்ட் மாதத்தில் யூனியன் ஸ்டேஷனில் பணிபுரிந்த ஊழியர் ஒருவரின் முகத்திற்கு மிக அருகில் கையடக்க தொலைபேசியை வைத்து வீடியோ எடுத்ததுடன், அவரது இனம் குறித்து இழிவாகப் பேசியுள்ளார். அத்துடன், செப்டம்பர் மாதம் பொது இடத்தில் வரிசையில் நின்றிருந்த ஒருவரை வலுக்கட்டாயமாக வீடியோ எடுத்துத் தொந்தரவு செய்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர் இம்மாதம் 04 ஆம் திகதி ஒன்டாரியோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

கனடா நாட்டின் சட்டத்தின்படி, இத்தகைய குற்றவியல் துன்புறுத்தல் நிரூபிக்கப்பட்டால், அவருக்கு அதிகபட்சமாக 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளது.

இந்த நபரால் வேறு யாராவது பாதிக்கப்பட்டிருந்தால் உடனடியாகத் தங்களைத் தொடர்பு கொள்ளுமாறு டொராண்டோ பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும், இவரது புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளனர்.

தற்போது இந்த வழக்கு விசாரணை நிலையில் உள்ளது. இத்தகைய செயல்கள் கனடாவில் தனிமனித சுதந்திரத்திற்கு எதிரான கடுமையான குற்றமாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டை ஒன்றிணைக்க வடக்கு - தெற்கு இனவாதிகளே தடை!

நாட்டை ஒன்றிணைப்பதற்கு இரு குழுக்கள் தடையாகவுள்ளன. ஒன்று வடக்கில் இருக்கும் தமிழ் இனவாதிகள் மற்றையது தென் பகுதியிலுள்ள சிங்கள இனவாதிகள். இவர்கள் வடக்கில் இருக்கும் விகாரைக்கு சென்று போயா தினத்தில் விகாரையை அகற்றுமாறு கூச்சலிடுகின்றனர். அதற்கு சமமாக தென் பகுதி இனவாதிகள் அதே விகாரைக்கு போயா தினத்தில் செல்வது குழப்பதை ஏற்படுத்துவதற்கே தவிர வேறு ஒன்றுக்குமில்லை என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

டித்வா' சூறாவளியினால் முழுமையாக வீடுகளை இழந்த குடும்பங்கள் மற்றும் மண்சரிவு அபாயம் அதிகமுள்ள இடங்களாக இனங்காணப்பட்ட குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்காக, 'Rebuilding Sri Lanka' திட்டத்தின் கீழ் காணிகளை வழங்குவதற்கும், வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதி உதவிகளை வழங்குவதற்குகான நிகழ்வில் உரையாற்றும் போதே இதனை குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், அவர்களுக்கு மீண்டெழ தேவையாகவுள்ளது இனவாதம். எமது இனம்,மதம் என்னும் போது இரத்தம் துடிக்கும்.அது உண்மை தான். அதை தான் அந்த சிறு குழு செய்து கொண்டிக்கிறது.

நாட்டில் இனி இனவாதத்திற்கு இடமில்லை. அதற்கான சட்டத்திடங்கள் போதாதென்றால். உருவாக்கி முடிவு கட்டுவோம். பௌத்த தர்மம் மற்றும் எமது வரலாறு என்பது எமக்கு அரசியல் மேடைகளில் பயன்படுத்தப்படும் வெறும் கோஷங்கள் அல்ல. எமது கடந்தகால உரிமைகளை அடிப்



படையாகக் கொண்டு நவீன உலகிற்கு ஏற்ற பொருளாதார மாற்றத்திற்காக அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என குறிப்பிட்டுள்ளார்.

தென்னிலங்கையில் மீண்டும் எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து இனவாதத்தைத் தூண்டி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது



# நலிவுற்றோர் நலம் பேண கை கொடுப்போம் வாரீர்!




AJITH SABARATNAM INSURANCE & INVESTMENTS INC.
Ajith Sabaratnam
647.401.5800
647.594.9573
email:ajithsaba@gmail.com
10 THORNMOUNT DR SCARBOROUGH, ONTARIO M1B 3J4
Tel: 416.439.2800

Cash Point PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

Vijaya Jewellery
3341, Markham Road, Unit 127 Scarborough ON m1x0A5
+1 (437) 833-3197, (647) 329-3062
Email:yugan14@hotmail.com

நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில்
கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarbrough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

உங்கள் அனைத்து விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்!
SASITHARAN LAW PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

Ontario அரச அங்கீகாரம் பெற்ற முதன்மை நிறுவனம் ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை அடகுமாடம்
தங்க நகைக் கடன் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படும்
தொடர்புகட்கு 416-754-7198
At Woodside Square Mall, 1571 SANDHURST CIRCEL #159D (Finch & McCowan) Scarborough, ON
2613 EGLINTON AVE, (Brimley & Eglinton) Toronto, ON

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX

PACELAW
Over 40 years of putting our clients first
Poorany Sornabala BD Specialist
Desmond Sornabala Paralegal
Call Us Today
647-968-7059
Get In Touch
191 The West Mall Suite 1100 Toronto ON, M9C 5K8
psornabala@pacelawfirm.com
www.pacelawfirm.com
Personal Injury
Corporate & Commercial
Immigration
Family Law
Real Estate
Wills and Estates
Employment Law
Civil Litigation
Criminal Defence Law
Business Facilitation Services

AJAX CREMATORIUM & VISITATION CENTRE
CALL: DHARMA, B.Com., Licenced Funeral Pre-Planner 647-713-6049

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும்
குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% முதல் 2% வட்டி மட்டும் (per month)
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave. E, Scarborough. ammapawnbroker@gmail.com

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

N.K.S DRAPERY & BLINDS FABRIC
• Custom Made Vertical Blinds • Venetian Blinds • Draperies • Curtain • Shutters • Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
Business Loan Business (Visa MC)
Best Rate Mortgage in Town, Bad Credit New Immigrants bankruptcy, 0% Down Payment, 1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP Real Estate, Credit Counseling Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Chapel Ridge FUNERAL HOME CREMATION CENTRE
Funeral Director
S. Christeen
416-258-6759

INCOME TAX SERVICE
PERSONAL, SMALL BUSINESS, UNINCORPORATED AND INCORPORATED TAXES, TAXES AND ASSOCIATED SERVICES
THANAM KANAGARATNAM
Tax Analyst
416.298.6718
1080 Tabscott Rd, Unit 5
Scarborough, ON M1X 1E7

Century 21 Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

Chapel Ridge Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

நந்தா NANTHA CATERS
Sri Lankan & Indian Food
BEST CATERS IN TOWN
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kipling & Steeles - 5010 Steeles Ave. |
Call 416 NANTHA 1 · 416 626 8421

வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான விடயங்கள் அறிய இலவச ஆலோசனைகளுக்கு
உங்கள் நண்பன் ஆனந் தர்மலிங்கம்
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
1265 Morningside Ave, Suite 203
Toronto ON M1B 3V9
ANANTH Tharmalingam
Sales Representative
416.939.9525

Santha Panchalingam
சாந்தா பஞ்சலிங்கம்
Board of Director
பணிப்பாளர்
416-200-5470
santha@tamilcentre.ca
www.tamilcentre.ca

விழா சிறப்புற வாழ்த்துகிறோம்
Netwyn www.netwyn.com
Kula Sellathurai
CEO
10 Thornmount Drive
Scarborough, ON M1B 3J4
D: 416.902.9462
O: 416.906.1414
kula@netwyn.com

# பிரிட்டீஸ் கொலம்பியா பாடசாலையில் துப்பாக்கிச் சூடு! 18வயதான சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டார்!



கனடாவின் பிரிட்டீஸ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள 'Tumbler Ridge' என்ற சிறிய மலைப்பகுதி நகரத்தில், கடந்த செவ்வாய்க்கிழமை (பிப்ரவரி 10, 2026) நடைபெற்ற கோரமான துப்பாக்கிச் சூடு சம்பவத்தில், துப்பாக்கிதாரி உட்பட ஒன்பது பேர் உயிரிழந்துள்ளதாக அரச ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. இந்தத் துயரச் சம்பவத்தில் ஈடுபட்ட சந்தேக நபர் 18 வயதுடைய Jesse Van Rootselaar என ராயல் கனடியன் மவுண்டட் போலீஸ் அதிகாரிகள் அதிகாரப்பூர்வமாக அடையாளம் காட்டியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் பிப்ரவரி 10ஆம் தேதி மதியம் 2:20 மணியளவில் 'Tumbler Ridge Secondary School' பாடசாலையில் தொடங்கியுள்ளது. துப்பாக்கிச் சூடு குறித்து தகவல் கிடைத்த இரண்டு நிமிடங்களிலேயே காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

அதிகாரிகள் பாடசாலைக்குள் நுழைய முயன்ற போது அவர்கள் மீதும் துப்பாக்கிச் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பின்னர் பாடசாலைக்குள் அதிரடியாக நுழைந்த காவல்துறையினர், சந்தேக நபர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு உயிரிழந்து கிடப்பதைக் கண்டறிந்தனர்.

காவல்துறையினரின் முதற் கட்ட விசாரணையில், தாக்குதல் நடத்திய Jesse Van Rootselaar பாடசாலைக்குச் செல்வதற்கு முன்பாகவே, தனது வீட்டில் வைத்து 39 வயதுடைய தாயாரையும், 11 வயதுடைய சகோதரனையும் சுட்டுக் கொன்றுள்ளார் என்பது தெரிய வந்துள்ளது. இதனைத் தொடர்ந்து பாடசாலை நூலகத்திற்குச் சென்ற அவர், அங்கு 39 வயதுடைய பெண் ஆசிரியர் ஒருவரையும், 12 மற்றும் 13 வயதுடைய ஐந்து மாணவர்களையும் சுட்டுக் கொன்றுள்ளார். இச்சம்பவத்தில் 25க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதோடு, அவர்களில் இருவர் கவலைக்கிடமான நிலையில் வான்வழி அவசர சிகிச்சை மூலம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சந்தேக நபரான Jesse Van Rootselaar குறித்துப் பேசிய RCMP துணை ஆணையர் Dwayne McDonald, அவர் ஒரு திருநங்கை என்றும் கடந்த சில ஆண்டுகளாக மனநலப் பாதிப்புகளுக்காகக் காவல் துறையினரின் கண்காணிப்பில் இருந்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் அவரது இல்லத்தில் துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்ட நிகழ்வுகளும் நடந்துள்ளன. எனினும், இந்தத் தாக்குதலுக்கான தெளிவான நோக்கம் குறித்து இன்னும் கண்டறியப்படவில்லை என்றும், அவர் தனித்தே இந்தச் செயலில் ஈடுபட்டதாகவும் காவல்துறையினர் நம்புகின்றனர்.

இந்தத் துயரச் சம்பவம் குறித்து கவலை வெளியிட்டுள்ள கனடியப் பிரதமர் Mark Carney நாடு முழுவதும் அரசு அலுவலகங்களில் தேசியக் கொடிகள் ஏழு நாட்களுக்கு அரைக் கம்பத்தில் பறக்க விடப்படும் என அறிவித்துள்ளார். இன்று துயரத்திலிருக்கும் 'Tumbler Ridge' மக்களின் வலியில் ஒட்டுமொத்த கனடாவும் பங்கெடுக்கிறது என அவர் தனது இரங்கல் செய்தியில் உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டு நோவா ஸ்கோடியாவில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டிற்குப் பிறகு, கனடாவில் நடைபெற்ற மிக மோசமான துப்பாக்கிச் சூடு சம்பவமாக இது பார்க்கப்படுகிறது.

தற்போது 'Tumbler Ridge' பாடசாலை காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் உளவியல் ஆலோசனைகளை வழங்க மாகாண அரசு சிறப்பு மையங்களை அமைத்துள்ளது. சம்பவ இடத்தில் இருந்து நீண்ட துப்பாக்கி மற்றும் மாற்றியமைக்கப்பட்ட கைத்துப்பாக்கி ஆகியவற்றை மீட்டெடுத்துள்ள புலனாய்வுத் துறையினர் அவை எவ்வாறு பெறப்பட்டன என்பது குறித்துத் தீவிர விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

# பேரனர்த்தத்தின் பின்னர் தேவைகள் தொடர்பான மதிப்பீட்டில் மலையக மக்களுக்கு முன்னுரிமை அவசியம் -ஐ.நா. பிரதிநிதி



தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட பேரனர்த்தமானது கட்டமைப்பு ரீதியான இடைவெளிகளையும், சமத்துவமின்மையையும் தோற்றுவித்துள்ளது. ஆகவே மக்களின் தேவைகள் தொடர்பான மதிப்பீட்டையும் விரைந்து மேற்கொள்வதுடன் இதன்போது பேரனர்த்தத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டியது மிக அவசியம் என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ-பிரான்சே வலியுறுத்தியுள்ளார்.

கடந்த நவம்பர் மாத இறுதியில் ஏற்பட்ட 'தித்வா' சூறாவளியினால் மலையக பகுதிகள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில், கடந்த வார இறுதியில் பதுளை மாவட்டத்துக்கு விஜயம் மேற் கொண்டு, அங்கு கள நிலைவரங்களைப் பார்வையிட்டதன் பின்னர் வெளியிட்டுள்ள காணொளியிலேயே வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ-பிரான்சே மேற் கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:

தித்வா' சூறாவளி இலங்கையைத் தாக்கி இரண்டு மாதங்கள் பூர்த்தியடைந்துள்ளன. இந்நிலையில் பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்திப்பதற்காக நான் பதுளை மாவட்டத்துக்கு வருகை தந்திருக்கிறேன்.

இக்காலப்பகுதியில் அரச அதிகாரிகள் ஆற்றிய அளப்பரிய சேவையையும், இலங்கை முழுவதும் வெளிப்படுத்தப்பட்ட உடன்நிற்பையும் நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். அதுமாத்திரமன்றி பேரனர்த்தத்தினால் ஏற்பட்ட தாக்கங்களை இழிவளவாக்குவதற்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கு சர்வதேச சமூகமும் உடனடியாக முன்வந்தது.

எது எவ்வாறெனினும் இன்னமும் பல தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பாதுகாப்பான குடியிருப்பு வசதிகள் அவசியமாகவுள்ளன. குறிப்பாக தங்குமிடங்கள், தூய்மையான குடிநீர், வாழ்வாதாரம் என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு விடயங்கள் சார்ந்து நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையிலான தீர்வுகள் வழங்கப்படவேண்டியுள்ளன.

அதேவேளை உயர் அபாய எச்சரிக்கைக்குரிய மற்றும் முறைசாராத பகுதிகளில் வசிப்போரை வேறு பகுதிகளுக்குக் குடியமர்த்துவது குறித்து அரசாங்கம் வெளிப்படுத்தியிருக்கும் கடப்பாட்டை நாம் வரவேற்கின்றோம்.

இது தற்போது எம்மத்தியில் நிலவும் சவால்களில் முக்கியமானதாகும். சேதமடைந்த மற்றும் அவசியமான காணிகள் தொடர்பான மதிப்பீட்டை விரைவுபடுத்துவதுடன், பாதிக்கப்பட்ட மக்களை இயலுமான வரை விரைவாக மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவேண்டும்.

அதே போன்று இந்தப் பேரனர்த்தமானது கட்டமைப்பு ரீதியான இடைவெளிகளையும், சமத்துவமின்மையையும் தோற்றுவித்துள்ளது.

ஆகவே மக்களின் தேவைகள் தொடர்பான மதிப்பீட்டையும் விரைந்து மேற்கொள்வதுடன் இதன்போது பேரனர்த்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டியது அவசியமாகும் என வலியுறுத்தியுள்ளார்.

# கனடா மீதான வரி விதிப்புக்கு எதிராக அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் வாக்களிப்பு!

கனடா மீது அமெரிக்கா விதித்துள்ள சுங்கவரி நடவடிக்கைக்கு எதிராக அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் 11 பெப் 2026 புதன்கிழமை முக்கிய வாக்களிப்பு நடை பெற்றது. டொனால்ட் டிரம்ப் நிர்வாகம் மேற்கொண்டுள்ள வர்த்தக நடவடிக்கைகளை திரும்பப் பெறும் நோக்கில் இந்த தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

அமெரிக்கா கனடா எல்லையில் பென்டனில் அவசர நிலை நிலவுகிறது என்ற காரணத்தைக் சுட்டிக்காட்டி, சர்வதேச பொருளாதார அவசர அதிகாரச் சட்டம் (IEEPA) கீழ் டிரம்ப் 35 சதவீத சுங்கவரியை கனடாவுக்கு விதித்திருந்தார்.

இந்த நடவடிக்கைக்கு எதிராக ஜனநாயகக் கட்சியினருடன் ஆறு குடியரசுக் கட்சி உறுப்பினர்களும் இணைந்து ஆதரவு வழங்கினர். தீர்மானம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டாலும், அதிபரின் மறுப்பை மீற வேண்டிய மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை.

அடுத்ததாக இது செனட் சபைக்கு அனுப்பப்படவுள்ளது. இரு சபைகளும் அங்கீகரித்த பின்னரே சுங்க வரிகளை ரத்து செய்யும் நடவடிக்கை இறுதி நிலைக்கு செல்லும். தீர்மானத்தை அறிமுகப்படுத்திய ஜனநாயகக் கட்சி உறுப்பினர் கிரெகரி மீக்ஸ், கனடா எங்கள் நண்பரும் முக்கிய கூட்டாளியும் ஆகும் அது அச்சுறுத்தல் அல்லஎன தெரிவித்தார்.

அமெரிக்க அரசுத் தரவுகளின்படி வட எல்லையில் கைப்பற்றப்படும் பென்டனில் அளவு மெக்சிகோ



எல்லையை ஒப்பிடுகையில் மிகக் குறைவானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். மறுபுறம் சில குடியரசுக் கட்சி உறுப்பினர்கள், போதைப்பொருள் பிரச்சினை உண்மையானது என்றும் கனடா போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் வாதிட்டனர். இந்நிலையில், உருக்கு அலுமினியம், வாகனங்கள் மற்றும் மரவளம் போன்ற துறைகளில் விதிக்கப்பட்ட தனித்தனி சுங்க வரிகளாலும் கனடா ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளது.

IEEPA சட்டத்தை பயன்படுத்தி சுங்கவரி விதிக்கும் அதிகாரம் குறித்து அமெரிக்க உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், இந்த விவகாரம் அரசியல் மற்றும் சட்ட ரீதியாக மேலும் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கனடா வரி விதிப்பு தொடர்பில் ட்ரம்புக்கு எதிராக அவரது கட்சியினரும் வாக்களிப்பு!



ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியானதுமே, சர்வாதிகாரி போல, பல்வேறு நாடுகள் மீது வரிகள் விதிப்பது முதலான நடவடிகைகளை தன்னிச்சையாக மேற் கொண்டு வருகிறார். இந்நிலையில் அவரது முடிவு ஒன்றுக்கு எதிராக, அவரது கட்சியினர் சிலரே வாக்களித்துள்ளார்கள்.

ட்ரம்ப் கனடா மீது கூடுதல் வரிகள் விதித்ததில், கனேடியர்களுக்கு மட்டுமின்றி, அமெரிக்கர்களில் பலருக்கும் உடன்பாடில்லை. ட்ரம்பின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான டான் பேக்கன் என்பவரே, கனேடிய பொருட்கள் மீது வரி விதிப்பது, அமெரிக்க நுகர்வோர் மீது வரி விதிப்பதற்கு சமம் என விமர்சித்துள்ளார்.

இந்நிலையில் கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது அமெரிக்கா கூடுதல் வரிகள் விதிப்பதற்கு எதிராக , அமெரிக்க நாடாளுமன்றத்தின் கீழவையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதற்கிடையில் தன் கட்சியைச் சேர்ந்த யாராவது கனேடிய வரி விதிப்புக்கு எதிராக வாக்களித்தால், அவர்கள் கடுமையான பின்விளைவுகளை சந்திப்பார்கள் என தனது சமூக ஊடகப் பக்கத்தில் மிரட்டல் விடுத்திருந்தார் ட்ரம்ப். ஆனால் ட்ரம்பின் மிரட்டலையும் மீறி, அவரது குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனேடிய வரிவிதிப்புக்கு எதிராக வாக்களித்துள்ளார்கள்.

ஜனநாயகக் கட்சியினர் முன் வைத்த கனேடிய வரி விதிப்புக்கு எதிரான மசோதாவுக்கு ஆதரவாக 219 பேரும், எதிராக 211 பேரும் வாக்களிக்க, மசோதா வெற்றி பெற்றுள்ளது.

அதாவது அமெரிக்க நாடாளுமன்றத்தின் கீழவை, கனடா மீது அமெரிக்கா கூடுதல் வரிகள் விதிக்கக் கூடாது என்கிறது. விடயம் என்னவென்றால், இனி இந்த மசோதா நாடாளுமன்றத்தின் மேலவையில் வாக்கெடுப்புக்கு விடப்படும்.

அங்கும் அது வெற்றி பெற்றாலும், கடைசியாக முடிவெடுக்க வேண்டியது, அதாவது, மசோதாவில் கையெழுத்திட வேண்டியது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தான் என்பதால் நாடாளுமன்றத்தில் வெற்றி பெற்றாலும் கூட இந்த மசோதா அமுல்படுத்தப்படுமா என்பது சந்தேகமே என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்த ஆண்டு மாகாணசபைத் தேர்தல் இல்லை

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் நிலவும் சட்டச் சிக்கல்கள் மற்றும் எல்லை நிர்ணயப் பணிகள் காரணமாக இந்த ஆண்டுக்குள் தேர்தலை நடத்த வாய்ப்பில்லை என அரசாங்கத் தரப்பு தெரிவித்துள்ளது. தமக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருந்த போதிலும், தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாது என்றும் அனைத்துக் கட்சிகளுடனும் கலந்தாலோசித்த பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா இந்தியா சென்றுள்ள நிலையில், அதனை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபைத் தேர்தல் குறித்து எதிர்க்கட்சிகள் கேள்வியெழுப்பியுள்ளன.

இது தொடர்பில் வினவிய போது பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன இதனைத் தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் தற்போது தடைகள் காணப்படுகின்றன. மாகாணசபை தொடர்பான சட்டம் இன்னும் முழுமையாக தயாரிக்கப்படவில்லை. அத்தோடு பழைய தேர்தல் முறைமை தற்போது நீக்கப்பட்டுள்ளது. புதிதாக தொகுதிவாரி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அதில் எல்லை நிர்ணயம் இல்லை.

தொகுதிகள் பிரிக்கப்படவில்லை. அவ்வாறெனில் புதிதாக எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு சட்டத்தை நிறைவு செய்ய வேண்டும். அவ்வாறில்லை என்றால் இதனை மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நீக்கி பழைய சட்டத்தை மீண்டும் நிறைவேற்ற வேண்டும். இதனை எமக்கு பெரும்பான்மை இருக்கிறது என்பதற்காக எமது தேவைக்கேற்ப செய்ய முடியாது.

இது தொடர்பில் எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட தரப்பினருடன் கலந்தாலோசிக்க வேண்டியுள்ளது. மக்களின் நிலைப்பாடுகளைக் கோர வேண்டியுள்ளது. இவை அனைத்தையும் குறுகிய காலத்துக்குள் நிறைவு செய்ய முடியாது. அந்த வகையில் இவ்வாண்டுக்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியும் என்று நான் நம்பவில்லை என்றார்.

# கம்பவாரிதியின் பதில்!

கேள்வி:- தைப்பொங்கல் கொண்டாட யாழ். சென்ற ஜனாதிபதியின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள, நமது தமிழ்த்தலைவர்கள் போகாமல் விட்டது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:- இதை அவர்களது அறியாமை என்று சொல்வதை விட வேறு எதனை நான் சொல்ல? கொழும்பில் ஜனாதிபதியுடனும், மற்றைய சிங்களத் தலைவர்களுடனும் கொஞ்சிக்குலாவும் இவர்கள், யாழ்ப்பாணத்திற்கு அவர்கள் வரும் போது மட்டும் நிலவைப் பார்த்து வானம் சொன்னது என்னைத் தொடாதே என்றாற் போல அவர்களை விட்டு விலகி நின்று, தங்களது கற்பினைக்(?) காட்டி, தமிழ்மக்களை ஏமாற்ற முயல்கிறார்கள்.

தமிழர்களுக்கு மட்டுமன்றி எல்லா இனத்தார்க்கும் இந்நாட்டில் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொண்ட ஒரே ஜனாதிபதியாக அநுர விளங்குகிறார். அதற்காக முதலில் நாம் அவரைப் பாராட்ட வேண்டும்.

இந்த நாட்டில் நடக்கும் முழுப் பிழைகளையும், ஒரே நாளில் தோசை திருப்புவது போல உடனடியாக திருத்தி விட வேண்டும் என நாம் நினைத்தால் அது அறியாமையன்றி வேறல்ல.

இந்நாட்டில் நெடுங்காலமாய்ப் புரையோடிக் கிடக்கும் குற்றங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தான் சீர் செய்யமுடியும். அதற்கு அவருக்குத் தமிழர்களாகிய நாங்கள் அவகாசம் வழங்க வேண்டும்.

அதை விடுத்து தமிழ்மக்களை ஏமாற்றி, தத்தம் பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, நம் தமிழ்த்தலைவர்கள், கையில காசு வாயில தோசை என்னுமாப் போல, அவரைத் தேவையில்லாமல் நெருக்கடி பண்ணுவது வேண்டாத வேலையென்றே தோன்றுகிறது.

நம் தலைவர்களுக்கு அரசியலும் தெரியவில்லை. தமிழர் தம் பண்பாடும் தெரியவில்லை. நம் மண்ணிற்கு, நமது பண்பாட்டு விழாவைக் கொண்டாட வந்த நாட்டின் தலைவரை, நம் தலைவர்கள் ஒருமித்துச் சென்று வரவேற்றிருக்க வேண்டும். பின்னர் அந்த நிகழ்விலேயே மனந்திறந்து தமது ஏமாற்றங்களையும் பதிவு செய்திருக்க வேண்டும்.

இந்த நாடு அனைவருக்கும் சொந்தமானது எனச் சொல்லப் போய், இனவெறி பிடித்த பேரினத்தாரின் ஒரு பகுதியினராலும், அரசியலைத் தமதாக்க நினைக்கும் எதிர்கட்சியினர் சிலராலும் ஜனாதிபதி பெரும் எதிர்ப்புக்களைச் சந்தித்து வருகிறார்.

இந்நிலையில் நாமும் அவருக்கு எதிர்ப்புக்காட்டி நின்றால், அது முடிவில் எங்கு கொண்டு போய் விடும் என்பதைக் கூட நம் தலைவர்கள் உணர்கிறார்கள் இல்லை.

பழையபடி வெறும் எதிர்ப்பு அரசியல் செய்து காட்டி, அறிவில்லாமல் மீண்டும் இளையவர்களைப் போராட்டக் களத்திற்கு இவர்கள் கொண்டு செல்லப் பார்க்கிறார்கள்.

ஏற்கனவே இப்படி இளையோரைத் தூண்டி விட்டுப் போர்க்களத்திற்கு அனுப்பிய நம் தலைவர்கள் பாதுகாப்பாக வெளிநாடுகளுக்குச் சென்று ஒளிந்து, தாமும் வாழ்ந்து தம் பிள்ளைகளையும் வாழ வைத்த வரலாற்றை நாம் அறிவோம்.

இத்தகையவர்களின் தூண்டுதலால் தான் பெருந்தொகையான நம் இளையோரை நாம் இழந்து விட்டோம். இனியும் அதே பாதையில் செல்ல நினைப்பது அறிவீனம்.

உள்நாட்டு மக்களிடம் தாங்கள் இனப்பற்றுள்ளவர்கள் எனக் காட்டி வாக்குகள் சம்பாதிக்கவும், வெளிநாட்டில் வசிப்போர்க்குத் தமது போர்க்குணத்தைக் காட்டிப் பணம் சம்பாதிக்கவும் இவர்கள் செய்யும் தந்திரத்தை, என்று தான் நம்மினத்தார்கள் உணர்வார்கள் என்று தெரியவில்லை.

# 1989 - 1990 காலங்களில் விடுதலைப்புலிகள் - பிரேமதாச உறவும் பிரேமதாசாவின் “மச்சியாவல்லி” தந்திரத்தை புலிகள் உணர்ந்ததும்



பிரேமதாச மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இடையே 1989-1990 காலப்பகுதியில் நிலவிய அந்தச் சிக்கலான உறவு மற்றும் ஆயுத வழங்கல் குறித்த உண்மைகளை இந்த அறிக்கை உறுதிப்படுத்துகிறது.

பிரேமதாசவின் ஆலோசகராக இருந்த பிராட்மேன் வீரகோன், அந்தச் சமயத்தில் நடந்த நிகழ்வுகளை மிகத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார். உங்கள் கேள்விகளுக்கான பதில்கள் இந்த வரலாற்றுப் பதிவுகளில் உள்ளன:

1.ஆயுதங்கள் வழங்கப்பட்டது உண்மையா?

ஆம். இந்திய அமைதிப்படைக்கு (IPKF) எதிராகப் போரிடுவதற்காக விடுதலைப் புலிகளுக்கு இலங்கை அரசு ஆயுதங்களை வழங்கியதை வீரகோன் உறுதிப்படுத்துகிறார்.

இந்திய இராணுவத்தை இலங்கையை விட்டு வெளியேறச் செய்ய நெருக்கடி கொடுப்பது மற்றும் அதற்குப் புலிகளை ஒரு கருவியாகப் பயன்படுத்துவது. இது ஒரு 'உயர்ந்த ஆபத்து' கொண்ட நடவடிக்கை என்பதால் அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தைகளில் இது பேசப்படவில்லை. ஜனாதிபதி பிரேமதாச, ரஞ்சன் விஜேரத்ன மற்றும் பாதுகாப்புச் செயலாளர் மட்டத்தில் மட்டுமே இது இரகசியமாகத் திட்டமிடப்பட்டது.

2. பிரேமதாசவின் 'மச்சியாவல்லி' தந்திரம் - வீரகோனின் கூற்றுப்படி, பிரேமதாசவின் திட்டம் மிகவும் தந்திரமானது. அதை அவர் நான்கு தெரிவுகளாகப் பிரிக்கிறார். அதில் இறுதியான மற்றும் முக்கியமான தெரிவு இந்திய அமைதிப்படை வெளியேறியவுடன், புத்துயிர் பெற்ற இலங்கை இராணுவத்தைக் கொண்டு பலவீனமடைந்த புலிகளைத் தாக்கி, பிரபாகரனை ஒழித்து, முழு இலங்கையிலும் மீண்டும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டைக் கொண்டு வருவது.'

அதாவது, ஒரு எதிரியை (இந்தியா) வெளியேற்ற இன்னொரு எதிரிக்கு (புலிகள்) ஆயுதம் கொடுத்து விட்டு, இறுதியில் அவர்களையும் அழிக்க அவர் திட்டமிட்டிருந்தார் என்பதை வீரகோன் சுட்டிக்காட்டுகிறார்.

3. அரசியல் ஏமாற்றங்கள் - புலிகள் முன் வைத்த இரண்டு முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக பிரேமதாச வாக்களித்தார், ஆனால் இறுதியில் அதைச் செய்யவில்லை.

ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குதல். இது நீக்கப்பட்டிருந்தால் மட்டுமே புலிகள் ஜனநாயக நீரோட்டத்திற்கு வர முடியும். ஆனால் சிங்கள மக்களின் எதிர்ப்பு மற்றும் பாராளுமன்றப் பெரும்பான்மை இல்லாமையைக் காரணம் காட்டி இது தாமதிக்கப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் (EPRLF) தலைமையிலான சபையைக் கலைத்து விட்டுத் தேர்தல் நடத்தப் புலிகள் கேட்டனர். ஆனால், சட்டம் இயற்றுவதில் ஏற்பட்ட தாமதம் புலிகள் மத்தியில் நம்பிக்கையீனத்தை வளர்த்தது.

நீங்கள் குறிப்பிட்டது போல, இந்தத் தந்திரோபாய உறவு இறுதியில் இரு தரப்புக்கும் பெரும் அழிவையே தந்தது.

ஜீன் 1990: அமைதிப்படை வெளியேறிய சில மாதங்களிலேயே மீண்டும் போர் வெடித்தது. அரைவேக்காட்டு வேலைகளுக்கு என்னிடம் இடமில்லை, புலிகளை முழுமையாக அழிப்போம்' என்று ரஞ்சன் விஜேரத்ன பாராளுமன்றத்தில் முழங்கினார்.

ஈழமெங்கும் 'எலும்புக் காடுகளாக' மக்கள் புதைக்கப்பட்டதாக நீங்கள் கூறுவது, அந்தப் போரின் கோர முகத்தைச் சுட்டிக் காட்டுகிறது. பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் தெற்கில் ஜே.வி.பி கிளர்ச்சியாளர்கள் மற்றும் வடக்கில் தமிழ் மக்கள் என இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டனர் மற்றும் கொல்லப்பட்டனர் என்பது ஒரு கசப்பான வரலாறு.

வீரகோன் போன்ற அதிகாரிகளின் பதிவுகள், அரசியல் தலைவர்கள் தங்கள் அதிகாரத்தைத் தக்க வைக்க எப்படி ஆயுதங்களையும் உயிர்களையும் பகடைக்காய்களாகப் பயன்படுத்தினார்கள் என்பதை இன்று உலகிற்குப் பறை சாற்றுகின்றன.

இதேவேளை பிரேமதாசா தமிழ்மக்களின் நண்பர். உரிமைகளை வாரி வழங்கி இருப்பார் என்று இன்றும் பேசித் திரியும் தமிழர்களுக்கு அவர் எப்படிப்பட்ட திட்டமொன்றை வைத்துக் கொண்டு செற்பட்டார் என்பதையும் விடுதலைப்புலிகள் அதனைத் தெரிந்து கொண்டு செயற்பட்டனர் என்பதையும் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்.

எந்தவொரு சிங்கள தலைவர்களின் மனங்களில் துட்டகைமுனு வாழ்ந்து கொண்டிருக்கின்றான் என்பதை நாம் உணர வேண்டும்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# ஸ்ரீதரன் பதவி நீக்க விவகாரத்தில் தமிழரசுத் தலைமைப் பீடத்தின் முனனுக்குப் பின் முரண் அம்பலம்!

இலங்கையை கடைசியாகக் கட்டியாண்ட பிரித்தானியர்கள், இந்தத் தீவின் சனத்தொகையில் பெரும்பான்மையானவர்களுக்கு தந்திரமாக சுதந்திரத்தை வழங்கிச் சென்ற எழுபத்தெட்டாவது ஆண்டு கடந்த நான்காம் திகதி.

இந்த நாள் நெருங்கி வரும் போதெல்லாம் இலங்கை இரு தேசம் என்பதை அங்குமிங்கும் பறந்து கொண்டிருக்கும் கொடிகள் காட்டிக் கொண்டிருக்கும். சிங்கள பிரதேசங்களில் வாள் ஏந்திய சிங்கக்கொடி பறக்க தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்படும். இதனால் தமிழரின் தேசியக் கொடி கறுப்பு என்பதாகவே காட்சி கொடுக்கும்.

தாயகக்கவி புதுவை இரத்தினதுரை அன்றொரு நாள் இயற்றிய நீங்க வேறு நாடைய்யா, நாங்க வேறு நாடு என்ற பாடலின் அர்த்தம் பெப்ரவரி நாளில் பொழிப்பாக காதுகளில் விழும்போது நன்றாகப் புரியும். அநுர குமர அரசின் இரண்டாவது ஆண்டு சுதந்திர தின நிகழ்வு வழக்கம்போல கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றது.

சேனநாயக்கக்களிலிருந்து இறுதியாக ரணில் வரை தங்களின் எழுப்பம் காட்டும் படைத்துறையினரின் சாகசங்களையே இந்நாளில் முக்கியத்துவப்படுத்துவது வழக்கம். ஆனால் அநுர குமர அரசு இதனைச் சற்று கீழிறக்கி படைத்துறையினரின் அணி வகுப்புகளோடும் பலவின மாணவர்களின் நிகழ்வுகளோடும் மாற்றிக் கொண்டது

தமிழரசுக் கட்சி சரிவு நிலையில் வேகமாகப் பயணித்துக் கொண்டிருப்பதை எதிரணியினர் மட்டுமன்றி வீடுக்குள் வசிப்பவர்களும் காண்கின்றனர். சிவஞானம் சிறீதரனை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் சம்பவங்கள் இதற்கான சான்றாக அமைந்துள்ளன. தமது எம்.பி. பதவியை பறிப்பதை இலக்காகக் கொண்டு காரியங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்





பதை சிவஞானம் சிறீதரனே அண்மையில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

தனது சகாவான சாணக்கியனை தமிழரசின் முக்கிய புள்ளியாக உயர்த்தும் முனைப்பில் சுமந்திரன் தீவிரமாக இருப்பது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. சாடிக்கு ஏற்றதாக ஒரு மூடி அரசியலிலும் தேவைப்படுகிறது போலும். கட்சியின் நாடாளுமன்றக்

டவை. சாணக்கியன் கட்சியின் தலைமையால் அதிகாரபூர்வமாக நாடாளுமன்றக் குழுத்தலைவராக நியமிக்கப்படவில்லையோ என்ற சந்கேதத்தையும் இது ஏற்படுத்துகின்றது.

சிறீதரன் எம்.பி. தலைவர் பதவியிலிருந்து தாமாகவே வெளியேறினால் சாணக்கியனை தற்காலிகமாக அப்பதவிக்கு நியமிக்கலாமென கட்சி தற்காலிகமாக முடிவெடுத்ததாகவும் ஒரு தகவல் உண்டு. ஆனால் அது மறைக்கப்பட்டு, சாணக்கியனை அப்பதவிக்கு நியமித்து விட்டதாக சுமந்திரன் அறிவித்ததால் தான் இவரது ஆதரவாளர்கள் இனிப்புகள் வழங்கியும் பட்டாசு கொழுத்தியும் மகிழ்ச்சி தெரி

எம்.பி.யின் பெயரைக் குறிப்பிட்டே எழுதியிருந்தார்.

குறிப்பிட்ட தமிழரசு எம்.பி. முன்னர் ராஜபக்சக்களின் அரசியல் அணியில் ஒருவராகச் செயற்பட்டவர் என்றும், இப்போது அதே ராஜபக்ச அணியைச் சேர்ந்த தயாசிறி ஜெயசேகரவுடன் இவர் வைத்திருக்கும் தொடர்பின் வெளிப்பாடாகவே சிறீதரன் மீதான தாக்குதல் இடம் பெற்றுள்ளது என்றும் தெரிகிறது. எனவே, கட்சியின் கட்டுப்பாட்டை மீறி கட்சிக்கே அவமானத்தை ஏற்படுத்தியிருக்கும் அந்த எம்.பி. மீது இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வியும் கிழக்கு மாகாணத்திலிருந்தே வந்துள்ளது.

இறுதியாக இன்னொரு முக்கிய விடயம். ஜனவரி மாதம் 30ம் திகதியிட்ட கடிதம் ஒன்றை நாடாளுமன்ற சபாநாயகருக்கு தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் பதில் செயலாளர் சுமந்திரனும் ஒப்பமிட்டு அனுப்பியிருந்தனர். கட்சியின் நாடாளுமன்ற குழுத்தலைவர் பதவியிலிருந்து சிவஞானம் சிறீதரனை நீக்க தங்கள் கட்சி முடிவெடுத்துள்ளதாக இக்கடிதத்தில் இவர்கள் குறிப்பிட்டிருந்தனர். பதவி நீக்கம் செய்ய முடிவெடுத்தி

**கட்டுரையாளர்:-**
**பனங்காட்டான்**

ருப்பதாக குறிப்பிடப்பட்டதே தவிர பதவி நீக்கப்பட்டதாக இக்கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை.

2024 நவம்பர் பொதுத்தேர்தலையடுத்து தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி தங்களின் தலைவராக சிவஞானம் சிறீதரனை தெரிவு செய்தனர். அவ்வேளையில் தமிழரசுக் கட்சி தலைமைப்பீடம் சிவஞானம் சிறீதரனின் நியமனம் தொடர்பாக சபாநாயகருக்கு எந்தக் கடிதமும் அனுப்பவில்லை. சிறீதரனின் பதவி நியமனம் நாடாளுமன்ற குழுவுடன் சம்பந்தப்பட்டது என்பதால் அது தொடர்பாகக் கடிதம் எழுதும் தேவை கட்சியின் தலைமைப்பீடத்துக்கு இருக்கவில்லை அல்லது பொருந்தாதது என்பதே இதன் கருத்து.

சிங்கள இனவாதிகளுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை.

விடுதலைப் புலிகளுக்கும் வெளிநாடுகளில் வாழ்பவர்களுக்கும் (தமிழர்கள்) அநுர குமர அரசு அடி பணிந்து படைத்துறையினரின் வீரதீரங்களை காட்டவில்லையென முன்னாள் கடற்படை அதிகாரி சரத் வீரசேகர கூச்சல் போடுகிறார். விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை ராஜபக்சக்கள் ஒழித்துக் கட்டிய வீரத்தை அநுர குமர அரசு மூடிமறைத்து விட்டது என்று நாமல் பேபி ஒப்பாரி வைத்துள்ளார். விடுதலைப் புலிகளை அழிப்பது என்ற பெயரில் ஆயிரமாயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டது, காணாமலாக்கப்பட்டது, சிறையிலடைக்கப்பட்டது எவ்வகையானது என்பதை அநுர குமரவின் ஜே.வி.பி.யினரும் அனுபவத்தில் கண்டவர்கள் என்பதை நாமல் பேபி அறிந்திருக்கவில்லை போலும்.

எங்கு அடிபட்டாலும் நாய் காலைத் தூக்கிக் கொண்டு ஊளையிடுவது போல இந்த இனவாதிகளின் வாழ்க்கை இப்படித்தான் கக்கிக் கொண்டிருக்கும். ஒரு வகையில் பார்க்கின் இவர்களுக்கு இன்னமும் புலிப்பயம் இருப்பது போல தெரிகிறது. ஆண்டாண்டு தோறும் இவர்கள் இனவாதத்தையே தங்களுக்கான ஆயுதமாக காவித்திரியப் போவது தெரிகிறது.

இது ஒருபுறமிருக்க தற்போது நாற்றமெடுத்து வரும் தமிழர் தாயக அரசியலை கவனிக்க வேண்டியது அவசியமானது. முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை கொழும்பிலிருந்து இறக்குமதி செய்ததால் வட மாகாண சபை தமிழரசின் உட்கட்சி மோதலில் முடக்கம் கண்டது போல, கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இன்னொருவரான சுமந்திரனால்

குழுவின் புதிய தலைவராக சாணக்கியனை நியமித்திருப்பதாக சுமந்திரன் சில நாட்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

தமிழரசுக் கட்சிக்குள்ளிருக்கும் பல குழுக்களில் எந்தக் குழுவுக்கு இந்த நியமன அதிகாரம் உள்ளது என்று கட்சிக்காரர்களுக்கே தெரியவில்லை. மட்டக்களப்பில் சிறீநேசன் எம்.பி. பகிரங்கமாகத் தெரிவித்துள்ள கருத்து இதனை நிரூபிக்கிறது. சிறீதரனை இப்பதவியிலிருந்து நீக்குவதற்கு கால அவகாசம் வழங்குவதென்றும், அதன் பின்னர் சாணக்கியனை தற்காலிகமாக இப்பதவிக்கு நியமிக்கலாமெனவும் சிலர் கண்ட கனவு நடைமுறைக்கு வந்துள்ளதாக சொல்கின்றனர்.

சாணக்கியனை கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவராக நியமித்திருப்பதாக சுமந்திரனே அறிவித்திருந்தார். அடுத்த சில மணித்தியாலங்களில் சுமந்திரனின் வடமராட்சித் தொகுதியில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒரு சிலர் பெதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். உடனடியாக கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஓர் அறிக்கையை கட்சியின் பல மட்டங்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்களுக்கும் அனுப்பியிருந்தார்.

'இது ஆர்வக் கோளாறு என்றாலும் கட்சியின் நலனுக்கும் ஒற்றுமைக்கும் குந்தகமானது. இவை கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். கட்சியின் தலைமை நிலைக்கு இது முரணானதும் கூட' என்று திரு.சி.வி.கே.சிவஞானத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அறிக்கையின் இறுதிப் பகுதியில், தலைமை நிலைக்கு இது முரணானதும் கூட என்று குறிப்பிடப்பட்ட வரிகள் ஆழமான அர்த்தம் கொண்

விக்கும் நிலைமை உருவாகியது.

சுமந்திரன் தன்னிச்சையாக ஊடகங்களுக்குத் தெரிவிக்கும் கருத்துகள் கட்சித் தலைமைக்குள்ளேயே அபிப்பிராய பேதங்களை உருவாக்கி வருகிறது. கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் பாம்புக்கு பால்



வார்க்க வேண்டாமென்று நேரடியாகவே குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு விடயம் விசம்போல பரவி வருகிறது. மகிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுன எம்.பி.யான தயாசிறி ஜெயசேகர நாடாளுமன்றத்தில் சிறீதரன் மீது வசைபாடிய வரலாறு பிரசித்தமானது. இதற்குத் தேவையான விடயதானங்களை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பைச் சேர்ந்த எம்.பி. ஒருவரே வழங்கியிருந்தாரென கடந்த வாரம் இப்பத்தியில் நான் குறிப்பிட்டிருந்தேன். மற்றொரு அரசியல் விமர்சகர் தாம் எழுதும் வாரப்பத்தியில் அந்த

அப்படியானால் சிறீதரனின் பதவி நீக்க முடிவை நாடாளுமன்றக் குழுவே எடுத்திருக்க வேண்டும். இதன்படி பார்க்கின், சிறீதரனை பதவி நீக்கம் செய்த கடிதத்தை சபாநாயகருக்கு தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடத்தினர் எழுத்து மூலம் அறிவித்திருப்பது முன்னுக்குப்பின் முரணானது. சட்டச் சிக்கலுக்குள் இது இழுத்துச் சென்றிருப்பதாகவும் பார்க்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட சட்டவாளர்கள் சிலர் இதனை பரிசீலனைக்கு உட்படுத்தி வருவதாக கிளிநொச்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனைக்கும் அடி சறுக்குமாம்!

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


07 பெப்ரவரி 2026 முதல் 13 பெப்ரவரி 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### Dr இரத்தினவடிவேல் மயில்வாகனம்

மலர்வு:- 02.04.1927 உதிர்வு:-22.02.2012

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டு சிவபதம் அடைந்த அமரர் டாக்டர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களின் 14வது ஆண்டு நினைவு நாள் 18 பெப்ரவரி 2026 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ.சலி



### திருமதி தவேந்திரராணி தேவரத்தினம்

யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களது 13வது ஆண்டு நினைவுநாள் 26 ஜனவரி 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக் கின்றார்கள். “நல்லதை நினை நடப்பது நடக்கும்”

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பொன்னையா தம்பையா

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகக் கொண்டிருந்த திரு பொன்னையா தம்பையா அவர்களது 14வது ஆண்டு நினைவு நாள் 10 பெப்ரவரி 2026 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பொன்னையா தம்பையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஹீதரன் கிருஷ்ணவேணி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணவேணி ஹீதரன் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 16 பெப்ரவரி 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி கிருஷ்ணவேணி ஹீதரன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கரெத்தினம் நல்லதம்பி

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கரெத்தினம் நல்லதம்பி அவர்களது 14வது ஆண்டு நினைவு நாள் 01 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தங்கரெத்தினம் நல்லதம்பி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி பிரசாந்தி அருச்சுனன்

வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடா Northyorkஐ வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களது நான்காவது ஆண்டுத் திதி நினைவு நாள் 31 ஜனவரி 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




25 ஜனவரி 2026 ஞாயிற்றுக் கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




26 ஜனவரி 2026 திங்கட்டிழமை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தபேந்திரராணி தேவரெத்தினம் அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




27 ஜனவரி 2026 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி வசந்தகுமார் ராஜவினோதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் சஞ்சயன் வசந்தகுமாரின் 25வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சஞ்சயன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




29 ஜனவரி 2026 வியாழக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 18வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




31 ஜனவரி 2026 ஞாயிற்றுக்கிழமை வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடா Northyorkஐ வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமை இணுவிலைச் சேர்ந்த திருமதி தங்கரெத்தினம் நல்லதம்பி அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலாம்பிகை கந்தையா அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலாம்பிகை கந்தையா அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி பராசக்தி தர்மலிங்கம் அவர்களது 72வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திருமதி பராசக்தி தர்மலிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




02 பெப்ரவரி 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கஜேந்திரா ஜெய்குமாரி இணையர்களின் செல்வப்புதல்வன் ஹரிஸின் 15வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன ஹரிஸ் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




08 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




10 பெப்ரவரி 2026 செவ்வாய்க்கிழமை கனடாவில் வாழும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கோகுலன் நந்தகுமாரின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கோகுலன் தனது பெற்றோர்களுடனும் சகோதரத்துடனும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




02 பெப்ரவரி 2026 திங்கட்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஸ்ரீபதி ஞானாம்பிகை அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 பெப்ரவரி 2026 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பொன்னையா தம்பையா அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 பெப்ரவரி 2026 புதன்கிழமை காங்கேசன்துறையைச் சேர்ந்த திரு சிவநேசன் துரைச்சாமி அவர்களது 42வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# காணாமல் போகும் கியூபா?

எண்ணெய் விநியோகம் தடைப்பட்ட தன் விளைவு கியூபாவில் தற்போதே தெரியத் தொடங்கி விட்டது. சில இடங்களில் 20 மணித்தியாலம் வரையான மின்வெட்டு உள்ளதாகச் சொல்லப் படுகின்றது. மருத்துவ சேவைகள் சீர்குலையத் தொடங்கியுள்ள நிலையில் மருத்துவமனைகள் நோயாளிகளால் நிரம்பி வழிகின்றன. எரிபொருள் பற்றாக்குறை காரணமாக கழிவகற்றும் வாகனங்கள் சேவையில் ஈடுபடாத நிலையில், தெருக்களில் குப்பைகள் குவியத் தொடங்கி உள்ளன.

சோசலிசக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் வெனிசுவேலா மீது அதிரடித் தாக்குதல்களை நடத்தி, அந்த நாட்டின் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ மற்றும் அவரது இணையர் ஆகியோரைக் கடத்தி வந்து அமெரிக்காவில் சிறை வைத்துள்ள ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தனது அடுத்த ஆட்டத்தை பொதுவுடமை நாடான கியூபா மீது நடத்துவதற்குத் தயாராகி விட்டதைப் பார்க்க முடிகின்றது. 65 ஆண்டுகளுக்கும் மேலாக அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடை உட்பட பல தடைகளை விதித்து, அந்த நாட்டை வழிக்கு கொண்டு வர தொடர்ச்சியாக அமெரிக்காவின் ஜனாதிபதிகளாகப் பதவி வகித்த பலரும் மறைமுகமாக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த போதிலும், நீண்ட காலத்திற்குப் பின்னர் முதல் தடவையாக நேரடி மோதலில் இறங்கியுள்ளார் ட்ரம்ப்.

கியூபாவுக்கான எரிபொருள் தேவைகளுக்கான எண்ணெய் ஏற்றுமதியைத் தடை செய்வதன் மூலம் அந்த நாட்டின் ஆட்சியாளர்களைப் பணிய வைப்பதே ட்ரம்பின் இலக்காக உள்ளது. பிராந்தியத்தில் அதிகரித்து வரும் தனது போட்டியாளரான சீனாவின் செல்வாக்கைக் குறைத்து விட இதன் மூலம் அவர் முயல்வது போலத் தெரிகிறது. தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர் பல்வேறு சொல்லாடல்களைக் கையாள்கிறார், நிபந்தனைகளை விதிக்கிறார், அச்சுறுத்தல்களை விடுக்கிறார்.

அமெரிக்காவின் தெற்கே கரீபியன் பிராந்தியத்தில் உள்ள ஒரு சின்னஞ் சிறிய தீவான கியூபா 1959 ஜனவரி 1 முதல் பிடல் கஸ்ட்ரோ தலைமையிலும் பின்னர் அவரின் சகோதரர் ரவுல் ஙஸ்ட்ரோ தலைமையிலும் தன்னை ஒரு பொதுவுடமை நாடாக நிலை நிறுத்திக் கொண்டது. வரலாற்றில் மறக்க முடியாத தலைவராக பிடல் கஸ்ட்ரோவும், அவரது சகாவான உலகப் புரட்சியாளர் சேகுவேராவும் இன்று வரை உலகப் புரட்சியாளர்களாலும், பொதுவுடமைத் தத்துவத்தைப் பின்பற்றுவோராலும் மதிக்கப்பட்டும் போற்றப்பட்டும் வருகின்றமையை நாம் நன்கு அறிவோம்.

பனிப்போர்க் காலத்தில் உலகின் பல நாடுகளுக்கும் தனது படைகளை, படைக் கலங்களை, ஆலோசகர்களை அனுப்பி வைத்து அந்த நாடுகளின் சுதந்திரப் போராட்டங்களுக்கும், வர்க்கப் போராட்டங்களுக்கும் ஆதரவு தந்த நாடு கியூபா. உலகின் அண்மைய வரலாற்றில் மிகவும் நெருக்கடியான கால கட்டமாக அறியப்பட்ட கொரோனா பேரிடர் காலகட்டத்தில் தனது மருத்துவர்களை உலக நாடுகளுக்கு அனுப்பி வைத்து பெருமை தேடிக் கொண்டது அந்த நாடு. உலகின் எந்தவொரு நாட்டில் அடக்குமுறை நிலவினாலும் அந்த நாடுகளின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொது வெளியிலும், உலக மன்றங்களிலும் ஆதரவுக் குரல் எழுப்பும் நாடுகளுள் முதன்மையானது கியூபா. 70களின் நடுப்பகுதியில் உருவான அணிசேரா நாடுகள் அமைப்பில் தன்னை



இணைத்துக் கொண்டு, அந்த அமைப்பில் முதன்மைப் பாத்திரம் ஏற்று உலகுக்கு வழி காட்டியது அந்த நாடு.

ஒரு கோடி மக்கள் தொகையைக் கொண்ட கியூப நாட்டின் பிரதான வருவாயை கரும்பு உற்பத்திப் பொருட்களே வழங்குகின்றன. தொடர்ச்சியான பொருளாதாரத் தடைகளைச் சந்தித்துவரும் கியூபா, தனது எரிபொருள் தேவைகளுக்காக பெரிதும் வெளிநாடுகளிலேயே தங்கியிருக்கின்றது. குறிப்பாக, மதுரோ தலைமையிலான வெனிசுவேலா கடந்த வருடம் டிசம்பர் வரை கியூபாவின் எரிபொருள் தேவையை பெரிதும் பூர்த்தி செய்து வந்தது. அதே வரிசையில் மெக்சிகோ மற்றும் ரஷ்யா ஆகியனவும் எரிபொருள் விநியோகத்தில் ஈடுபட்டு வந்தன.

வெனிசுவேலாவில் அதிகார மாற்றத்தைக் கொண்டு வந்த ட்ரம்ப், கியூபாவுக்கான எரிபொருள் விநியோகத்தைத் துண்டித்துள்ளதுடன், கியூபாவுக்கான எரிபொருள் விநியோகத்தைத் நிறுத்திக் கொள்ளுமாறு மெக்ஸிகோ உள்ளிட்ட நாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இந்த அச்சுறுத்தலுக்கு மெக்ஸிகோ அரசும் பணிந்து போயுள்ளமையைப் பார்க்க முடிகின்றது.

கியூபாவைப் பொறுத்தவரை அந்த நாட்டிற்கு நாளொன்றுக்கு 110.000 முதல் 112.000 பீப்பாய் எண்ணெய் தேவைப்படுகின்றது. இதில் 40.000 பீப்பாய் சொந்த நாட்டில் உற்பத்தியாகிறது. கியூபாவுக்குத் தேவையான எண்ணெயின் பெரும் பகுதி வெனிசுவேலாவில் இருந்தே கிடைத்து வந்தது. தினமொன்றுக்கு 100.000 பீப்பாவாக இருந்த இந்த வரவு கடந்த வருட இறுதியில் 30.000 பீப்பாவாகக் குறைந்து போனது. மதுரோ கடத்திச் செல்லப்பட்டதன் பின்னான சூழலில் இந்த விநியோகம் தற்போது முற்றாகத் தடைப்பட்டு விட்டது.

அமெரிக்காவின் அயல் நாடான மெக்ஸிகோ தினமும் 22.000 பீப்பாய் எண்ணெயை வழங்கி வந்தது. கடந்த வருடம் செப்டெம்பரில் அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் மார்கோ ரூபியோ மெக்ஸிகோ சென்று நடத்திய பேச்சுகளைத் தொடர்ந்து இந்த எண்ணிக்கை 7.000 பீப்பாய்களாக வீழ்ச்சி கண்டது. புதிய வருடத்தில் ஜனவரி மாதத்தில் மெக்ஸிக்கோவில் இருந்து கிடைத்த எண்ணெய் வெறும் 84.900 பீப்பாய்கள் மாத்திரமே. தற்போது இதுவும் நின்று போனது. கியூபாவுக்கு எண்ணெய் வழங்கும் மற்றொரு நாடான ரஷ்யா நாளொன்றுக்கு 6.000 பீப்பாய் எண்ணெயையே வழங்கி வருகின்றது. இந்த விநியோகம் தற்போதைய நிலையில் தொடருமா அல்லது ஏனைய நாடுகளைப் போன்று ரஷ்யாவும் அமெரிக்க அழுத்தத்துக்கு அடி பணியுமா என்ற கேள்வி எழுகின்றது.

எண்ணெய் விநியோகம் தடைப்பட்டதன் விளைவு கியூபாவில் தற்போதே தெரியத் தொடங்கி விட்டது. மின்சார உற்பத்திக்கான எரிபொருளாக எண்ணெய் உள்ள நிலையில் தற்போது சில இடங்களில் 20 மணித்தியாலம் வரையான மின்வெட்டு உள்ளதாகச் சொல்லப்படுகின்றது. மருத்துவ சேவைகள் சீர்குலையத் தொடங்கியுள்ள நிலையில், மருத்துவமனைகள் நோயாளிகளால் நிரம்பி வழிகின்றன. நோய் காரணமாக ஏற்படும் மரணங்களால் பிணவறைகளில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எரிபொருள் பற்றாக்குறை காரணமாக கழிவகற்றும் வாகனங்கள் சேவையில் ஈடுபடாத நிலையில், தெருக்களில் குப்பைகள் குவியத் தொடங்கி உள்ளன. இதன் விளைவாக தொற்று நோய்கள் பரவத் தொடங்கியுள்ளன. ஹவானாவில் உள்ள மெக்ஸிகோ கம்யூனிச அரசாங்கத்தை அச்சுறுத்தி, நெருக்கடிக்கு உள்ளாக்கிப் பணிய வைப்பதே அமெரிக்காவின் உத்தியாக உள்ளது. பெருமைமிகு வீர வரலாறைக் கொண்ட கியூப மக்கள் நேரில் வரும் எதிரியை எதிர்த்துப் போராடும் வல்லமை மிக்கவர்கள் என்பதில் கருத்து பேதம் இருக்க முடியாது. ஆனால், நிழல் எதிரியோடு எவ்வாறு மோதுவது?

கியூபாவில் அடுத்து என்னவாகும் என்ற கேள்வி தற்போது கியூப மக்கள் மனதில் மாத்திரமன்றி, கியூபாவை நேசிக்கும் உலக மக்கள் மத்தியிலும் உள்ளது. இன்றைய உலக ஒழுங்கில் அமெரிக்காவை மீறி கியூப மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்ட சீனா, ரஷ்யா உள்ளிட்ட வல்லரசுகளால் கூட முடியாது என்பதே யதார்த்தம். உயிரைக் கொடுத்தேனும் இலட்சியத்தைக் காப்பதா இலட்சியத்தைத் துறந்தேனும் மக்களைக் காப்பதா என்ற கேள்வி தற்போதய கியூப (23ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இந்தியா நீட்டும் நிதி உதவி

ஒரு பக்கம் சீனாவின் நெருக்கடிகள் இருந்தாலும் இந்தியாவைச் சமாளிக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இருக்கிறது. ஏனென்றால், அயல்நாட்டுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இந்தியா பெருமளவில் உதவிகளை வழங்கி வந்திருக்கிறது.

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கடந்த ஞாயிற்றுக்கிழமை சமர்ப்பித்த இந்திய அரசாங்கத்தின் 2026 -27 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம், உள்நாட்டில் மக்களின் வரவேற்புக்குரிய ஒன்றாக அமைந்திருக்கவில்லை. ஆனால் இலங்கையை பொறுத்தவரையில் இந்த வரவுசெலவுத் திட்டம் வரவேற்புக்குரியதொன்றாக உள்ளது.

ஏனென்றால் இந்த வரவுசெலவு திட்டத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடாக, இலங்கைக்கு ஒதுக்கப்படும் நிதி அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டில், இலங்கைக்கு சுமார் 3 பில்லியன் இந்திய ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில், இந்த முறை 4 பில்லியன் இந்திய ரூபா அறிவிக்கப்பட்டுள்ளது. இது, கடந்த முறையை விட 33 சதவீதம் அதிகம்.

கடந்த 10 ஆண்டுகளில், இந்திய வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக, இலங்கைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அதிக பட்ச நிதி உதவி இது வாகும். ஆண்டுதோறும் இந்தியா, வெளிவிவகார அமைச்சின் ஊடாக, பல்வேறு நட்பு நாடுகளுக்கு நிதி உதவிகளை வழங்கி வருகிறது.

இந்த நிதி அந்த நாடுகளில் பல்வேறு திட்டங்களை செயற்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும். இந்தியா தனது பிராந்திய மற்றும் சர்வதேச அந்தஸ்தை தக்க வைத்துக் கொள்வதற்காக இந்த நிதியை செலவிடுகிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடாகவே இந்த நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டில் இந்திய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள வரவுசெலவுத் திட்டத்தில், இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு 221.19 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் கிட்டத்தட்ட 4 பில்லியன் ரூபா இலங்கைக்கு வழங்கப்பட திட்டமிடப்பட்டிருக்கிறது.

2017 -18 ஆம் ஆண்டு வரவுசெலவு திட்டத்தில் 1.25 பில்லியன் ரூபாவும், 2018- 19 வரவுசெலவுத் திட்டத்தில் 1.50 பில்லியன் ரூபாவும், 2019- 20 வரவுசெலவுத் திட்டத்தில் 2.5 பில்லியன் ரூபாவும், இலங்கைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் பின்னர் 2020-21 தொடக்கம் 2022-23 வரையான மூன்று ஆண்டுகளும், தலா 2 பில்லியன் ரூபாவை இந்தியா ஒதுக்கியது.

2023 -24 ஆம் ஆண்டு இந்த தொகை 1.5 பில்லியன் ரூபாயாக குறைக்கப் பட்டது. 2022ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து, இந்தியா 4 பில்லியன் டொலர்களை இலங்கைக்கு உதவியாக வழங்கியது. அதன் தொடர்ச்சியாக 2023 -24 இல், இலங்கைக்கான நிதி ஒதுக்கீடு 0.5 பில்லியன் ரூபாவினால் குறைக்கப்பட்டது.

எனினும், பொருளாதார நெருக்கடிக்கு பின்னரான மீட்புக் காலகட்டத்தில் 2024- 25 காலப்பகுதியில் 3.17 பில்லியன் ரூபாவை வழங்கிய இந்தியா, 2025-26 காலப் பகுதிக்கு 2.45 பில்லியன் ரூபாவை உதவியாக அறிவித்த போதும் பின்னர் 3 பில்லியன் ரூபாவாக அதிகரித்தது. இப்போது அதில் இருந்து 33 சதவீதம் அதிகரிக்கப்பட்டு 4 பில்லியன் ரூபா நிதி உதவி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் இந்த நடவடிக்கை அயல் நாட்டுக்கு முன்னுரிமை என்ற கொள்கையின் அடிப்படையிலானது என்று இந்திய அரசாங்கம் கூறியிருக்கிறது. அதேவேளை, நேபாளத்துக்கான நிதி ஒதுக்கீடு இலங்கையை போலவே, ஒரு பில்லியன் ரூபாவினால் அதிகரிக்கப் பட்டுள்ளது. அந்த நாட்டுக்கு 8 பில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது. மாலைதீவுக்கான நிதியொதுக்கீடு 0.5 பில்லியன் ரூபாவினால் குறைக்கப்படுகிறது.

அதேபோல, பங்களாதேஷுக்கான நிதி பாதியாக குறைக்கப்பட்டு வெறும், 0.6 பில்லியன் ரூபா மாத்திரமே ஒதுக்கப் பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர்களுடன் இந்தியா உறவுகளை வலுப்படுத்த ஆரம்பித்துள்ள சூழலில் கடந்த ஆண்டு ஒதுக்கிய ஒரு பில்லியன் ரூபாவை இம்முறை 1.5 பில்லியன் ரூபாவாக உயர்த்தியிருக்கிறது.

இந்த நிதி ஒதுக்கீடுகள் இந்தியாவுடன் ஒத்துழைக்கின்ற நாடுகளுக்கு அதிக




நிதி உதவிகளை வழங்குவதற்கு அது தயாராக இருக்கிறது என்பது வெளிப் படையாகியுள்ளது.

இந்தியா, இலங்கை, நேபாளம், பூட்டான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் அவ்வாறான நிலையில் உள்ளன. அதே வேளை, இந்தியாவுடன் முரண்

போக்கை கடைப்பிடிக்கின்ற பங்களாதேஷ் மற்றும் மியான்மாருக்கு நிதியுதவிகளை குறைத்திருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் அண்மைய பேரிடருக்கு பின்னர் இந்தியா 450 மில்லியன் டொலர் உதவிப் பொதியை அறிவித்தது. அதில் 100 மில்லியன் டொலர் கொடையாக வழங்கப்படும் என இந்தியா கூறியுள்ளது.

இந்த இந்த நிதியுதவி திட்டம் எவ்வாறு செயற்படுத்தப்படவுள்ளது என்பது தொடர்பாக இன்னமும் தெளிவான தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை. ஆனால் இந்தியா இதனை ஒரு தலைப்பட்சமாக ஏற்கனவே செயற்படுத்த ஆரம்பித்து விட்டது.

பேரிடர் நிகழ்ந்தவுடன் இந்தியா அவசரமாக விமானங்கள் மூலம், பெய்லி பாலங்களை அனுப்பி வைத்தது. அவற்றை பொருத்துவதற்கு இந்திய இராணுவத்தின் பொறியியல் படைப்பிரிவைச் சேர்ந்த 45 படையினரையும், இலங்கைக்கு அனுப்பியது.

அது ஒரு தந்திரோபாய நடவடிக்கை. பிற நாடுகள் இலங்கையில் பேரிடர் மீட்பு மற்றும் மீள்கட்டமைப்பு பணிகளில் ஈடுபடுவதை தடுக்கும் நோக்கில், இந்தியா எடுத்த நடவடிக்கை அது. இந்தியா 450 மில்லியன் டொலரை உதவியாக அறிவித்த பின்னர், 15 பாலங்களை அமைப்பதற்கு இந்தியா முன்வந்துள்ளது.

அந்த 15 பாலங்களை பொருத்துகின்ற பணிகளில் இந்திய இராணுவ அணிகள் தற்போதும் ஈடுபட்டு வருகின்றன. இந்த திட்டத்தை இந்தியா பாதுகாப்பு நோக்கிலும் செயற்படுத்துகிறது.

இந்திய இராணுவ அணி திருப்பி அழைக்கப்பட்டால் மீண்டும் அனுப்பி வைக்க முடியாது. ஏற்கெனவே வந்த இராணுவ அணியை தொடர்ந்து தங்க வைத்திருக்க முடியும். அதனால் 15 பாலங்களை பொருத்துகின்ற பணியை அதே இராணுவ அணியைக் கொண்டே இந்தியா முன்னெடுக்கின்றது.

விமானம் மூலம் அனுப்பப்பட்ட 5 பாலங்கள் தவிர, எஞ்சிய பத்து பாலங்கள் இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் காரியல் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

விசாகப்பட்டினத்தில் இருந்து 10 பாலங்களை ஏற்றிய இந்திய கடற்படை கப்பல், கடந்த 31ஆம் திகதி புறப்பட்டது. இந்தப் பாலங்களை அமைக்கும் திட்டத்தை தனது 450 மில்லியன் உதவித் திட்டத்துக்குள் கொண்டு வந்ததன் மூலமாக, இந்தியா ஒரு தலைப்பட்சமாக அதனை செயற்படுத்த தொடங்கி விட்டது. ஆனால், இலங்கை அரசாங்கம், இந்தத் திட்டத்தை பெற்றுக் கொள்வதற்கு இன்னமும் முழுமையான இணக்கப்பாட்டை வெளியிடவில்லை.

ஏனென்றால், இந்தத் திட்டத்தில் இந்தியா தான் நேரடியாக பங்கு பெற விரும்புகிறது. திட்டத்திற்கான நிதியை முழுமையாக அரசாங்கத்திடம் கொடுப்பதற்கு அது தயாராக இல்லை.



இந்திய இராணுவத்தினர் பாலங்களை புனரமைக்கும் பணிகளை இன்றுவரை முன்னெடுப்பதற்கான அடிப்படைக் காரணமும் இதுதான். மீளமைப்பு திட்டங்களில் இந்தியா நேரடியாக பங்கேற்பதை விரும்புகின்ற அதே வேளை அதற்கு இலங்கை அரசாங்கம் பெரிதாக விருப்பம் தெரிவிக்கவில்லை.

ஆனாலும், தவிர்க்க முடியாதபடி இந்தியாவின் நிகழ்ச்சி நிரலுக்குள் தற்போதைய அரசாங்கம் சிக்கியிருக்கிறது. ஒரு பக்கம் சீனாவின் நெருக்கடிகள் இருந்தாலும் இந்தியாவைச் சமாளிக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இருக்கிறது.

ஏனென்றால், அயல்நாட்டுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இந்தியா பெருமளவில் உதவிகளை வழங்கி வந்திருக்கிறது. அதனை இலங்கையினால் தட்டிக் கழிக்க முடியாது. அதனை விட்டு விலகிச் செல்ல முனைந்தால் இலங்கைக்கு ஆபத்து ஏற்படும்.

**கட்டுரையாளர்:**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



எனவே, இந்தியாவை எப்படியாவது அரவணைக்க வேண்டிய நிலையில் அரசாங்கம் இருக்கிறது. ஆனால், அது அதிகளவில் சுமையாக மாறுவதை அரசாங்கம் தவிர்க்க பார்க்கிறது.

அதனால் தான் இந்தியாவுடன் இணைந்து மீள்கட்டமைப்பு பணிகளை முன்னெடுப்பதற்கு அது தயங்குகிறது.

இந்த இழுபறியால் தான் 450 மில்லியன் டொலர் நிதியுதவியை பயன்படுத்துகின்ற திட்டத்தை உருவாக்குவதில், இழுபறிகள் ஏற்பட்டிருக்கின்றன. எவ்வாறாயினும் இந்த விடயத்தில் இணக்கப்பாடு ஏற்பட்டேயாக வேண்டும்.


ஏனென்றால், இந்தியா மட்டும் தான் இலங்கைக்கு மீளமைப்புக்காக பெருமளவில் நிதியதவியை அறிவித்திருக்கின்ற ஒரே நாடு.

இதனை தட்டிக் கழிக்கவோ நிராகரிக்கவோ முடியாது. சீனா கூட இதுவரையில் வாயை திறக்காமல் இருக்கிறது.

அரசாங்கம் அதனால் தான் கொடையாளர் நாடுகளின் கூட்டத்தை கூட அறிவிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில், இலங்கையை மேலும் தன் பிடிக்குள் கொண்டு வருவதற்காகவே, இந்தியா கூடுதல் நிதியை ஒதுக்கியிருக்கிறது.

இதன் ஊடாக இலங்கையை மேலும் வளைத்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை இந்தியா புரிந்து கொண்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. அதற்கான சாத்தியங்கள் இல்லையென்றால் பங்களாதேஷை போல நிதி ஒதுக்கீட்டை குறைத்திருக்கும்

# எப்ஸ்டீன் சிஸ்டம்:- சிறப்பு பார்வை
# அதிகாரத்தின் நிர்வாணக் கோலம்!



பணம் இருந்தால் எதையும் வாங்கலாம், அதிகாரம் இருந்தால் எப்பேர்ப்பட்ட குற்றத்தையும் மறைக்கலாம் என்று நினைக்கும் ஒரு கும்பலின் முகத்திரையைக் கிழிக்கும் ஆவணங்கள் தான் இன்றைய உலகையே அதிரச் செய்து கொண்டிருக்கும் எப்ஸ்டீன் கோப்புகள்.

ஒரு சாதாரணக் கணித ஆசிரியராகத் தொடங்கி உலக வல்லரசு நாடுகளின் தலைவர்கள் பெரும் கோடீஸ்வரர்கள் மற்றும் அரச வம்சத்தினரைத் தனது விரல் நுனியில் ஆட்டிப்படைத்த ஜெஃப்ரி எப்ஸ்டீன் எனும் மர்ம மனிதனின் பின்னணி என்ன?

பிரித்தானிய இளவரசர் ஆண்ட்ரூவின் பட்டங்களைப் பறிக்க வைத்தது முதல், அமெரிக்காவின் முன்னாள், இன்னாள் அதிபர்கள் வரை பலரது பெயர்களைப் பதற வைத்துக் கொண்டிருக்கும் அந்த 30 லட்சம் பக்கங்கள் சொல்லும் ரகசியங்கள் என்ன? சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்திப் பிஞ்சுயிர்களைச் சிதைத்த அந்தப் 'பீடோபைல் தீவு' (Pedophile Island) கொடூரங்கள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

அதிகாரத்தின் உச்சத்தில் இருப்பவர்கள் செய்த அநீதிகளையும், மறைக்கப்பட்ட உண்மைகளையும் தோலுரித்துக் காட்டுகிறது இந்தச் சிறப்புப் பதிவு

தவறு யார் செய்தாலும் தண்டிக்கும் பிரித்தானியா நூற்றாண்டு காலப் பாரம்பரியமும், கண்ணியமும் கொண்ட பிரித்தானிய அரச குடும்பத்தில், ஒரு தனி நபர் செய்த தவறால் இன்று அந்தப் பெயருக்கே ஒரு கறை படிந்திருக்கிறது! அந்த வம்சத்தின் ஒரு வாரிசு, ஒரு தகாத ஒருவரோடு நட்பு வைத்ததால் இன்று அந்தப் பரம்பரையின் கௌரவமான பொறுப்புகளில் இருந்தே அவர் தூக்கி எறியப்பட்டிருக்கிறார். இதற்கு ஒரே ஒரு பெயர் தான் காரணம்... அது ஜெஃப்ரி எப்ஸ்டீன் எனும் சர்ச்சைக்குரிய நபர்!

டிசம்பர் 2010ல் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மூன்றாவது மகனான இளவரசர் ஆண்ட்ரூ, நியூயார்க்கின் சென்ட்ரல் பார்க் பகுதியில் இந்த கொடூரன் எப்ஸ்டீனுடன் இருக்கும் புகைப்படம் வெளியாகி உலகையே அதிர வைத்தது. 2019ல் பிபிசி நேர்காணலில், அந்த நட்பை முறிக்கத் தான் நான் அங்கு சென்றேன் என்று ஆண்ட்ரூ தெரிவித்த போதிலும், 2011ன் ரகசிய மின்னஞ்சல்கள் அவர் சொன்னது பொய் என்பதை நிரூபித்தன!

விளைவு? தவறு செய்தவர் இளவரசராக இருந்தாலும் சட்டம் தன் கடமையைச் செய்தது! 2025ல் ஆண்ட்ரூவின் அரச பட்டங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டன. நூற்றாண்டு காலப் பாரம்பரியம் கொண்ட ஒரு சாம்ராஜ்யத்தின் கிரீடத்தையே குழி தோண்டிப் புதைத்தது இந்த எப்ஸ்டீன் சிஸ்டம்!

### ஆசிரியர் முதல் கோடீஸ்வரன் வரை அந்த மர்ம வளர்ச்சி

இன்று நாம் பார்க்கப் போவது ஒரு தனி மனிதனைப் பற்றிய கதையல்ல... அதிகாரத்தின் இருண்ட பக்கம். செல்வம் இருந்தால் எதையும் மறைக்கலாம் என்று நினைத்தவர்களின் முகமூடியைக் கிழித்தெறிந்த 'எப்ஸ்டீன் கோப்புகள் பற்றிய ஒரு அலசல் தான். 1970களில் ஒரு சாதாரணக் கணித ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய எப்ஸ்டீன், தனது தந்திரத்தால் வால் ஸ்ட்ரீட் வங்கியாளர்களை வளைத்துப் போட்டார். ஒரு மாணவனின் தந்தை மூலம் 'பியர் ஸ்டியர்ன்ஸ்' வங்கிக்குள் நுழைந்த எப்ஸ்டீன், நான்கே ஆண்டுகளில் பங்குதாரராக உயர்ந்தார். 1982ல் தனது சொந்த நிறுவனத்தைத் தொடங்கி 1 பில்லியன் டாலர் சொத்துக்களை நிர்வகிக்கும் அளவுக்கு வளர்ந்தார். அதன் பிறகு அவர் சேர்த்த செல்வம், அவரது காமவெறிக்கும் அதிகார ஆட்டத்திற்கும் எரிபொருளானது.

### 30 இலட்சம் பக்கங்கள் நடுங்கும் உலகத் தலைவர்கள்

ஜனவரி 30-ஆம் தேதி வெளியிடப்பட்ட அந்த ஆவணங்கள் உலகையே உலுக்கி வருகின்றன. சுமார் 30 லட்சம் பக்கங்கள், 2,000 வீடியோக்கள், 1.8 லட்சம் படங்கள்! இதில் பில் கிளிண்டன் முதல் டொனால்ட் டிரம்ப் வரை, பில் கேட்ஸ் முதல் எலான் மஸ்க் வரை எனப் பெரும் புள்ளிகளின் பெயர்கள் அடிபடுகின்றன.

லான் மஸ்க் தனது 'எக்ஸ்' பக்கத்தில் டிரம்ப் பெயர் இருப்பதைப் பதிவிட்டு விட்டு பின் அதை நீக்கியது பெரும் சர்ச்சையானது. 2002லேயே டிரம்ப், 'ஜெப் ஒரு அருமையான மனிதர், என்னைப் போலவே அவருக்கும் இளம் பெண்களைப் பிடிக்கும் என்று புகழ்ந்து தள்ளினார். ஆனால், விவகாரம் முற்றியவுடன், 'அவர் என் கிளப் பெண்களிடம் தவறாக நடந்ததால் விரட்டி விட்டேன் என்று மாற்றி பேசினார். இதற்கிடையே, இந்தியப் பிரதமர் மோடி, அம்பானி போன்றோரின் பெயர்களும் மின்னஞ்சல்களில் இடம் பெற்றுள்ளதாகக் கசிந்த செய்தியை இந்திய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது. எது எப்படியோ, இந்த ஆவணங்கள் அதிகார வர்க்கத்தின் உறக்கத்தைக் கலைத்துள்ளன என்பது தான் நிதர்சனம்.

இதனிடையே, இலங்கை என்ற பெயர் 188 இடங்களில் இடம் பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளது.

### அதிகாரத்தின் பலமும் வசதியான சிறைவாசமும்

2003லேயே பத்திரிகையாளர் விக்கி வார்டு இவனது மர்மங்களைக் கண்டு பிடித்தார். 1996ல் மரியா ஃபார்மர் என்ற பெண்ணும் அவரது 14 வயது தங்கையும் பாதிக்கப்பட்டதை வெளிப்படுத்த முயன்றார். ஆனால் எப்ஸ்டீன் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தச் செய்தியையே நசுக்கியுள்ளார்.

2005ல் 14 வயது சிறுமியின் பெற்றோர் புகார் அளித்தனர். 50க்கும் மேற்பட்ட சிறுமிகள் புகார் அளித்தும், 'நூற்றாண்டின் மிகப்பெரிய ரகசிய ஒப்பந்தம்' மூலம் இவருக்கு வெறும் 13 மாதங்கள் மட்டும் சிறைத் தண்டனை கிடைத்தது. அதுவும் எப்படி? வாரத்தில் ஆறு நாட்கள், ஒரு நாளைக்கு 12 மணி நேரம் தனது அலுவலகத்திற்குச் சென்று வர 'பணி நிமித்தமான விடுப்பு' வழங்கப்பட்டது! இது தான் அதிகாரத்தின் பலம்! இது தான் அநீதியின் உச்சம்

### மர்மமான மரணம் தற்கொலையா? கொலையா?

பாதிக்கப்பட்ட வர்ஜீனியா ஜஜீஃப்ரேயின் நீண்ட சட்டப் போராட்டத்தால், நீதிபதி லோரெட்டா பிரெஸ்கா இந்த ரகசியங்களை வெளியிட உத்தரவிட்டார். ஆனால், 2019ல் மீண்டும் கைதான எப்ஸ்டீன், உண்மைகளைச் சொல்லப் போகும் நேரத்தில் மர்மமாக இறந்து கிடந்தார்.

காவலர்கள் தூங்கி விட்டார்கள். இது தற்கொலையா? இல்லை உண்மைகளைத் மறைக்க பெரிய இடத்து ஆட்கள் செய்த கொலையா? இன்னும் மர்மம் நீடிக்கிறது. அதனால் தான், இந்த வழக்கின் விசாரணையும் ஆதாரங்களும் இப்போது வெளிப்படையாக வெளியிடப்பட்டு வருகின்றன.

### கூட்டாளி கிஸ்லேன் மேக்ஸ்வெல் கொடுரனின் ஏஜென்ட்

இந்தக் காமக் கொடுரனின் வலது கையாக இருந்தவள் அவனது காதலி கிஸ்லேன் மேக்ஸ்வெல். உலகத் தலைவர்களையும் கோடீஸ்வரர்களையும் எப்ஸ்டீனுக்கு அறிமுகப்படுத்தியது இவர் தான். சிறுமிகளைப் பாலியல் சுரண்டலுக்காகக் கடத்திய குற்றத்திற்காக இன்று இவர் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். 17 வயதில் இளவரசர் ஆண்ட்ரூவால் பாதிக்கப்பட்டதாகக் கூறிய வர்ஜீனியா ஜஜீஃப்ரேயுடன், ஆண்ட்ரூ பல மில்லியன் டாலர்கள் கொடுத்து சமரசம் செய்து கொண்டது எதை உணர்த்துகிறது?

### சிஸ்டம் இன்னும் உயிரோடு தான்

இவர்களெல்லாம் அந்த 'பீடோபைல் தீவுக்கு' (Pedophile Island) ஏன் சென்றார்கள்? அங்கு நடந்த அசிங்கங்களில் இவர்களுக்குப் பங்கு என்ன? அதிகாரம் என்பது ஏழை மக்களைக் காக்கவா? அல்லது இதுபோல பிஞ்சுயிர்களைச் சிதைக்கும் காமவெறிக்குக் கேடயமாக இருக்கவா?

எப்ஸ்டீன் செத்து விட்டார். ஆனால் அவர் உருவாக்கிய அந்த 'எப்ஸ்டீன் சிஸ்டம்' இன்றும் உயிரோடு தான் இருக்கிறது. அதிகாரமும் பணமும் இருந்தால் எதையும் செய்யலாம் என்ற அந்தத் தைரியத்தை இந்த சிஸ்டம் இன்னும் கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறது.

இது ஏதோ அமெரிக்காவில் நடந்த கதை என்று கடந்து போகாதீர்கள். நமது சமூகத்திலும் அதிகார மிரட்டலுக்குப் பயந்து எத்தனை பிஞ்சுயிர்கள் மௌனமாக அழுகின்றனவோ? 'எப்ஸ்டீன் கோப்புகள்' வெறும் காகிதங்கள் அல்ல. அவை அதிகார வர்க்கத்தின் முகத்தில் பூசப்பட்ட கரி! நீதியைத் தற்காலிகமாகப் புதைக்கலாம், ஆனால் அது ஒருநாள் எரிமலையாக வெடிக்கும் என்பதற்கு எப்ஸ்டீன் கோப்புகளே சாட்சி!

எப்ஸ்டீன் செத்துட்டார். ஆனா எப்ஸ்டீன் சிஸ்டம் இன்னும் உயிரோட இருக்கு. அதை வேரோடு அழிக்க நாம் குரல் எழுப்ப வேண்டிய நேரம் இது!





# பஞ்சாமா தந்திரங்கள்?

கட்சிக்குள் சிரீதரனை மதிப்பிறக்கம் செய்வதில் சுமந்திரன் தொடர்ந்து முன்னேறி வருகிறார். முக்கால் நூற்றாண்டு கால வயதைக் கொண்ட கட்சிக்குள் முதன்முதலாக தலைவருக்காக நடந்த ஒரு தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தலைமைப் பொறுப்பை ஏற்க விடாமல் தடுக்கப்பட்டு வருகிறார். இரண்டு ஆண்டுகளாக தொடர்ச்சியான தந்திரமான புத்திசாலித்தனமான நகர்வுகளின் ஊடாக ஓரங்கட்டப்பட்டு வருகிறார்.

சிறீதரனை கட்சிக்குள் சுற்றிவளைக்கும் வேலையை கடந்த இரண்டு ஆண்டுகளாக சுமந்திரன் அணி செய்து வருகிறது.சிறீதரன் எவ்வாறு கட்சிக்குள் ஓரங்கட்டப்படுகிறார்?

75 ஆண்டு கால வயதை கொண்ட கட்சிக்குள் முதன் முதலாக நடந்த தலைவர் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர் செயற்பட முடியாதபடி வழக்குப் போடப்பட்டது. அடுத்ததாக கட்சிக்குள் தீர்மானம் எடுக்கும் பொறுப்புகளில் அவருக்கு எதிரானவர்கள் அல்லது அவருடைய எதிர் அணியின் பக்கம் சாயக்கூடியவர்கள் படிப்படியாக நகர்த்தப்பட்டார்கள். இதன் மூலம் கட்சித் தீர்மானங்கள் சிறீதரனை ஓரங்கட்டும் விதத்தில் அமைவது உறுதி செய்யப்பட்டது. அவ்வாறு பொறுப்பான பதவிகளை சிறீதரனின் எதிரணி கையில் எடுத்ததன்மூலம் கட்சியின் அடிமட்டக் கட்டமைப்பை படிப்படியாக சிறீதரனுக்கு எதிரானதாக வடிவமைக்கும் வேலைகள் தொடங்கின.

அடுத்ததாக சிறீதரனின் சொத்துக்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள்.அவர் மதுச் சாலை அனுமதி பெற்றுக் கொடுத்ததாகக் குற்றச் சாட்டுக்கள். இது தொடர்பான முறைப்பாடுகளைச் செய்வதற்கு தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் பயன்படுத்தப்படடார்.

அதேசமயம் கட்சித் தேர்தலிலும் நாடாளுமன்ற தேர்தலிலும் தோற்ற காரணத்தால் மீடியா வெளிச்சத்தில் இருந்து ஒதுக்கப்பட்டிருந்த சுமந்திரன் கட்சிக்குள் பொறுப்பான பதவியைப் பெற்றதன் மூலம் மீண்டும் ஊடகங்களுக்கு முன் அடிக்கடி தோன்றும் வாய்ப்புகள் அதிகரித்தன. யார் தூதரகங்களை நெருங்கிச் செல்வது குறிப்பாக யார் இந்தியாவின் இதயத்தில் இடம் பிடிப்பது என்பதிலும் போட்டி.

அரசியலமைப்புப் பேரவையில் சிறீதரன் அரசாங்கத்திற்கு ஆதரவாக 8 தடவைகள் வாக்களித்துள்ளார் என்ற குற்றச்சாட்டை கட்சிக்கு உள்ளேயும் கட்சிக்கு வெளியே பகிரங்கமாகவும் திரும்பத் திரும்ப கூறுவதன் மூலம் கட்சிக்குள் மட்டுமல்ல சமூகத்துக்குள்ளும் அவரை மதிப்பிறக்கம் செய்ய முயற்சிக்கப்பட்டது. அதை விட முக்கியமாக அவருடைய தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கேள்விக்கு உள்ளாக்க முயற்சிக்கப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டின் இறுதி விளைவாகத் தான் இப்பொழுது கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் பதவியில் கை வைக்கப்பட்டிருக்கிறது.

சிறீதரன் கட்சிக்குள் மட்டும் சுற்றி வழிக்கப்படவில்லை. நாடாளுமன்றத்திலும் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினராகிய தயாசிறீ கட்சியின் உள் மோதல்களைப் பிரதிபலித்தார். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள நீண்ட பாரம்பரியத்தை கொண்ட மூத்த கட்சி ஒன்றுக்குள் ஏற்பட்ட உள் முரண்பாட்டை ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் ஊடாகப் பேச வைத்தமை என்பது தமிழ்த் தேசிய வரலாற்றில் இதுதான் முதல் தடவை.

இவை தவிர சிறீதரனின் அணிக்குள் இருப்பவர்கள் கழட்டி எடுக்கப்படுகிறார்கள். அவர்கள் ஊடகச் சந்திப்புகளை நடத்தி சிறீதரனை அவமானப் படுத்துகிறார்கள்.

ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் வேலை செய்யும் உள்நாட்டு அலுவலர் என்னிடம் கேட்டார், ஹை புரொபைலில் இருப்பவர்கள் கூட சிறீதரனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளைப் பிரதிபலிப்பதாகத் தெரிகிறது.ஏன் இப்படி என்று.




சிறீதரனுக்கு எதிரான பிரசார அணிக்குள் பிரபலமானவர்கள் லோயர்கள், ஊடகவியலாளர்கள் அரசியல்வாதிகள் சமூகத்தில் நல்ல பொறுப்புகளை வகிப்பவர்கள், சமூகத்தில் மதிப்புக் கெட்டவர்கள், தாயகத்தில் இருப்பவர்கள், புலம் பெயர்ந்து வாழ்பவர் கள் என்று ஒரு பெரிய அணி இறக்கப்பட்டுள்ளது. மெய்யான முகநூல் கணக்குகள், பொய்யான முகநூல் கணக்குகள் என்று சமூக வலைத்தளங்களில் இரண்டு அணிகளும் பணம் செலுத்தி பிரச்சாரம் செய்து வருகின்றன என்ற பொதுவான அவதானிப்பு உண்டு.கடந்த இரண்டு ஆண்டுகளாக இவ்வாறு சிறீதரனுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான நடவடிக்கைகளைத் தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது.

சிறீதரனுக்கு எதிராக மிக நுட்பமான, மிகப் புத்திசாலித்தனமான மிகத் தந்திரமான சதி சூழ்ச்சிகள் நிறைந்த ஒரு வியூகம் வகுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் ஓர் உட்கட்சி முரண்பாட்டைக் கையாள்வதற்கு இவ்வளவு தந்திரமும் இவ்வளவு புத்திசாலித்தனமும் இதற்கு முன் பிரயோகிக்கப்பட்டதில்லை.

இதேயளவு தந்திரத்தை புத்திசாலித்தனத்தை சிங்கள பௌத்த அரசு கட்டமைப்புக்கு எதிராகவும் ஏன் பயன்படுத்த முடியவில்லை? இதேயளவு தந்திரத்தை ராஜதந்திரத்தை புத்திசாலித்தனமான கணிதபூர்வமான நகர்வுகளை ஏன் வெளிநாடுகள் பேரரசுகளுடனான அணுகுமுறைகளில் கைக்கொள்ள முடியவில்லை?

தமிழ்ச் சமூகத்தில் சாதாரணமாக குடும்பத்துக்குள்ளேயே கணவன், மனைவிக்கும் தாய்க்கும் இடையே சுழித்தோட முயற்சிப்பான். சிலசமயம் சகோதரர்களே ஒருவர் மற்றவரைச் சுழித்துக் கொண்டு ஓடுவதுண்டு. சமூகத்தின் மிகச்சிறிய அலகாகிய குடும்பத்துக்குள் இவ்வாறு மைக்ரோ தந்திரத்தை முன்னெடுக்கும் ஒரு சமூகமானது.தனது வெளியுறவுகளில் குறிப்பாக வெளிநாடுகளை அணுகும் விடயத்தில் ஏன் அவ்வாறு ராஜதந்திரமாக நடந்து கொள்வதில்லை? தமிழ் மக்கள் அதிகமாகப் பார்க்கும் திரைத் தொடர்களில் பெரும்பாலானவை பெண் மைய திரை நாடகங்களே. இதில் வரும் நாயகிகள் செய்யும் தந்திரம் சில சமயம் அரசியல்வாதிகள் செய்யும் தந்திரத்தை விடவும் கணித பூர்வமானதாக இருக்கும். நமது வீடுகளில் அதிகம் பார்க்கப்படுவது இந்த தந்திர நாடகங்கள்தான். ஏற்கனவே நமது சிறுவர் கதைப் புத்தகங்களில் பஞ்ச தந்திரம் என்ற கதைத் தொகுதி உண்டு.

பஞ்சதந்திரத்தில் தொடங்கி தொலைத் தொடர் தந்திரங்கள் வரையிலும் தந்திரங்களை வாசிக்கின்ற பார்க்கின்ற ஒரு சமூகம், வீட்டுக்குள் குடும்பத்



தந்திரத்தை வெற்றிகரமாகப் பயிலும் ஒரு சமூகம் சமூகத்தின் சிறிய நிறுவனங்களாகிய சனசமூக நிலையங்கள், ஆலய அறங்காவல் சபைகள், திருச் சபைகள், பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலைகள் அலுவலகங்களில் ஸ்டாஃப் ரூம்கள் போன்ற பெரும்பாலான நிறுவனங்களுக்குள் வெற்றிகரமாக அணிகளை உருவாக்கி தந்திரம் செய்யும் ஒரு சமூகம், ஏன் அரசியல் அரங்கில் மட்டும் வெளிநாடுகளோடும் வல்லரசுகளோடும் தந்திரமாக புத்திசாலித்தனமாக நடக்க முடியவில்லை?

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**



தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய சிந்தனையாளரும் ஆன்மீகவாதியும் படைப்பாளியும் ஆகிய மு.தளையசிங்கம் கூறுவார் சத்திய தந்திரம் என்று. மகாபாரதத்தில் கிருஷ்ணரின் தந்திரங்கள் இல்லையென்றால் பாண்டவர்கள் வென்றிருக்கவே முடியாது. மகா பாரதத்தை அத்தகைய அர்த்தத்தில் சொன்னால் அது கிருஷ்ண தந்திரந்தான். எனவே சத்தியத்துக்காகப் போராடுகிறவர்கள் தந்திரம் பயில வேண்டும் என்ற பொருளில் தளையசிங்கம் அதை சத்திய தந்திரம் என்று அழைத்தார்.

ஆனால் தமிழ்ச் சமூகத்தின் பஞ்ச மகாதந்திரங்கள் சொந்தச் சமூகத்துக்குள்ளேயே சொந்தக் குடும்பத்துக்குள்ளையே, ஒரே பாடசாலைக்குள்ளேயே ஒரே ஸ்டாஃப் ரூமுக்குள்ளேயே, ஒரே அறக்கட்டளைகளுக்குள்ளேயே ஒரே திருச்சபைகளுக்குள்ளேயே ஒரே கட்சிக்குள்ளேயே மட்டும் தானா? வெளி உலகத்தோடு இல்லையா?

# ஸ்ரீதரன் தமிழரசில் இன்னொரு இராஜதுரையா?

கட்டுரையாளர்:-
– அழகு குணசீலன் –

தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கும், அமைப்புக்களுக்கும், அவர்களின் அரசியலுக்கும் மங்குசனி தொடங்கிய காலம் அது. இதனால் புலிகளின் தலைவர் பிரபாகரனால் வீட்டு சின்னத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்ற லேபல் புதுப்பித்து ஒட்டப்பட்டது. ஒரு வகையில் இதை ஒப்பரேசன் தமிழரசு என்று சொல்லமுடியும். இது முரண்பாடுகளைக் கொண்ட பலரை கூட்டமைப்பு என்ற சாக்குக்குள் போட்டு கட்டி புலிகள் அரசியல் பாடம் எடுத்த தருணம். இந்தபுதிய லேபல் ஏற்படுத்திய பாராளுமன்ற பிரதிநிதித்துவ அதிகரிப்பை தமிழ்தேசிய கூட்டமைப்பால் 2009க்கு பின்னர் தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை.

இதற்கு இரா.சம்பந்தர், மாவை சேனாதிராசா ஆகியோரின் ஆளுமையற்ற தலைமைத்துவமும் தமிழ்த் தேசிய வாடையே படாத எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் முறையே சம்பந்தனாலும் முன்னாள் மட்டக்களப்பு புலிகளின் சிபார்சிலும் கட்சிக்குள் நுழைந்ததும் முக்கிய சாபக்கேடு. சாணக்கியனின் உள் நுழைவுக்கு முன்னாள் புலிகள் கி.துரைராசசிங்கம் ஊடாக சம்பந்தருக்கு வழங்கிய நற்சான்றிதழும் காரணமாக அமைந்தது. பலவீனமான கூட்டமைப்பு தமிழரசு தலைமைகள் காரணமாக சுமந்திரன் படிப்படியாக கட்சிக்குள் தனது நிலையை பலப்படுத்திக் கொண்டார். சுமந்திரனின் அரசியலை ஏற்காத முன்னாள் புலிகள் சாணக்கியனை தமிழரசுக்கு வழங்கியது சுமந்திரனின் பலத்தை அதிகரிக்கவே உதவியது. இது முன்னாள் புலிகள் தங்களுக்கு தாங்களே சூனியம் செய்தகதை. இப்போது நாயைக் கடித்து, பேயைக் கடித்து. சிறிதரனை கடித்திருக்கிறது தமிழரசுக்கட்சி சுமந்திரன் அணி.

2024 ஜனவரி 21இல் திருகோணமலையில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை கூட்டத்தில் சி.சிறிதரன் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். கூட்ட மண்டபத்திற்கு வெளியே சிறிதரனின் கையை பிடித்து, 'நண்பன் சிறிதரனுக்கு எனது முழு ஆதரவும் என்று சொன்ன சுமந்திரன் அடுத்த கணத்தில் இருந்தே அவருக்கு ஆப்பு வைக்கத் தொடங்கினார். தமிழரசுக்கட்சியின் அரசியல் வரலாறு மட்டும் அன்றி, அதன் நிர்வாக வரலாறும் ஜனநாயகத்தில் கறைபடிந்த கதைகளை கட்டுக்கட்டாக கொண்டது. இதற்கு சிறிதரனும் ஒரு காலத்தில் ஒத்து ஓடியவர் தான்.

இப்போது அந்த ஜனநாயகம் அவரையே கட்சியில் இருந்து துரத்தும் அளவுக்கு வந்து நிற்கிறது. எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கு பின்னர் ஒரு அமிர்தலிங்கம் போன்று, இரா.சம்பந்தருக்கு பின்னர் ஒரு சுமந்திரன் கட்சியை கட்டுப்பாட்டில் வைத்து தன்னிஷ்ட அரசியல் செய்கிறார். இதனால் தான் இரு வேறுபட்ட சூழ்நிலைகளை கொண்ட அரசியல் செயற்பாடுகளாயினும் சிறிதரன் தமிழரசுக்கட்சியின் இன்னொரு இராசதுரையா? என்று கேட்க வேண்டியுள்ளது. அமிர்தலிங்கத்திற்கு மட்டக்களப்பில் ஒரு காசி ஆனந்தன். சுமந்திரனுக்கு மட்டக்களப்பில் ஒரு சாணக்கியன். அ.அமிர்தலிங்கம் தனக்கு ஆதரவான ஒரு குழுவை கட்சிக்குள் வைத்துக்கொண்டு செல்லையா இராசதுரைக்கு எதிரான தனது நடவடிக்கைகள் அனைத்தையும் நியாயப்படுத்தினார். இராசதுரைக்கு கிடைக்க வேண்டிய தமிழரசுக்கட்சி தலைமைத்துவத்தை சி.மு.இராசமாணிக்கத்திற்கு வழங்கி, நாங்கள் பிரதேசவாதம் அற்றவர்கள். ஜனநாயகவாதிகள் என கிழக்கு மாகாண மக்களுக்கு காதில் பூச்சுத்தியது. இத்தனைக்கும் இராசமாணிக்கம் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து தமிழரசுக்கட்சிக்கு தாவியவர். இதை இராசதுரைக்கு எதிராக நியாயப்படுத்த கிழக்கிலும் ஆட்கள் இருந்தார்கள்.

அதேபோன்று இன்றும் இரா. சாணக்கியனை பாராளுமன்ற குழுத்தலைவராக நியமித்து சுமந்திரன் கிழக்கு மீதான தனது காதலையும், ஜனநாயகத்தின் மீதான பற்றையும் மத்திய குழு உறுப்பினர்களான பதில் தலைவர் சி.வி.கே .சிவஞானம், பாராளுமன்ற குழுவின் ஊடகப்பேச்சாளர் ஞா.சிறிதரன் ஆகியோரின் முரண்பட்ட கருத்துக்களுக்கு மத்தியிலும் வெளிப்படுத்தியுள்ளார். இத்தனைக்கும் இராசமாணிக்கத்தின் பேரன் சாணக்கியன் பட்டிருப்பு தொகுதியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளராக இருந்து பாட்டன் வழியில் தமிழரசுக்கு தாவியவர். சிறிதரனிடம் இருந்து பறித்து சாணக்கியனுக்கு வழங்கப்பட்ட பாராளுமன்ற குழுத்தலைவர் பதவியை. இனிப்பு வழங்கியும், பட்டாசு கொழுத்தியும் கொண்டாட சுமந்திரனுக்கும், சாணக்கியனுக்கும் மட்டக்களப்பில் இன்னும் ஆட்கள் இருக்கிறார்கள்.



தமிழரசுக்கட்சியின் தற்போதுள்ள எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களது ஏகமனதான தெரிவாக இந்த தெரிவு இடம் பெறவில்லை. கட்சி பதில் செயலாளருடைய தனி விருப்பமாக தற்போது ஏற்கனவே பதவி வகித்த சிறிதரனின் பதவி மாற்றப்பட்டுள்ளது. இந்த விடயம் சரியா, தவறா என்பதை நான் விவாதிக்க விரும்பவில்லை. என்று தமிழரசு கட்சியில் இருந்து நீக்கப்பட்ட பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரன் பதிவு ஒன்றை இட்டுள்ளார். இதில் வேடிக்கை என்னவென்றால் பதில் செயலாளர் தனிவிருப்பமாக சிறிதரனின் பதவியை பறித்து இருக்கிறார் என்றால் அது அப்பட்டமான தவறு. ஜனநாயகத்தை மறுதலிக்கின்ற முடிவு. ஆனால் அதைப் பற்றி பேச அரியநேந்திரன் தயாரில்லை. இந்தப் பாணி தான் தமிழரசுக்கட்சியின் அரசியல் பாணி. ஜனநாயக மறுப்பு ஒன்றின் ஊடாக பாராளுமன்ற அரசியலுக்குள் நுழைந்த அரியநேந்திரனிடம் இருந்து வேறு என்னத்தை எதிர்பார்க்க முடியும்.?

அவரது கண்ணுக்கு குத்தியிருப்பது இனிப்பும், பட்டாசும். இந்த நடவடிக்கை பிரதேசவாதத்தின் வெளிப்பாடு என்ற சாரப்பட அவர் கூறுகிறார். தமிழரசு கட்சிக்குள் நிலவுகின்ற உட்கட்சி ஜனநாயகமின்மை, பக்கச்சார்பான பழிவாங்கல், பிரதேச வாதம், பதவிப்போட்டி கழுத்தறுப்பு போன்றவை பற்றி அரங்கம் மின்னிதழ் பத்திகளில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக குறைந்தது நூறு பதிவுகளாவது பல்வேறு பத்தியாளர்களால் எழுதப்பட்டுள்ளது. அப்போது எல்லாம் இவற்றை மறுத்தவர்களுள் இவரும் ஒருவர். ஏற்கனவே அரியநேந்திரன் வீட்டுக்கதவை தட்டிய சுமந்திரன் தற்போது சிறிதரன் வீட்டுக்கதவை தட்டியிருக்கிறார். அதைக் கூட அவரால் சரியா? தவறா? என்று சொல்லமுடியாத நிலை உள்ளது. சிறிதரன் நீக்கப்பட்டது ஒருவரின் தனி விருப்பம் என்றால் அது எப்படி சரியாக இருக்க முடியும்?

தமிழரசுக்கட்சி பாராளுமன்ற குழுத்தலைவராக ஒருவரை தெரிவு செய்வது உலக நடைமுறையில் அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை சார்ந்தது. வேண்டுமானால் கட்சி ஆலோசனையை வழங்க முடியும். அந்த வகையில் சி.சிறிதரன் தெரிவு செய்யப்பட்டார். இது அவருக்கு அரசியல் அமைப்பு குழுவில் உறுப்பினராவதற்கும் உதவியது. சிறிதரனின் அரசியல் அமைப்பு குழுவில் தமிழரசுக்கட்சியின் உறுப்பினராக அல்ல, பிரதான எதிர்கட்சி தவிர்ந்த சிறிய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதியாகவே குழுவில் இடம் பெறுகிறார். தமிழரசுக்கட்சி எம்.பி.க்களின் ஏழு வாக்குகள் சிறிதரனுக்கு கிடைத்ததாகவும் சாணக்கியன் தனக்கு வாக்களிக்கவில்லை என்ற சாரப்பட சிறிதரன் ஊடகப் பேட்டி ஒன்றில் கூறியுள்ளார். சிறிதரனுக்கு ஜீவன் தொண்டமானை விடவும் ஒரு வாக்கு மேலதிகமாக கிடைத்தது. தனக்கு வாக்களித்த மாற்று கட்சியினர் யார், வாக்கு அளிக்காத தன் கட்சிக்காரர் யார் என்பதும் சிறிதரனுக்கு தெரியும்.

இப்போது உள்ள பிரச்சினை என்னவெனில் சுமந்திரன் பாராளுமன்ற குழுத் தலைவர் பதவிக்கும், அரசியல் அமைப்பு சபை உறுப்பினர் பதவிக்கும் முடிச்சுப் போடுவது தான். உண்மையில் (22ம் பக்கம்பார்க்க)

# மீண்டும் தலை தூக்கும் சிங்கள பௌத்த தீவிரவாதம்! இரண்டாவது அறகலையின் மூலம் வீழ்த்தப்படுவாரா அநுர குமார?



திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் யாழ் திஸ்ஸ விஹாரை சர்ச்சை தொடர்பாக ஜனாதிபதி நிகழ்த்திய உரை கல்வி மறுசீரமைப்பு தொடர்பான சர்ச்சை மற்றும் மிகிந்தலை தேரரை இழிவு படுத்தும் விதத்தில் அமைச்சர் லால்காந்த நிகழ்த்தியதாக கூறப்படும் உரை என்பன 2022 இன் பின்னர் கடும் பின்னடைவைச் சந்தித்து முற்றிலும் முடங்கிப் போயிருந்த சிங்கள பௌத்த தீவிரவாத சக்திகளுக்கு புதுத் தெம்பையும், உற்சாகத்தையும் ஊட்டியுள்ளன. இந்தச் சக்திகள் இது வரையில் ஆவலுடன் எதிர் நோக்கியிருந்த அந்தப் பொன்னான தருணம் இதோ வந்திருக்கிறது.

இதனையடுத்து 'என்பிபி- ஜேவிபி அரசாங்கம் பௌத்த மதத்தையும், சிங்கள பௌத்த பண்பாட்டையும் அழித்தொழிக்க முயலும் தீய சக்தி' என்ற சுலோகத்தை பரவலாக சமூகமயப்படுத்துவதற்கான ஒரு முயற்சி பல முனைகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஒரு வலுவான மறைகரம் இச்செயல் திட்டத்தின் பின்னணியிலிருந்து, மிகவும் தந்திரமான விதத்தில் காய்களை நகர்த்தி வருவதனையும் ஊகிக்க முடிகிறது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நாடு இதுவரையில் கண்ட தலைசிறந்த அரச தலைவர் என்றும், அவருடைய தலைமையின் கீழ் இலங்கை தேசிய ஐக்கியத்துடன் கூடிய வளமார்ந்த ஒரு எதிர் காலத்துக்குள் பிரவேசிக்கப் போகிறது என்றும் அவரது ஆதரவாளர்கள் புகழாரம் சூட்டி வரும் அதே வேளையில், மற்றொரு பிரிவினர் அவரை 'பௌத்த மதத்தையும், சிங்கள இனத்தையும் அழித்தொழிப்பதற்கு அவதாரம் எடுத்திருக்கும் மாபெரும் அரக்கன்' என்றும், 'சிங்கள பிரபாகரன்' என்றும், தேசத்துரோகி என்றும், தமிழ் டயஸ்போராவுக்கு எதிரில் மண்டியிடும் கோழை என்றும் திட்டித் தீர்க்கிறார்கள்.

சம விகிதத்தில் இருந்து வரும் இந்த இரு பிரிவினருக்குமிடையில் கடுமையான சொற்போர்கள் நிகழும் களங்களாக மாறியிருக்கின்றன சிங்கள சமூக ஊடகங்கள்.

உதாரணமாக, 'சுதந்திர தின நிகழ்வின் போது மல்டி பெரல் ரொக்கட் லோஞ்சர்கள் போன்ற பாரிய ஆயுதங்கள் காட்சிப் படுத்தப்படவில்லை எனக் கூறி அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து வரும் இனவாதிகளுக்கு பதிலளிக்கும் விதத்தில் எழுதப்பட்ட ஒரு முகநூல் பதிவு இது

சுதந்திர தின வைபவத்தின் போது மல்டி பெரல் ரொக்கட் லோஞ்சர்களை காட்சிப்படுத்துவது யாருக்கு? ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகள் தமக்கு யுத்த அச்சுறுத்தலை எடுத்து வரும் நாடுகளுக்கு தமது இராணுவ பலத்தைக் காட்டுவதற்கு அவ்வாறு செய்வதாக கருதலாம். ஆனால், இலங்கை உள்ளே இருப்பவர்களை இலக்கு வைத்துத் தான் அப்படிச் செய்ய முடியும். அதாவது, வடக்கு கிழக்கு தமிழர்களை பயமுறுத்துவதற்கும், தெற்கில் வாழும் சிறு எண்ணிக்கையிலான குருட்டு பக்தர்களை உசுப்பேற்றுவதற்கு மட்டும் தான் அவ்வாறான ஒரு காட்சிப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும்.

ரங்கன பிரசாத் ஆரியதாசவின் முக நூல் பதிவு

என்பிபி-ஜேவிபி அரசாங்கத்தின் ஆதரவாளர்களும், எதிர்ப்பாளர்களும் ஒருவரையொருவர் வெறுப்புடனும், வன்மத்துடனும் நோக்கும் ஒரு சூழ்நிலையும் உருவாகியிருக்கிறது. அந்த வன்மம் அரசியல் தலைவர்கள் வரையில் வியாபித்திருப்பதை தெளிவாக பார்க்க முடிகிறது. தமக்கு கிடைத்திருக்க வேண்டிய ஜனாதிபதி பதவியை அநுர குமார திசாநாயக்க அநியாயமாக தட்டிப் பறித்துக் கொண்டிருக்கிறார் என்ற விரக்தியில் குமுறிக் கொண்டிருக்கும் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச போன்றவர்கள் ஜனாதிபதிக்கு எதிராக கருத்துத் தெரிவிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த வன்மத்தையே கக்கிக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் காலஞ்சென்ற நந்தன குணதிலகவும் கடைசி வரையில் அதே மனநிலையிலேயே இருந்து வந்தார்.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் முதல் தடவையாக ஒரு பெரும் சமூக கொந்தளிப்புடன் இணைந்த விதத்தில் அரசியல் நெருக்கடியொன்று தலைதூக்கி வரும் ஒரு பின்புலத்தில் 2022 அரகலயவின் குழந்தையான என்பிபி-ஜேவிபி அரசாங்கம் 2026 இல் அல்லது 2027 இன் தொடக்கத்தில் வெடிக்கப் போகும் இலங்கையின் இரண்டாவது அரகலயவின் மூலம் வீழ்த்தப்படப் போகிறது எனப் பரவலாக ஹேஷ்யங்கள் தெரிவிக்கப்பட்டு வரும் ஒரு பின்புலத்தில் நாடு அதன் 78 ஆவது சுதந்திர தினத்தை வழமையான பெருமித உணர்வுடன் கடந்த வாரம் கொண்டாடியது.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய தனது சுதந்திர தின உரையில் அனைத்து இனங்களையும், அனைத்து மதங்களையும் சேர்ந்த மக்கள் ஒன்றாக இணைந்து நவ இலங்கையை கட்டியெழுப்புவதற்கு முன்வர வேண்டுமென அழைப்பு விடுத்ததுடன் 'இனவாதம்' மற்றும் 'மத தீவிரவாதம்' என்பன நமது அகராதியிலிருக்கும் மிகவும் அவலட்சணமான சொற்கள் என்ற விடயத்தையும் வலியுறுத்திக் கூறினார்.

அதே சுதந்திர தினத்தன்று களுத்துறையில் மத வழிபாட்டுத் தலமொன்றில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் பங்கேற்று, உணர்ச்சிகரமான விதத்தில் உரை நிகழ்த்திய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சிங்கள ராவய அமைப்பின் தலைவருமான அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்த ஒரு சில கருத்துக்கள் 'அவலட்சணமானவை':

தமது சொந்த தாய்நாட்டில் கைவிடப்பட்டு, அநாதைகளாக்கப்பட்டிருக்கும் சிங்கள பௌத்த மக்கள் கொண்டாடுவதற்கு சுதந்திரம் என்று எதுவுமில்லை எனக் கூறி தனது உரையை ஆரம்பித்தார் அவர்.

அரசாங்கத்துக்கு எதிராக கடும் இனவாதத் தொனியில் நிகழத்தப்பட்ட அந்த உரை நெடுகிலும் இன்று இலங்கையில் சிங்கள பௌத்த மக்கள் எதிர்கொண்டு வரும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் 'மற்றவர்களே' (அதாவது தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகியோரே) காரணமென மறைமுகமாகவும், சில இடங்களில் நேரடியாகவும் அவர் குறிப்பிட்டார்.

இன்று சிங்களவர்களின் குடித்தொகை கணிசமான அளவில் குறைந்திருப்பதற்கு 1970கள் தொடக்கம் முன்னெடுக்கப்பட்ட 'நாம் இருவர் நமக்கு இருவர்' என்ற குடும்பக் கட்டுப்பாட்டு பிரச்சாரமே காரணமெனக் கூறிய அவர், அந்தப் பிரச்சாரத்தின் பின்னணியில் இருந்தவர்கள் மாற்று மதத்தவர்கள் எனக் குற்றம் சாட்டினார்.

புறக்கோட்டையிலிருந்தும் செட்டியார் தெருவிலிருந்தும் சிங்கள வியாபாரிகள் முற்றாக அகற்றப்பட்டு, அந்த இடங்களில் இப்பொழுது முறையே முஸ்லிம் மற்றும் தமிழ் வியாபாரிகளின் ஆதிக்கம் நிலவி வருவதாகவும், நாவலையில் டைல்ஸ் வியாபாரத்தை சிங்களவர்களிடமிருந்து தமிழ் வர்த்தகர்கள் அபகரித்துக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்த கருத்துக்கள் ஒரு விதத்தில் அபத்தமானவை. பல தசாப்த காலமாக இலங்கையில் வர்த்தகம் தாராளமயமாக்கப்பட்டு, ஒரு கட்டற்ற சந்தை நிலவி வருகின்றது என்ற பொருளாதார யதார்த்தத்தை மறுக்கும் வரட்டுத்தனமான வாதங்கள்.

இலங்கையில் புதிதாக உருவாகி வரும் இந்தச் சூழலை அதாவது, 'சிங்கள பௌத்தர்களுக்கும், சிங்கள பண்பாட்டுக்கும் ஆபத்து' என உரத்து ஒலிக்கும் கோஷத்தை தமது அரசியலுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதே எதிர்க் கட்சிகளின் திட்டம். புத்த பிக்குகளை தூண்டி அவர்களுக்கு ஊடாக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் அரசாங்கத்தை பலவீனப்படுத்தி, கவிழ்க்க முடியுமென தமது வாக்கு வங்கிகளை இழந்திருக்கும் இக் கட்சிகள் கணக்குப் போடுகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தி (SJB) பொதுசன முன்னணி (SLPP), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) மற்றும் யுஎன்பி போன்ற பிரதான அரசியல் கட்சிகள் 'இலங்கையின் தீவிரவாத அரசியல் பிக்குகள்' (Militant Monks) என்று அழைக்கப்படும் ஒரு பிரிவினரால் அநுர குமார அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் பிரச்சாரத்தை மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன.

கல்வி மறுசீரமைப்பில் ஆண்டு ஆறு மொடியூல் தொடர்பாக எழுந்த சர்ச்சையின் போது ஜீ எல் பீரிஸ், உதய கம்மன்பில போன்றவர்கள் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களை அணுகி, அவர்கள் மூலம் அரசாங்கத்துக்கு எதிராக ஒரு கூட்டு அறிக்கையை வெளியிடச் செய்வதற்கு முயற்சித்ததாகவும், அம் முயற்சி தோல்வியில் முடிந்ததாகவும் கூறப்படுகிறது.

இலங்கை இன்று எதிர்கொண்டு வரும் சமூக, பொருளாதார நெருக்கடிகளை தீர்த்து வைப்பதற்கு புதிய மாற்றுத் திட்டங்களோ, புத்தாக்க இயல்பிலான யோசனைகளோ எவையுமில்லாமல் வெறும் வங்குரோத்து நிலையிலிருந்து வரும் தரப்புக்கள் இப்படியான மூன்றாம் தரமான காரியங்களில் ஈடுபடுவதைத் தவிர இப்பொழுது அவர்களுக்கு வேறு வழிகள் இருப்பதாக தெரியவில்லை.

சரியாக சொல்லப் போனால், பௌத்த மதத்தின் நான்கு பிரிவுகளையும் சேர்ந்த மகாநாயக்க தேரர்கள், தலதா மாளிகை மற்றும் நாட்டில் இருக்கும் 18,000க்கும் மேற்பட்ட புத்த பிக்குகள் ஆகிய தரப்புக்களை உள்ளடக்கிய இலங்கையின் சிங்கள-பௌத்த ஸ்தானத்துக்கும், அரசாங்கத்துக்குமிடையில் ஒரு மோதல் நிலையை உருவாக்கி அதன் மூலம் பௌத்த மக்களின் உணர்வுகளைத் தூண்டி, தமது வாக்கு வங்கிகளை அதிகரித்துக் கொள்ள முடியமென்பதே இக் கட்சிகளின் திட்டம்.

ஆனால், அடுத்து வரும் தேர்தல்களில் இலங்கையில் 2019 இல் தோன்றிய விதத்தில் ஒரு பாரிய சிங்கள -பௌத்த அலை உருவானால் அதன் மூலம் நாமல் ராஜபக்ச அணி மட்டுமே முழுமையாக பயனடைய முடியும் என்பது கசப்பான யதார்த்தம். நாமலை (18ம் பக்கம் பார்க்க)

# மீண்டும் தலை தூக்கும் சிங்கள பௌத்த தீவிரவாதம்! இரண்டாவது அறகலையின் மூலம் வீழ்த்தப்படுவாரா அநுர?

(17ம் பக்கத் தொடர்ச்சி) அடுத்த ஜனாதிபதியாக முடிசூட வைப்பதை நோக்கிய நுட்பமான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதனை பார்க்க முடிகிறது. பெருமளவு பார்வையாளர்களைக் கொண்ட இராஜ் வீரரத்னவின் யூடியூப் தளம் ஏற்கனவே அந்தப் பிரச்சாரத்தை முடுக்கி விட்டுள்ளது. அநுர குமார அரசாங்கத்துக்கு எதிராக வன்மையான விதத்தில் தமது கருத்துக்களை தெரிவித்து வரும் இத்தாகந்தே சந்தாதிஸ்ஸ (ராவண பலய), அக்மீமன தயாரத்ன (சிங்கள ராவய), கலகொடஅத்தே ஞானசார (பொதுபல சேனா), முருத்தெட்டுவே ஆனந்த போன்ற முன்னணி பிக்குகள் பலரும் ராஜபக்ச முகாமினால் போஷித்து, வளர்க்கப்பட்ட அதன் செல்லப் பிள்ளைகள் என்பதை சொல்ல வேண்டியதில்லை.

அதே வேளையில் SJB என்றுமில்லாத ஒரு தடுமாற்ற நிலைக்குள் தள்ளப்பப்பட்டிருக்கிறது விலைவாசி உயர்வு வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் IMF நிபந்தனைகள் எடுத்து வரும் பொருளாதார பின்விளைவுகள் போன்றவற்றை மட்டும் சுலோகங்களாக பயன்படுத்தி அடுத்த தேர்தலில் என்பிபி அரசாங்கத்தை வீழ்த்த முடியும் என்ற சஜித்தின் நம்பிக்கையில் மண்ணை அள்ளி வீசியிருக்கிறார் நாமல்.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக சஜித் பிரேமதாசவும், அவருடைய கட்சியைச் சேர்ந்த ஒரு சில எம்பிக்களும் நிகழ்த்திய இனவாதச் சாய்வுடன் கூடிய உரைகளை வேகமாக புத்துயிர்ப்படைந்து வரும் சிங்கள தேசியவாதத்துடன் தம்மையும் பொருத்திக் கொள்வதற்கான ஒரு முயற்சியாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனால், அந்தச் சுலோகத்தை ஏற்கனவே நாமல் ராஜபக்ச அணி தனது ஏகபோகமாக சுவீகரித்துக் கொண்டுள்ளது.

அறகலய அதற்கு ஆதரவாக இருந்து வந்த இலட்சக்கணக்கான இலங்கை மக்கள் மத்தியில் உருவாக்கியிருந்த எதிர்பார்ப்புகளை அநுரகுமார திசாநாயக்க அரசாங்கம் முழுமையாக நிறைவேற்றி வைத்துள்ளதா என்றால் 'இல்லை' என்று தான் சொல்ல வேண்டும். ஆனால், கடந்த அரசாங்கத்தின் போது இடம் பெற்ற முறைகேடுகள், ஊழல்கள் மற்றும் இலஞ்சம் என்பவற்றில் சம்பந்தப்பட்டிருந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் விடயத்தில் அரசாங்கம் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவுக்கு வெற்றியீட்டியிருக்கிறது.

அதேபோல ஊழலோ முறைகேடுகளோ இல்லாத அரச துறை என்ற சுலோகத்துக்கும் அது செயல்வடிவம் கொடுத்து வருகின்றது என்ற விடயத்தை எவரும் மறுக்க முடியாது.

இந்தப் பின்புலத்தில் மக்களை அணிதிரட்டக் கூடிய சுலோகம், எளிதில் சாதாரண மக்களை உணர்ச்சி வசப்படுத்தக் கூடிய சுலோகம் 'பௌத்த மதத்துக்கும், 2500 வருட கால சிங்கள பண்பாட்டுக்கும் ஆபத்து' என்பதும், 'அந்த மதத்தின் புனித காவலர்களான புத்த பிக்குகளை இழிவு படுத்துவதற்கு இடமளிக்க முடியாது' என்பதுமாகும்.

நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் மூலம் தோற்கடிக்கப்பட வேண்டியவர்கள் ராய் பல்தஸாரோ அல்லது ஹரிணி அமரசூரியவோ அல்ல. அத்தகைய விவேகபூர்வமற்ற நகர்வுகள் இன்றைய அரசியலின் ஒரு முன்னுரிமையாகவும் இருந்து வரவில்லை. 'எதிரி யார்' என்ற தெளிவு இல்லாமல் இப்பொழுது எதிர்ப்பரசியல் செய்பவர்கள் அந்த முட்டாள்தனத்துக்கு அடுத்து வரும் தேர்தல்களில் ஒரு கடும் விலையைச் செலுத்த வேண்டி நேரிடும் என்பதை மட்டும் சொல்லி வைக்க வேண்டும்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவும், ஏனைய முக்கியமான அமைச்சர்களும் அடிக்கடி மகா நாயக்க தேரர்களை சந்தித்து, தமது அரசாங்கத்தின் நகர்வுகள் குறித்து விளக்கமளித்து வருகிறார்கள். அரசாங்கம் புனித தந்த தாதுக்களின் கண்காட்சியை ஏற்பாடு செய்து, அதற்கு முழுமையான அனுசரணையையும் வழங்கியிருந்தது. புத்த மதத்துக்கு முதன்மை அந்தஸ்து என்ற அரசியல் யாப்பின் விசேட ஷரத்து மாற்றமில்லாமல் அவ்வாறே நீடித்து வருகிறது. அப்படி இருக்கும் நிலையில், ஜனாதிபதி பௌத்த மதத்துக்கும், சிங்கள இனத்துக்கும் எதிரானவர் என்று எப்படிக் கூற முடியும் என்ற கேள்விக்குப் பதிலளித்த சமூக – அரசியல் செயற்பாட்டாளர் விதர்சன கன்னங்கர தெரிவித்த கீழேயுள்ள கருத்து, இலங்கையின் தீவிரவாத பிக்குகள் மற்றும் விமல் வீரவன்ச, சரத் வீரசேகர, உதய கம்மன்பில போன்ற இனவாதிகள் போன்றவர்களின் உளவியல் செயற்படும் விதத்தை துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது:



நீங்கள் அசல் சிங்கள பௌத்தர் என்பதை நிரூபிப்பதற்கு அது மட்டும் போதாது. இன்னொரு முக்கியமான காரியத்தையும் செய்ய வேண்டும். அதாவது தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் தொடர்பாக ஒரு விரோத அணுகுமுறையை கொண்டிருக்க வேண்டும். அதை பகிரங்கமாக சொல்லவும் வேண்டும்.

விதர்சன கன்னங்கர சொல்ல வந்த விடயத்தின் சாராம்சம் 'மத வெறியைத் தூண்ட வேண்டுமானால் முதலில் ஒரு எதிரியை கட்டமைக்க வேண்டும்' என்பது. சிறுபான்மை சமூகங்களே சிங்கள – பௌத்த தீவிரவாத தரப்புக்களால் தொடர்ந்து கட்டமைக்கப்பட்டு வரும் அந்த எதிரி. ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு எதிராக ஆவேசமாக தெரிவிக்கப்பட்டு வரும் கருத்துக்களை உன்னிப்பாக நோக்கினால் அவர் சிங்கள பெரும்பான்மை மக்களின் நலன்களை உதாசீனம் செய்து தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகியோரை அளவுக்கு அதிகமாக அரவணைத்து வருகிறார் என்ற குற்றச்சாட்டே அவர் மீது வீசப்பட்டு வருவதை பார்க்க முடியும்.

சிங்களவர்களின் வாக்குகளால் வென்று தமிழர்களின் ஜனாதிபதியாக செயற்படுவதற்கு முயற்சிப்பவர்', 'ஜனாதிபதி தமிழர்களுடன் சேர்ந்து தைப்பொங்கலை கொண்டாட முடியுமானால் சிங்கள புத்தாண்டை ஏன் கொண்டாட முடியாது?' என்ற விதத்திலான குற்றச் சாட்டுக்களாகவே அவை இருந்து வருகின்றன.

எல்லாளன் என்ற தென்னிந்திய ஆக்கிரமிப்பாளன் அநுராதபுரத்தில் போரில் கொல்லப்பட்டான். அப்பொழுது அவன் 'நான் சிங்கள — பௌத்தனாக பிறந்து, உங்கள் அனைவரையும் பழி வாங்க வேண்டும்' என்று சூளுரைத்ததாகக் கூறப்படுகிறது. அது இப்பொழுது நிகழ்ந்திருப்பது போல் தெரிகிறது என்கிறார் விமல் வீரவன்ச.

இந்த அரசாங்கத்துக்குள் 'சிங்கள பிரபாகரன்கள்' பலர் இருந்து வருகிறார்கள்'' என்பது சரத் வீரசேகரவின் கருத்து. '1988இல் புனித தலதா மாளிகையின் மீது தாக்குதல் தொடுத்தவர்களும் (ஜேவிபி), 1998 இல் தலதா மாளிகையின் மீது தாக்குதல் தொடுத்தவர்களும் (எல்ரீரீஈ) இப்பொழுது ஒன்றாக கை கோர்த்து கொண்டுள்ளார்கள்' என்கிறார் ஒரு அரச எதிர்ப்பு யூடியூபர். சிங்கள — பௌத்தத்தின் மீது பெலவத்த டோபிகள் கொண்டிருக்கும் தீராத வன்மத்துக்கும், இலங்கையின் தனித்துவமான முதன்மை கலாசாரத்தின் மீது அவர்கள் தொடுத்து வரும் தாக்குதல்களுக்கும் தக்க பதிலடி கொடுப்போம் என்றும், சிங்கள பௌத்தர்களின் அசுர பலத்தின் முன்னால் அநுர குமார திசாநாயக்கவை மண்டியிடச் செய்வோம் என்றும் எழுதப்படும் ஏராளமான சிங்கள முகநூல் பதிவுகளை பார்க்க முடிகிறது.

இலங்கையில் நிகழப் போகும் பெரும் மாற்றத்துக்கு தலைமைத்துவம் வழங்குவதற்கு சங்கைக்குரிய ஹாமிதுருமார் முன்வரும் நாள் வெகு தூரத்தில் இல்லை. ஒவ்வொரு பன்சலவும் இந்தப் பறையர்களை விரட்டியடிக்கும் போராட்ட நிலையங்களாக மாறும் என எழுதுகிறார் முதன்மையான சிங்கள சமூக ஊடக செயற்பாட்டாளர் ஒருவர்.

இங்குள்ள ஒரு ஆறுதலான விஷயம், புத்த பிக்குகளையும் உள்ளிட்ட விதத்தில் சிங்கள–பௌத்த தீவிரவாத குரல்கள் சமூக ஊடகங்களில் எந்த அளவுக்கு வன்மத்துடன் ஒலித்து வருகின்றனவோ அதே அளவு தீவிரத்துடன் அதற்கான எதிர்ப்புக் குரல்களும் ஒலித்து வருவதாகும். இலங்கையில் பின்பற்றப்பட்டு வரும் தேரவாத பௌத்த மதத்தின் சீரழிவு, தேக்கநிலை என்பன குறித்தும், இன மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் விதத்தில் செயற்பட்டு வந்திருக்கும் ஞானசார, அத்துரலியே ரதன போன்ற தேரர்களின் எதிர்மறை பங்களிப்புக்கள் குறித்தும் கடுமையான விமர்சனங்களை முன் வைத்து வரும் ( தற்பொழுது சிங்கள இளைஞர்கள் மத்தியில் பெருமளவுக்கு பிரபல்யமடைந்திருக்கும்) கெக்கிராவே சுதஸ்ஸன தேரர் இலங்கையின் பன்சலைகள் பொருளாதார மத்திய நிலையங்களாக மாறி நீண்ட நாட்களாகி விட்டன என அங்கத தொனியில், துணிச்சலாக தனது கருத்துக்களை முன்வைத்து வருகிறார்.

இலங்கையில் இன நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை என்பவற்றுக்கு பெருமளவுக்கு குந்தகம் விளைவித்து வரும் தீவிரவாத தேரர்கள் குறித்து கல்கந்தே தம்மானந்த தேரர் போன்ற கல்விமான்களும் கண்டனங்களை பதிவு செய்து வருகிறார்கள்.

1983 ஜூலை இன அழிப்பின் போது இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான அட்டூழியங்களை நிகழ்த்திய நபர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் எந்தவொரு இயக்கமும் உருவாகவில்லை என்பது பெரும் துரதிர்ஷ்டம் என்கிறார் அவர்.

தற்போதைய அரச எதிர்ப்பு அலையில் முன்னணியில் இருந்து வரும் ஒரு சில பிக்குகளின் இருண்ட பக்கங்களை பலர் துணிச்சலுடன் அம்பலப் படுத்தி வருகிறார்கள். அசல் பௌத்த தர்மத்தின் பிரகாரம் பிக்கு ஒருவர் பின்பற்ற வேண்டிய ஒழுக்க சீலங்களை அப்பட்டமாக மீறியிருக்கும் 'துஷ்ஷீல பிக்குகள்' என அவர்களை வர்ணித்து வருகிறார்கள். அவ்வாறான நூற்றுக்கணக்கான முகநூல் பதிவுகளிலிருந்து எடுக்கப்பட்ட ஓர் உதாரணங்கள் கீழே:

தற்போதைய அரசாங்கம் புத்த மதத்துக்கும், புத்த சாசனத்துக்கும் இழைத்து வரும் கேடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் எமது ஹாமிதுருமார் ஒரு பாத யாத்திரையை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.


நாட்டு மக்கள் என்ற முறையில் அது குறித்து எங்களுக்கும் சொல்வதற்கு ஒன்று இருக்கிறது– புத்த தர்மத்தையும், புத்த சாசனத்தையும் அவமதிக்கும் விதத்தில் கேலிக்குள்ளாக்கும் விதத்தில் நடந்து கொள்ளும் சில ஆட்கள் காவி உடை தரித்து பிக்குகள் என்ற தோற்றத்தில் இருந்து வருகிறார்கள் பன்சலைக்குள் ஒழுக்கக் கேடான காரியங்களைச் செய்யும் இந நபர்கள் அரசியல்வாதிகளின் கைப் பாவைகள் என்பது யாவரும் அறிந்த இரகசியம். நாட்டுக்கும், ஊருக்கும், புத்த சாசனத்துக்கும் எந்தப் பிரயோசனமுமில்லாத தலையை மொட்டையடித்துக் கொண்டிருக்கும் இப்படியான ஆட்களுக்கு எதிராகவும் ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அல்லது சட்ட ரீதியான தண்டனை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுப்பதற்கும் இதே பாத யாத்திரையை பயன்படுத்திக் கொண்டால் நல்லது. –இமாலி மதநாயக்கவின் முகநூல் பதிவு

தீவிர வலதுசாரி சக்திகள் ஆவலுடன் எதிர்ப்பார்த்திருக்கும் இலங்கையின் இரண்டாவது அறகலய வெகு விரைவில் அல்லது 2027 இன் தொடக்கத்தில் (ஓர் இயல்பான மக்கள் எழுச்சியாக) நிகழ்வதற்கான சாத்தியப்பாடு மிக மிகக் குறைவு என்றே சொல்ல வேண்டும். ஆனால், ஏற்கனவே பல இடங்களில் இரகசியமாக திட்டங்கள் தீட்டப்பட்டு வரும் நிலையில், அரசாங்கத்தினால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் ஊழல்– முறைகேடு எதிர்ப்பு நடவடிக்கைகளினால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் பண முதலைகளின் நிதிப்படுத்தலுடன் செயற்கையான விதத்தில் அந்த அறகலய தூண்டப்பட்டால் (2022 இல் நிகழ்ந்ததைப் போல் அல்லாமல்) வரலாற்றின் ஒரு பாரிய இரத்தக் களரிக்கு அது வழிகோல முடியும் என்பதில் சந்தேகமில்லை.

இறுதியாக அநுர குமார திசாநாயக்கவை அகற்றி விட்டு 2029 ஆண்டிலோ அல்லது அதற்கு முன்னரோ ஜனாதிபதி பதவியை கைப்பற்றுவதற்கு (Replacement) காத்திருக்கும் (22ம் பக்கம் பார்க்க)

# சமஷ்டி நூற்றாண்டும் தமிழரசுக்கட்சியும்!

இலங்கை அரசியலில் சமஷ்டி சிந்தனை பிறந்து நூற்றாண்டுகளாகிறது. சிங்கள தேசியவாத நாயக்க வம்ச ஆளுமை எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா இலங்கை சமூக, பொருளாதார, அரசியல் பன்மைத்துவ கட்டமைப்புக்கு சமஸ்டி- கூட்டாட்சி முறைமையே பொருத்தமானது என்று 1926இல் கருத்துருவாக்கத்தில் ஈடுபட்டார். அதற்கான அவசியத்தையும்,



நியாயத்தையும் முன் வைத்தார். இலங்கைத் தீவை கண்டி, கரையோரம், வடக்கு கிழக்கு என்று சுயாட்சி பிராந்தியங்களாக பிரித்து கூட்டாட்சி அரசியல் கட்டமைப்பை நிறுவுவது அவரது கருத்தாக இருந்தது.

அப்போது சமஷ்டி முறைமையானது இன ஒற்றுமையை பாதிக்கும் வகையிலான ஒரு இனவாத கருத்தியல் என்று ஜேம்ஸ்.ரட்ணம் பண்டாரநாயக்காவின் கருத்துக்கு எதிராக பேசியும், எழுதியும் விவாதத்தில் ஈடுபட்டார். இதனால் சிங்களவர் தமிழரை ஒரு சிறுபான்மை தேசிய இனமாக அங்கீகரித்து இலங்கைத்தீவின் ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள முன் வந்ததற்கு மட்டும் அன்றி அதை இன வாதம் என்று தமிழரே எதிர்த்ததற்கும் தட்டிக் கழித்ததற்கும் நிராகரித்ததற்கு மான சமஷ்டி நூற்றாண்டு இந்த 2026.

இந்த நூற்றாண்டு குறித்து நிலமும், புலமும் அறிந்த பத்திரிகையாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு எழுதிய கட்டுரை இலங்கை அரசியல் பரப்பில் அதிக கவன ஈர்ப்பை பெற்றுள்ளது. வரலாற்றை திரும்பிப் பார்ப்பதற்கும், கலந்துரையாடல்களுக்கும். தமிழர் அரசியலில் மாற்று அணுகுமுறை தேவை என்ற கருத்தையும் இன்றைய தலைமுறைக்கு சொல்லியிருக்கிறது.

1949இல் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக்கட்சி –சமஷ்டி கட்சி நிறுவப்பட்டு இதே சமஷ்டிக் கோரிக்கையை வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு ஒரு அரசியல் கோரிக்கையாக முன் வைத்தது. அந்த தமிழ்த்தரப்பு சமஷ்டி கருத்தியலும் முக்கால் நூற்றாண்டை கடந்து விட்டது. தமிழரசு கட்சியானது தற்போது எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தான் சமஷ்டியின் தந்தை என்ற கோதாவில் அற்ப அரசியல் செய்வதுடன் பண்டா– செல்வா ஒப்பந்தத்தை கிழித்தெறிந்ததையே அரசியல் முதலீடாக கொண்டிருக்கிறது.

சிங்கள, பௌத்தர்களின் எதிர்ப்பால் பண்டாரநாயக்கா 1957 யூலை 26 இல் ஒப்பமிடப்பட்ட, நகலை கிழித்தெறிந்ததை பிரச்சாரம் செய்யும் தமிழரசுக்கட்சி, முதலில் சமஷ்டி யோசனையை முன் வைத்தது ஒரு சிங்களத்தலைமை என்பதையும், அதை நிராகரித்தது தமிழர் தரப்பே என்பதையும் அடக்கி வாசிக்கிறது.

அண்மைய செய்திகள், பதிவுகளின் படி சமஷ்டி கோரிக்கையை கொண்டு இழுக்க புதிய அரசியல் அணுகுமுறை ஒரு மாற்று அரசியல் பாதை அவசியம் என்பதை தமிழரசுக்கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். பண்டாரநாயக்காவின் சமஷ்டி நூற்றாண்டை மையமாக வைத்து அதற்கான வேலைத் திட்டம் ஒன்றை இந்த வருடத்தில் ஆரம்பிக்க உள்ளேன் என்று தெரிவித்துள்ளார் சுமந்திரன். அவரது இந்த கருத்துக்கு அந்த வேலைத்திட்டம் குறித்து தெளிவாகவோ, ஆழமாகவோ பேசவில்லை. எப்படியாயினும் தமிழர் அரசியலில் ஒரு மாற்று அணுகுமுறை காலத்தின் கட்டாயம்.

எம்.ஏ.சுமந்திரனின் கருத்தில் தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியில் 'சமஷ்டி' குறித்து நிலவும் 'அச்சத்தை' போக்குவதும், 'தீர்வு' ஒன்றை எட்டும் நிலையில் அதற்கான சர்வஜன வாக்கெடுப்பில், அரசாங்க தரப்புடன் இணைந்து மேடையேறும் போது சமஷ்டிக்கான, சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றி பெறுவது ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல என்றும் அவர் கூற வருகிறார் என்றே கொள்ள வேண்டும்.

சிங்களக் கட்சி எதுவும் சமஷ்டி என்ற சொல்லை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகையால் பெயர்ப் பலகையில் தொங்கிக் கொண்டிருக்காமல் அர்த்தமுள்ள விதத்தில், மீளப்பெற முடியாத அதிகாரப்பகிர்வு முறையை அடைய வேண்டும். அதற்கு நிட்சயமாக எதிர்த்தரப்பு கட்சிகளின் ஆதரவையும் பெற வேண்டும்.

இந்தியா இந்தப்பிராந்திய வல்லரசு என்பதையும் தாண்டி ஒரு உலக வல்லரசாக மாறியுள்ளது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இதற்கான முக்கிய காரணம். மிக அண்டை நாடான இந்தியாவின் வளர்ச்சியை எமதாக்கி கொள்ள வேண்டும். அதற்கு இந்தியாவின் பங்களிப்பு எமது அரசியலிலும் கட்டாயமாக இருக்க வேண்டும். அது தமிழ் மக்களுக்கு ஒரு போதும் கேடாக அமையாது''.

சுமந்திரன்பத்தியாளர் சிவராசா கருணாகரன் உடனான நேர்காணல் கூறிய இரண்டு கருத்துக்களும் மிகவும் முக்கியமானவை மட்டும் அன்றி பிராந்திய அரசியல் ஜதார்த்தம் கொண்டவை. ஆனால் இந்தியாவை பயன்படுத்தல் என்பதில் அதன் வரையறையில் தமிழ்த்தேசிய பாராளுமன்ற அரசியல் பரப்புக்கு உள்ளேயும், வெளியேயும், புகலிடச் சூழலிலும் முரண்பாடான நிலைப்பாடுகள் உண்டு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதில் முக்கியமான இன்னொரு விடயம் என்னவெனில் சுமந்திரன் இந்தியாவை பயன்படுத்தல் என்ற கருத்தோடு தென்னிலங்கை தீவிர சிங்கள பௌத்த பேரினவாதத்தை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார் என்பது தான்.

சிங்கள மக்களுக்கு சமஷ்டி குறித்து இருக்கும் அச்சத்தை அகற்ற சுமந்திரனின் இந்தியாவை பயன்படுத்தல் எந்தளவுக்கு உதவப்போகிறது? அதுவும் இலங்கைக்கும் இந்தியாவுக்குமான உறவானது முற்றிலும் பொருளாதார நலன் சார்ந்த உறவாக நாளாந்தம் மாறிக்கொண்டிருக்கின்ற நிலையில், இனப்பிரச்சினை தீர்வுக்கான ஒரு அரசியல் அழுத்தம் இந்தியாவில் இருந்து எதிர்பார்க்கக்கூடியதா?

இதை சிங்கள தேசம் குறிப்பாக தென்னிலங்கை முற்போக்கு சக்திகள் கூட இந்திய அழுத்தத்தை எப்படி நோக்கப் போகிறார்கள்? சுமந்திரனின் 'இந்தியாவை பயன்படுத்தல்' என்ற கருத்து சிங்கள மக்களுக்கு மேலும் அச்சத்தை ஏற்படுத்தி சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் பக்கம் சிங்கள மக்களை அணி திரட்ட மாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இந்தியாவுக்கு இலங்கையின் பொருளாதார நெருக்கடி காலம், இயற்கை அனர்த்த நிவாரண முகாமைத்துவ உதவிக்காலம், சர்வதேச நாணய நிதிக்கு இலங்கைக்கு சார்பாக பிணை நின்றகாலம்.... என்ற பல வாய்ப்புகள் இனப்பிரச்சினை குறித்து குறைந்த பட்சம் அர்த்தமுள்ள தீர்வு குறித்து பேச பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஆனால் வடக்கு,கிழக்கு தமிழ்தேசிய அரசியல்வாதிகள் கொழும்புக்கு படையெடுத்து இந்தியப் பிரதிநிதிகளை சந்திக்கும் போது தமிழ் தேசியத்தின் பலவீன அரசியல் பற்றியே அதிகம் அறிவுறுத்திய இருக்கிறது.

இந்த பலவீனம் காரணமாகவும், கொழும்பின் பலம் காரணமாகவும் தான் டெல்லியிடம் ஈழத்தமிழர்கள் தங்கியிருக்கிறார்கள் என்பதை இந்திய வெளியுறவுத்துறை புரிந்து இருக்கிறதா? கொழும்பினதும், தமிழ்தரப்பினதும் பலவீனங்களை இதுவரை இந்திராகாந்தி, ராஜீவ்காந்தியினால் மட்டுமே பயன்படுத்த முடிந்திருக்கிறது. அதையும் புலிகளும், புலிக்கு பயந்த கட்சிகளும், அமைப்புக்களும், அவர்களை நியாயப்படுத்திய தாயக, புகலிட சக்திகளுமே கெடுத்தார்கள். பண்டாரநாயக்காவுக்கு ஒரு தமிழரான ஜேம்ஸ் இரட்ணம் போன்று ராஜீவ் காந்திக்கு ஒரு தமிழ் அமைப்பாக புலிகள் குறுக்கே நின்றார்கள். இதனால் சிங்கள தேசமே அனைத்துப் பயன்களையும் அள்ளியது. இந்த புள்ளியில் சுமந்திரனின் அது தமிழ் மக்களுக்கு ஒரு போதும் கேடாக அமையாது. என்ற வார்த்தைகளை அழுத்திக் கூற வேண்டியுள்ளது.

தமிழ் மக்களுக்கு விளைவிக்கப்பட்ட கேட்டுக்கு புலிகளும், ஜே.வி.பி.யும் பங்குதாரர்கள். இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கைக்கு எதிரான தங்கள் நடவடிக்கையை ஜே.வி.பி. இந்திய மேலாதிக்கத்திற்கு எதிரானது என்றும், இனவாதம் இல்லை என்றும் நியாயப்படுத்துவது அரசியல் அபத்தம். இன்றைய பிராந்திய, உலகப் பொருளாதார ஒழுங்கில் இந்திரா ராஜீவ்காந்தி காலங்கள் மீண்டும் உயிர்த்தெழப் போவதில்லை. அது மட்டுமின்றி இந்திய பொருளாதார மேலாதிக்கத்தை தவிர்த்து ஓடுவதை அநுர அரசாங்கத்தினாலும் நினைத்து பார்க்க முடியாது. சிங்கள, பௌத்த மேலாதிக்க அதிகாரத்தை பாதுகாக்க எந்த மேலாதிக்க சக்திகளோடும் கூட்டுச் சேர தயார் என்பதை நிரூபிக்க ஜே.வி.பி.-என்.பி.பி. அரசாங்கத்திற்கு சில மாதங்களே தேவைப்பட்டன.

எம்.ஏ.சுமந்திரனின் கடந்த 15 ஆண்டு கால பாராளுமன்றமன்ற அரசியல் உட்கட்சி ஜனநாயகம் மட்டும் அன்றி வெளிப்படைத்தன்மையும் அற்றது. அவர் கூறுகின்ற பெயர்ப் பலகையில் தொங்கிக்கொண்டிருக்காமல் என்கின்ற அந்த பலகைக்கு பின்னால் கஜேந்திர குமார் பொன்னம்பலத்திற்கும், மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனுக்கும் இடையிலான கருத்து மோதல் ஒழிந்து இருக்கிறது. இது ஒற்றையாட்சி ஏக்கயராட்சிய வரைவிலக்கண அரசியல் வித்துவ செருக்கு. ஏக்கய ராட்சியவுக்கு வேறு பெயர் சமஷ்டி என்று தமிழ்மக்களுக்கு காட்டும் அதேவேளை சிங்கள மக்களுக்கு அதை மறைக்கும் வெளிப்படைத் தன்மையற்ற அரசியல் ஏமாற்றே சுமந்திரன் கூறுகின்ற பலகை கதை. சிங்கள மக்களையும், அவர்களின் அரசியல் தலைமைகளையும் கூட்டாட்சிக்கு பதிலாக ஏக்கயராட்சிய என்ற வார்த்தையை பிரதியீடு செய்து ஏமாற்றலாம் என்று சுமந்திரன் நினைப்பது அரசியல் சிறுபிள்ளைத்தனம்.

இந்த ஒழித்து பிடித்து விளையாடும் அரசியலை விட்டு விட்டு சிங்கள மக்களின் நம்பிக்கையை இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு பெறவேண்டுமானால் அரசியல் நேர்மையுடன் தமிழரசுக்கட்சி – தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மற்றும் சகல தமிழ் கட்சிகளும், தங்கள் பங்குக்கு செய்ய வேண்டிய வேறு அரசியல் வேலைகள் நிறையவே உள்ளன. அதை அவர்கள் செய்யவேண்டும்.

(23ம் பக்கம் பார்க்க)

# தையிட்டி - கிவுல் - கரிநாள்

கடந்த வாரம் மூன்று ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. முதலாவது ஆர்ப்பாட்டம் தையிட்டியில். அது வழமையாக நடப்பது. இரண்டாவது ஆர்ப்பாட்டம், கிவுல் ஓயா அபிவிருத்தி திட்டத்திற்கு எதிரான நெடுங்கேணிப் போராட்டம். மூன்றாவது ஆர்ப்பாட்டம், 78ஆவது சுதந்திர தினம் என்று கூறப்படுவதை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்த பேரணி.

மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் நடந்த இந்த மூன்று ஆர்ப்பாட்டங்களையும் தொகுத்துப் பார்ப்போம்.

தையிட்டியில் கடந்த பௌர்ணமி நாளன்று மிகக்குறைந்த எண்ணிக்கையானவர்களே காணப்பட்டார்கள். அதிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்களே அதிகம். ஆனால் கடந்த ஆண்டின் இறுதியில் நடந்த ஆர்ப்பாட்டங்களில் அதிகளவு எண்ணிக்கையானவர்கள் அங்கே வந்திருந்தார்கள். அந்த ஆர்ப்பாட்டங்களை தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேச சபை முன் நின்று ஒழுங்கமைத்தது. அது ஒப்பீட்டளவில் அனைத்துக் கட்சி பரிமாணத்தைக் கொண்ட ஒரு போராட்டம். அரசியல்வாதிகளும் செயல்பாட்டாளர்களும் அங்கே காணப்பட்டார்கள்.

அடுத்த போராட்டம், கிவுல் ஓயா அபிவிருத்தி திட்டத்திற்கு எதிரானது. இந்த போராட்டத்தை பெருளவுக்கு ஒருங்கிணைத்தது தமிழரசு கட்சிக்குள் காணப்படும் சுமந்திரன் அணியைச் சேர்ந்தவர்கள். சுமந்திரன் அதனை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு தன் கட்சிக்காரர்களும் உட்பட பெருமளவிலான ஆட்களை அங்கே கொண்டு வருவதற்காக உழைத்தார். ஆயிரத்தை தாண்டாத ஜனத்தொகை அங்கே வந்திருந்தது. தமிழரசுக் கட்சியோடு இப்பொழுது உறவாடி வரும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் அங்கு காணப்பட்டார்கள்.

ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை மையமாகக் கொண்ட தமிழ்த் தேசியப் பேரவையைச் சேர்ந்தவர்களை அங்கே காண முடியவில்லை. நெடுங்கேணிப் போராட்டம் நடந்து கொண்டிருந்த அதே காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ரில்கோ விருந்தினர் விடுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் கடல் தொழிலாளர் சங்கங்களுக்கும் இடையே ஒரு சந்திப்பு இடம் பெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் அந்தச் சந்திப்பில் காணப்பட்டார்கள்.

நீரைக் கொடுத்து நிலத்தைப் பறிக்கும் நீர் முகாமைத்துவத் திட்டமாகிய கிவுல் ஓயாத் திட்டதுக்கு எதிராகத் தமிழ் மக்கள் போராட வேண்டும். எனவே அந்தப் போராட்டத்திற்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. அதேசமயம் அதற்குள் உட்க்கட்சிப் போட்டிகள் சார்ந்த உள்நோக்கங்களும் உண்டு.

சுமந்திரனைப் பொறுத்தவரை இது போன்ற போராட்டங்களை ஒழுங்குபடுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். அவருடைய எதிரணி அவரை தமிழ்த் தேசிய நீக்கம் செய்பவர் என்று குற்றம் சாட்சி வருகிறது. எனவே தான் நிலப் பறிப்புக்கும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கும் எதிரான மக்கள் போராட்டங்களை ஒருங்கிணைப்பார் என்பதனை அவர் நிரூபிக்க வேண்டியிருக்கிறது. மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர் கட்சிக்குள் தன்னுடைய தவிர்க்க முடியாமையை நிரூபிப்பதற்காக எல்லாவித மான முயற்சிகளையும் முன்னெடுத்து வருகிறார். அந்த அடிப்படையில் ஒரு பதில் செயலாளராக கட்சியின் கீழ் மட்டக் கட்டமைப்பை அவர் பெருமளவுக்கு தன்னால் கையாளப்படத் தக்கதாக வடிவமைத்தும் வருகிறார். அதன் விளைவாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அவர் முன்னைய தேர்தலை விட அதிக முன்னேற்றங்களைக் காட்ட முடிந்தது.




ஆனால் தமிழரசுக் கட்சியின் வாக்குத் தளம் எனப்படுவது தனிய அதன் கீழ்மட்ட கட்டமைப்புப் பலம் மட்டுமல்ல. அதைவிட ஆழமான பொருளில் அது தமிழ் இன உணர்வுகளின் மீது கட்டியெழுப்பப்பட்ட ஒரு வாக்குத் தளம். அந்த வாக்குத்தளத்தைக் கைப்பற்றுவது என்று சொன்னால் தன்னை புத்திசாலியான ஒரு தலைவராகக் காட்டிக்கொண்டால் மட்டும் போதாது. அதை விட முக்கியமாக தமிழ் இன உணர்வுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தலைவர் என்றும் நிரூபிக்க வேண்டும். எனவே இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு உண்டு.

அடுத்த உள்நோக்கம், தமிழ்த் தேசியப் பேரவையைத் தனிமைப்படுத்துவது. அண்மை மாதங்களாக எக்கிய ராஜ்ய என்ற தீர்வு முன் வரைபை முன் வைத்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அவர் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகிறது. இதனால் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான உறவுகள் முன்னரை விட அதிகம் பகை நிலைக்குச் சென்று விட்டன. அதோடு,சிறீதரனை முன்னணி நெருங்கி வருவதும் சுமந்திரனை ஆத்திரப்படுத்துகிறது.

கட்சிக்குள் காணப்படும் உள் முரண்பாடுகளை முன்னணி கையாள முயற்சிக்கிறது என்று அவர் நம்புகிறார். இப்படிப்பட்டதோர் பின்னணிக்குள் தான், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு ஏதோ ஓர் இணக்கத்துக்கு வர அவர் முயற்சிக்கிறார். அதன் மூலம் பேரவையைத் தனிமைப்படுத்தலாம் என்றும் சிந்திக்கிறார். அதற்கு இது போன்ற போராட்டங்கள் தேவை.

அடுத்த உள்நோக்கம், மாகாண சபைத் தேர்தல் என்று ஒன்று நடந்தால், அதில் தமிழ் மக்களின் பாரம்பரிய வாக்களிப்புக் கோலத்தின் அடிப்படையில் சிந்தித்தால், தமிழரசுக் கட்சிக்குத் தான் வெற்றி வாய்ப்புகள் அதிகம். அந்த வாய்ப்புகளை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு உறவை வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதே சமயம் அந்த உறவு தேர்தலில் தமிழ்த் தேசியப் பேரவையை தனிமைப்படுத்த உதவும்.

மேற்சொன்ன உள்நோக்கங்களும் கிவுல் ஓயா போராட்டத்தில் பின்னணியில் இருந்தன. என்றாலும் நிலப் பறிப்புக்கும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கும் எதிராக தமிழ்த் தேசிய உணர்வுகளை கொதி நிலையில் வைத்திருப்பது என்று பார்த்தால் அந்தப் போராட்டத்திற்கு காலகட்ட முக்கியத்துவம் உண்டு.

மேலும் அந்தப் போராட்டத்தை ஒழுங்கமைத்தது சுமந்திரன் அணி என்ற போதிலும் அதில் சிறீதரன் அணியும் கலந்து கொண்டது. ஒரு பொது விடயத்தில் உட்கட்சி முரண்பாடுகளை ஒதுக்கி விட்டு சிறீதரன் அவ்வாறு கலந்து கொண்டமை வரவேற்கத்தக்கது.

ஆனால் அந்தப் போராட்டத்தின் பின்னணியில், அடுத்தடுத்த நாள், சிறீதரனுக்கு எதிரான மற்றொரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய நாடாளுமன்றக் குழுத் தலைமைப் பதவி பறிக்கப்பட்டு விட்டது.

கிவுல் ஓயா போராட்டத்திற்கு அடுத்தடுத்த நாள், அதாவது 04ஆம் திகதி பல்கலைக்கழக மாணவர்கள் கரிநாள் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார்கள். அது தொடர்பாக அவர்கள் கட்சி முக்கியஸ்தர்களை சந்தித்தும் வந்தார்கள். ஆனால் இந்தச் சந்திப்புகளில் சுமந்திரன் சிவஞானம் போன்றவர்கள் உள்ளடக்கப்படவில்லை என்று தெரிகிறது. அதனால் கிளிநொச்சி ஆர்ப்பாட்டத்தில் சுமந்திரன் சிவஞானம் போன்றவர்களைக் காண முடியவில்லை. எனினும் ஏனைய தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர்கள் பலர் அங்கே காணப்பட்டார்கள். கிளிநொச்சியில் உள்ள சுமந்திரன் அணியைச் சேர்ந்தவர்களும் காணப்பட்டார்கள். ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சிலரும் காணப்பட்டார்கள்.

அவர்களை விட காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் சங்கங்களைச் சேர்ந்தவர்களும், ஏற்கனவே இது போன்ற ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளும் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களும் அங்கு அதிகமாகக் காணப்பட்டார்கள். கிழக்கிலும் அதுபோன்ற ஓர் ஆர்ப்பாட்டம் நடந்தது. அதாவது கரிநாள் போராட்டம் ஒப்பீட்டளவில் தாயகம் தழுவியதாகக் காணப்பட்டது. இப்படிப் பார்த்தால் கடந்த கிழமை மிகக்குறுகிய நாள் இடைவெளிக்குள் நடந்த மூன்று ஆர்ப்பாட்டங்களிலும் பெரியது கிளிநொச்சி ஆர்ப்பாட்டந்தான். அது ஒப்பீட்டளவில் பெரியது, எழுச்சிகரமானது. வடக்கு கிழக்காக தாயகம் கழுவியதாக காணப்பட்டது. அனைத்துக் கட்சி பரிமாணத்தை அதிகமாகக் கொண்டது. யாழ் பல்கலைக்கழகத்தின் புதிய மாணவர் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் காணாமல் ஆக்கப்பட்டவருக்காகப் போராடும் அமைப்புக்களும் இந்தப் போராட்டத்தை ஒருங்கிணைத்திருந்தார்கள்.

மாணவர்கள் முன்னணிக்கு வரும் பொழுது கட்சி பேதங்களைக் கடந்து பெருந் திரளைக் கொண்டு வர முடியும் என்பதற்கு அது ஆகப்பிந்திய ஓர் உதாரணம் ஆகும். கட்சிகளால் பிரிக்கப்பட்டிருக்கும் மக்களும் தொண்டர்களும் கட்சி கடந்து ஒருங்கிணைக்கப்படும் போது இனமாகத் திரள்வார்கள் என்ற நம்பிக்கையைப் பலப்படுத்திய ஆர்ப்பாட்டம் அது.



# 78 ஆண்டு கால சுதந்திரம்?

இலங்கைத் தீவு பிரித்தானியரிடமிருந்து விடுபட்டு 78 ஆண்டுகள் ஆகிறது. இலங்கைத் தீவின் ஒரு பகுதி மக்கள் அதனை சுதந்திர தினம் என்று கொண்டாடுகிறார்கள். ஆனால் தமிழ் மக்களில் கணிசமானவர்கள் அதனை கரிநாள் என்று கருதுகிறார்கள். தங்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்றும் தமிழ் மக்கள் நம்புகிறார்கள்.

கடந்த 4 ஆம் தேதி யாழ்ப்பாணத்தில் ஒப்பீட்டளவில் அதிகம் சிங்கக் கொடிகளை காணக் கூடியதாக இருந்தது. வட மாகாண ஆளுநர் அலுவலகம் வழமையை விட வித்தியாசமாக பெருமெடுப்பில் அந்த நாளைக் கொண்டாடியது.

ஆனால் அதே நாளில் கிளிநொச்சியில் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம்பெற்றன. அது சுதந்திர நாள் அல்ல கரிநாள் என்று பிரகடனப்படுத்தி யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்புகளும் இணைந்து அந்த ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குபடுத்தின. அதே நாளில் பிற்பகல் யாழ்ப்பாணம் வைஎம்சிஏ மண்டபத்தில் ஒரு கருத்தரங்கை சிறீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி ஒழுங்குப்படுத்தியிருந்தது. அக்கருத்தரங்கின் தலைப்பு என்று தணியும் இந்த சுதந்திர தாகம்.

சிங்கள மக்கள் சுதந்திர நாள் என்று கொண்டாடுவதை ஏன் தமிழ் மக்கள் கரி நாள் என்று அழைக்கிறார்கள்? தமிழ் மக்கள் ஏன் அதனை சுதந்திர தினமாக கருதவில்லை? அதை விட முக்கியமாக அது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, சிங்கள மக்களுக்கும் அதன் மெய்யான பொருளில் சுதந்திர தினம் தானா?

இல்லை. அண்மையில் பன்னாட்டு நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்திற்கு பாராட்டு தெரிவித்திருந்தது. பன்னாட்டு நாணய நிதியம் அல்லது உலக வங்கி ஓர் அரசாங்கத்தைப் பாராட்டுகிறது என்று சொன்னால் அதன் பொருள் என்ன? அந்த உலகளாவிய நிதி அமைப்புகளின் நிகழ்ச்சி நிரலுக்கு கீழ்படிவாக அந்த நாடு செயல்படுகிறது என்று பொருள்.

அவ்வாறு பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு கீழ்ப்படியும் ஒரு நாடு பொருளாதார அர்த்தத்தில் தன்னை ஒரு சுதந்திரமான நாடு என்று அழைத்துக் கொள்ள முடியாது. இது முதலாவது.

இரண்டாவது ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின் இந்த நாட்டின் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா 99ஆண்டு கால குத்தகைக்கு வாங்கி விட்டது. அது போலவே கொழும்பு துறைமுகத்திற்கு அருகே சீனா ஒரு துறைமுகப் பட்டினத்தைக் கட்டி வருகிறது.

இந்த பிராந்தியம் இந்தியப் பேரரசின் செல்வாக்கு மண்டலத்துக்குள் காணப்படுவது. அவ்வாறு இந்தியப் பேரரசின் செல்வாக்கு மண்டலத்தில் காணப்படும் ஒரு தீவில், இங்கிருந்து கிட்டத்தட்ட 400 கடல் மைல் தொலைவில் உள்ள மற்றொரு வெளிப் பிராந்தியப் பேரரசு ஆகிய சீனா பலமாக காலூன்றி விட்டது.

இந்தியா அதனைச் சகித்துக் கொள்ளுமா? இல்லை. இந்தியாவும் தன் பிடியை இங்கு எப்படிப் பலப்படுத்தலாம் என்று தான் சிந்திக்கும். யாழ்ப்பாணத்தின் தீவுகளில் மீளப் புதுப்பிக்கும் எரிசக்தி திட்டங்களை இந்தியா சீனாவிடமிருந்து தன் வசப்படுத்திக் கொண்டு விட்டது. கச்சதீவையும் அம்பாந்தோட்டையைப் போல லீசிங்கில் கேட்டால் என்ன என்ற ஓர் உரையாடல் இந்திய உயர் மட்டத்தில் உண்டு என்று தெரிகிறது. தவிர மன்னாருக்கும் ராமேஸ்வரத்திற்கும் இடையே ஒரு பாலத்தை கட்டுவதும் இந்தியாவின் விருப்பம் என்று தெரிகிறது.

இவை இதனை காட்டுகின்றன? இந்தச் சிறிய தீவு இரண்டு பேரரசுகளின் இழிவிசைகளுக்குள் சிக்கியிருக்கிறது என்பதைத் தான். அதாவது கலைத்துவமாகச் சொன்னால் இச்சிறிய தீவு இப்பொழுது பேரரசுகள் பங்கிடும் ஓர் அப்பம். இந்த அப்பத்துக்குள் வாழும் ஓர் இனம் தன்னை மட்டும் இறமையும் சுதந்திரமும் உள்ளதாக எப்படிக் கருதிக் கொள்ளலாம்? இது இரண்டாவது.

மூன்றாவதாக 1948இல் இருந்து இன்றுவரையிலுமான 78ஆண்டுகால பகுதிக்குள் சரி அரை வாசிக்கும் கூடுதலான காலகட்டம் அதாவது 46 ஆண்டுகள் இலங்கைத் தீவு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தான் ஆட்சி செய்யப்பட்டு வருகிறது. பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட கூறுவது போல, காலனித்துவ ஆட்சிக்குப் பின் 1971 இலிருந்து இன்று வரையிலும் இலங்கைத் தீவு அசாதாரண சட்டங்களால் தான் ஆட்சி செய்யப்படுகிறது. இவ்வாறு அசாதாரண சட்டங்களே சாதாரண சட்டங்கள் போல நடைமுறையில் உள்ள ஒரு சிறிய தீவு தன்னை சுதந்திரமான தீவு என்று அழைத்துக் கொள்ளலாமா?

இல்லை. சாதாரண சட்டங்களின் கீழ் இந்த நாட்டை ஆள முடியவில்லை என்பது இந்த நாடு அசாதாரண சூ ழ்நிலைகளின் கீழ் உள்ளது என்பதைக் காட்டுகிறது. அந்த அசாதாரணச் சூழல் எவ்வாறு உருவாகியது? சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள்,மலையக மக்கள் ஆகிய நான்கு மக்கள் கூட்டங்களும் கௌரவமான விதத்தில், பொருத்தமான விதத்தில் இந்தச் சிறிய தீவைப் பகிர்ந்து கொள்ள முடியவில்லை என்பதால்தான் நாட்டில் பல தசாப்த காலமாக அசாதாரண நிலை நிலவுகிறது.

சிங்களத் தலைவர்கள் கூறுவார்கள் நாட்டில் ஜனநாயகம் உண்டு என்று. ஆனால் ஜனநாயகம் என்பது வாக்களிப்பு உரிமை மட்டுமல்ல. அதைவிட ஆழமான பொருளில், தீர்மானம் எடுக்கும் அதிகாரமும் தான். சிங்கள மக்களை பெரும்பான்மையாக கொண்ட ஒரு நாடாளுமன்றத்தில் தமிழ் மக்கள் மிஞ்சி மிஞ்சிப் போனால் 22 ஆசனங்களைத்தான் இதுவரை பெற்றிருக்கிறார்கள். அப்படியென்றால் எப்படி தீர்மானத்தில் பங்கெடுப்பது? இதுதான் பிரச்சினையே.

இவ்வாறு சிங்கள மக்களைத் தவிர ஏனைய சிறிய மக்கள் கூட்டங்கள் அரசியல் தீர்மானங்களில் முடிவெடுக்கும் அதிகாரம் இல்லாதவர்களாகக் காணப்படும் ஒரு தீவு தன்னை இறமையுள்ளது என்றும் சுதந்திரமானது என்றும் அழைத்துக் கொள்ளலாமா?

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக, தங்களுக்கு அரசியல் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் வேண்டும் என்று கேட்டுத்தான் கடந்த 78 ஆண்டுகளுக்கு மேலாகப் போராடி வருகிறார்கள். அவர்களை நசுக்குவதற்குத் தான் நாடு அசாதாரண சட்டங்களின் கீழ் தொடர்ச்சியாக ஆளப்பட்டு வருகிறது. எனவே தமிழ் மக்களின் சுதந்திரத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், சிங்கள மக்களும் நிம்மதியாக இருக்க முடியாது. முஸ்லிம் மக்களும் நிம்மதியாக இருக்க முடியாது. மலையக மக்களும் நிம்மதியாக இருக்க முடியாது என்பது தான் கடந்த 78 ஆண்டுகால அனுபவம் ஆகும்.

அதிலும் குறிப்பாக கடந்த 78 ஆண்டுகளில் இலங்கைத் தீவில் மூன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் வெளிநாட்டுப் படைகள் தரையிறங்கியுள்ளன. முதலாவது சந்தர்ப்பம் ஜேவிபியின் முதலாவது ஆயுதப் போராட்டம். 1971 இல். இரண்டாவது சந்தர்ப்பம், 1987இல் வடமராட்சியைக் கைப்பற்றும் படை நடவடிக்கையின் போது இந்தியா தனது விமானங்களை அனுப்பி உணவுப் பொதிகளை தமிழ்ப் பகுதிகளுக்குள் போட்டது. அங்கேயே இலங்கையின் இறைமை மீறப்பட்டு விட்டது. சுதந்திரம் சோதனைக்கு உள்ளாகி விட்டது.

அடுத்தது 2004ஆம் ஆண்டு நோர்வையின் சமாதான முயற்சிகள்.இந்த முயற்சிகளின் போதும் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு கண்காணிப்புக் குழு ஒன்று நாட்டுக்குள் இறங்கியது. அதுவும் படைப் பரிமாணத்தைக் கொண்ட ஒரு கட்டமைப்புத் தான்.

இவ்வாறு வெளிநாட்டுப் படைகள் அல்லது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுக்கள் அல்லது ஐநாவின் சிறப்புத் தூதுவர்கள் நாட்டுக்குள் வருகிறார்கள் என்று சொன்னால் இந்த நாடு முழு அளவுக்கு சுதந்திரமாக உள்ளது என்று எப்படிக் கூறலாம்? திம்புவில் தொடங்கி ஒஸ்லோ வரையிலுமாக பல்வேறு நாடுகளின் தலைநகரங்களில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தும் பொழுதே விவகாரம் நாட்டுக்கு வெளியே போய்விட்டது. அதை இலங்கைக்குள் தீர்க்க முடியவில்லை. இது பன்னாட்டுத் தலையீட்டைக் காட்டுகிறது. இவ்வாறு பன்னாட்டு சமூகம் ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடும் போது அந்த நாடு எப்படித் தன்னை சுதந்திரமான நாடு என்று கூறலாம்?

ஒவ்வொரு ஆண்டும் இலங்கை அரசாங்கம் ஐநா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் உலகத்துக்கும் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் மலையக மக்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டியிருப்பதை சுதந்திரம் என்று எடுத்துக் கொள்ளலாமா?

அதை விடக் குறிப்பாக யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததாகப் போற்றப்படுகின்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அமெரிக்கக் கண்டத்துக்குப் போக முடியாது. போரை முன்னெடுத்த முக்கிய தளபதிகள் அமெரிக்கக் கண்டத்துக்கு அல்லது ஐரோப்பாவின் சில நாடுகளுக்குப் போக முடியாது.அப்படியென்றால் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை தோற்கடித்ததன் மூலம் இந்த நாடு உறுதிப்படுத்திக் கொண்ட, பாதுகாத்துக் கொண்ட சுதந்திரத்தின் பொருள் என்ன?

எனவே கடந்த 78 ஆண்டுகளையும் தொகுத்துப் பார்க்கும் போது தெளிவாகத் தெரியும் படம் என்ன? சிங்கள மக்களும் சுதந்திரமாக இல்லை தமிழ் முஸ்லிம் மலையக மக்களும் சுதந்திரமாக இல்லை. இலங்கைத் தீவு இப்பொழுது பேரரசுகள் பங்கிடும் ஓர் அப்பம். இங்கே தமிழ் மக்களுக்குச் சுதந்திரம் இல்லையென்றால் சிங்கள மக்களுக்கும் இல்லை. முஸ்லிம் மக்களுக்கும் இல்லை. மலையக மக்களுக்கும் இல்லை.







## காணி விற்பனை

சாவகச்சேரி நுணாவிலில் கண்டி வீதி ஓரமாக 4 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து மேற்குப் புறமாக ஒன்றரை மைல் அளவு தூரத்தில் கண்டி வீதியும் இராசையர் வீதியும் சந்திப்பில் அமைந்துள்ளது. விலை விபரம் பேசித் தீர்க்கப்படும். தொடர்புகளுக்கு 416 5057876


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பயணங்கள் சாதகமான பலன் தரலாம். குடும்பத்தில் வீண் பிரச்னை ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கை துணையின் செயல்கள் உங்களுக்கு அதிருப்தியை ஏற்படும். பிள்ளைகள் நீங்கள் சொல்வதை கேட்டு நடப்பது ஆறுதலை தரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளுக்கான தடைகள் அகலும்





ரிஷபராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். அடுத்தவர்களுக்காக உதவிகள் செய்வதில் உற்சாகம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். குடும்பத்தில் சந்தோஷமும் மன நிம்மதியும் இருக்கும். உறவினர்கள், நண்பர்களின் ஆதரவும் கிடைக்கும். நிதானமாக பேசுவது நல்லது.





மிதுனராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. கணவன் மனைவிக்கிடையே மன மகிழ்ச்சி ஏற்பட அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துவது நன்மையை தரும். வழக்கு விவகாரங்களில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் அதிகப்படி வருமானம் இருக்கும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான உறவு காணப்படும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பாடுபடுவீர்கள். தாய், தந்தையரின் உடல் நிலையில் கவனம் தேவை.





சிம்மராசி அன்பர்களே! தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பூமி வீடு மனையால் லாபம் ஏற்படும். சுபகாரியங்கள் நல்லபடியாக நடக்கும். அடுத்தவர்கள் மூலமாக நடக்க வேண்டிய காரியங்கள் நல்லபடியாக நடக்கும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள்




கன்னிராசி அன்பர்களே! வீண் செலவுகள் குறையும். பணவரத்து அதிகரிக்கும். எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். அடுத்தவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டி இருக்கும். சொத்துக்களை வாங்கும் போதும், விற்கும்போதும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப்படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.




துலாம்ராசி அன்பர்களே! மனதிடம் அதிகரிக்கும். சுபச்செலவுகள் வந்து சேரும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசும்போது கவனம் தேவை. குடும்பாதிபதி சுக்கிரன் ராசியில் இருக்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே சிறு பூசல்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளிடம் நிதானமாக பேசுவது நல்லது. தொழில் ஸ்தானத்தை புதன் பார்ப்பதால் சிறு பிரச்னைகள் தோன்றி மறையும்.





விருச்சிகராசி அன்பர்களே! சுபச் செலவுகள் அதிகமாகும். வீண் பேச்சை குறைப்பது நன்மை தரும். அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தினரது செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம். நிதானத்தை கடைபிடிப்பது வீண் பிரச்னை ஏற்படாமல் தடுக்கும். வாழ்க்கை துணை ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நன்மை தரும். எதைப் பற்றியும் விவாதிப்பதை தவிர்ப்பது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! கடும் முயற்சிக்கு பிறகு எந்த ஒரு காரியத்திலும் லாபம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். தொலை தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக வந்து சேரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் அவ்வப்போது ஏதாவது சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டு மறையும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம். எதிர்ப்புகள் விலகும். காரிய தடைகள் நீங்கும். வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தடைபட்டிருந்த வீடுப் பணிகள் நிறைவடையும்.




கும்பராசி அன்பர்களே! காரியங்களில் இருந்த சுணக்க நிலை மாறும். முயற்சிகளில் நல்ல பலன் காண்பீர்கள். சகோதரர்கள் வழியில் இருந்த பிரச்னைகள் நீங்கும். குடும்பத்தினரின் செயல்கள் நன்மை அளிக்கக்கூடிய வகையில் இருக்கும். எந்த விஷயத்தையும் கணவன், மனைவிக்கிடையே திட்டமிட்டு செய்வது நன்மை தரும். குழந்தைகள் உங்கள் சொற்படி கேட்டு நடப்பது மனஅமைதியை தரும்.




மீனராசி அன்பர்களே! நீங்கள் செய்யும் காரியங்கள் வெற்றியை தரும். சாதூர்யமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். அனுபவப்பூர்வமான அறிவுத்திறன் அதிகரிக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் மனம் மகிழும்படியான நிகழ்ச்சி நடக்கும். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்யம் மேம்படும்.

**வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.**

# மீண்டும் தலை தூக்கும் சிங்கள பௌத்த

(18ம் பக்கத் தொடர்ச்சி) நாமல் ராஜபக்சவை பிரதிநிதித்துவம் செய்யும் முகாம் குறித்த ஒரு குறிப்பு இது இலங்கையில் மீண்டும் 'ராஜபக்ச சித்தாந்தம்' புத்துயிர்ப்படைந்து வரு வதன் ஆபத்து குறித்து Colombo Telegraph இணைய இதழில் அஷான் வீரசிங்க எழுதியிருக்கும் கட்டுரையில் இப்படி குறிப்பிடுகிறார்:

மஹிந்த சித்தாந்தம் என்பது மஹிந்த ராஜபக்ச என்ற தனி மனிதர் சிந்திக்கும், செயல்படும் விதம் மட்டுமல்ல. அது நமது சமூகத்தின் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒரு பிரிவினர் தம்மைச் சூழ உள்ள உலகை நோக்கும் கண்ணாடியாகவும் உருவாகியிருக்கிறது.

நாகரிகத்தின், பண்பாட்டின் அடிப்படை அளவுகோல்களை கூட மீறும் இந்த முதிர்ச்சியடையாத சிந்தனைப் போக்கை கண்மூடித்தனமாக அரவணைத்துக் கொண்டிருக்கும் ஒரு கூட்டத்தினர் இன்னும் எம்மத்தியில் இருந்து வருகிறார்கள் என்ற விடய த்தை அவர்கள் முன்வைத்து வரும் தீவிரவாதக் கருத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

போலி நம்பிக்கை, மத துஷ்பிரயோகம், மாயை, போலி தேசாபிமானம் மற்றும் இனவாதம் போன்ற நாகரிகத்துக்கு முரணான ஏராளமான பண்புக் கூறுகளைக் கொண்டிருக்கும் இந்தச் சித்தாந்தம் நமது சமூகத்திலிருந்து களையப்பட அல்லது முறியடிக்கப்படுதல் வேண்டும். மீண்டும் ஒருமுறை மஹிந்த ராஜபக்சைவை தோற்கடிக்க வேண்டிய அரசியல் தேவைக்காக மட்டுமல்லாமல் எதிர்கால தலைமுறைகள் குறித்து சிந்தித்து அவ்வாறு செய்ய வேண்டிய சமூக கலாச்சாரப் பொறுப்பொன்றும் எமக்கு இருந்து வருகிறது.

# ஶ்ரீதரன் தமிழரசில் இன்னொரு இராஜதுரையா?

(16ம் பக்கத் தொடர்ச்சி) பாராளுமன்ற குழுத்தலைவர் பதவியில் இருந்து சிறிதரனை கட்சி நீக்க முடியும். ஆனால் அது பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்மதம் இன்றி இடம்பெற்றுள்ளது. ஆனால் ஞா. சிறிநேசன் எம்.பி.யைத் தவிர இது பற்றி பேச மற்றைய ஏழு பேரும் தயாரில்லை. ஏனெனில் சுமந்திரனின் ஜனநாயகம் அவர்களை கணுவில் வளையப் போட்டிருக்கிறது. அரசியல் அமைப்புச் சபை உறுப்பினர் பதவியை சிறிதரன் விரும்பி விலகினால் அன்றி அதை பறிக்க முடியாது என்பது சுமந்திரனுக்கு தெரியாததல்ல. அந்த பதவி முக்கியமானதும் அல்ல. ஆனால் அரசியல் அமைப்பு சபையில் சிறிதரனின் நிலைப்பாட்டை முன்னிறுத்தி பாராளுமன்ற குழுத்தலைவர் பதவியை பறித்து அதை சாணக்கியனுக்கு வழங்கி பாராளுமன்றக்குழுவை முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதே சுமந்திரன் அணியின் இலக்கு. அது அடையப்பட்டிருக்கிறது.

சி.சிறிதரன் எம்.பி. மீதான குற்றச்சாட்டு அவர் எட்டு தடவைகள் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்தார் என்பதும், முக்கியமாக இராணுவப் பிரிவு கணக்காய்வாளர் ஒருவரை கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்க ஆதரவளித்தார் என்பதாகும். இந்த குழுவில் அரசாங்கம் தான் சிபாரிசுகளை செய்கிறது. அதற்காக அனைத்து சிபாரிசுகளையும் சிறிதரன் நிராகரிக்க வேண்டும் என்று தமிழரசு எதிர்பார்க்க முடியாது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நியமனங்கள் தமிழ்த் தேசிய அரசியலுக்கு அப்பால் நோக்கப்பட வேண்டியவை. அதை செய்வதற்கான உரிமை சிறிதரனுக்கு இருக்கிறது. எந்த சிபாரிசை ஆதரிப்பது எந்த சிபாரிசை எதிர்ப்பது என்று தமிழரசுக்கட்சி தீர்மானிக்க முடியாது. ஏனெனில் சிறிதரன் தமிழரசுக்கட்சியை மட்டும் பிரதிநிதித்துவம் செய்யவில்லை. ஆனால் சர்ச்சைக்குரிய கணக்காய்வாளர் நாயக நியமனத்தில் அரசாங்கமும் அரசி யல் செய்தது என்பது வெளிப்படையானது. கணக்காய்வாளர் நாயகம் அலுவலகத்தில் ஓய்வு பெற்று சென்றவருக்கு பின்னால் தகுதி, சேவைமூப்பு, அனுபவம் என்பன வற்றின் அடிப்படையில் ஒருவரல்ல ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருக்கின்ற பொழுது இராணுவ சேவையில் இருந்து ஒரு கணக்காய்வாளரை நியமிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. இதற்காகவே எதிர்கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களும் ஜனாதிபதியின் நிலைப்பாட்டை எதிர்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

ஆனால் இந்த நிர்வாக ஒழுங்கீனத்தை முதன்மைப்படுத்தாது தமிழ்த்தேசிய கட்சிகள் இராணுவம் என்ற கண்ணாடியை மட்டும் போட்டுக் கொண்டு எதிர்க்கின்றனர். அதுவல்ல இங்கு பிரச்சினை ஜே.வி.பி. தனது கட்சியின் ஆதரவாளர் ஒருவரை, ஒப்பீட்டளவில் சேவை மூப்பு, தகுதி, அனுவம் குறைந்த ஒருவரை நியமித்து கணக்காய்வாளர் நாயகம் அலுவலகத்தை கட்சி அரசியலின் கீழ் கொண்டு வர முயற்சித்ததே பிரச்சினை. இந்த காரணங்களுக்காக சிறிதரன் அதை எதிர்த்து இருக்க வேண்டுமே ஒழிய இராணுவ அதிகாரி என்பதற்காக அல்ல. இது விடயமாக சிறிதரனும் பேசவில்லை, சுமந்திரனும் பேசவில்லை .கஜேந்திரகுமாரும் பேசவில்லை. ஏனெனில் இராணுவம் என்ற வார்த்தையே தமிழ்த்தேசிய அரசியலில் தாரகமந்திரம். எது எவ்வாறாயினும் சுமந்திரன், சாணக்கியன் வலையில் சிறிதரன் சிக்கியுள்ளார். சிறிதரனை கட்சியில் இருந்து கழட்டி விட்டால் யாழ்ப்பாணத்தில் சுமந்திரனுக்கு உள்ள மிகப்பெரும் தமிழ்த் தேசிய தடை அகற்றப்பட்டு விடும் என்று சுமந்திரன் கூட்டம், இவ்வாறான உட்கட்சி ஜனநாயகம் அற்ற முடிவுகளை நியாயப்படுத்து வதும், மௌனம் சாதிப்பதும் ஒன்று தான். இதையே கிழக்கின் ஐந்து தமிழரசு பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் இந்த நிலைப்பாடு சாணக்கியனை பலமாக்கவே உதவும்.

இப்பகுதியில் ஏற்கெனவே ஒரு தடவை குறிப்பிட்டது போன்று பாராளுமன்ற குழுத்தலைவர் பதவி ஆரம்பத்திலேயே சாணக்கியனுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதை பதிவிட்டதற்காக பிரதேச வாதம் பேசுகிறோம் என்றவர்கள், இப்போது இனிப்பு வழங்குகிறார்கள். அவர்களை பிரதேச வாதம் பேசுகிறார்கள் என்று கூறுகிறார் அரியநேந்திரன். ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கிழக்கில் தமிழரசுக்கட்சியில் இருக்கிறார்கள். மேலும் சேவை மூப்பைத தவிர எல்லா வகையிலும் தகுதியானவராகவும், பாராளுமன்ற நடைமுறைகளை கையாளக் கூடிய ஆற்றல் உள்ளவராகவும் சாணக்கியன் இருக்கிறார். ஆனால் தமிழரசுக்கட்சியின் வெடிப்புக்கு ஒட்டுப்போடக்கூடிய ஒருவராக சாணக்கியன் இல்லை. சுமந்திரனின் அரசியல் குணாம்சங்களையே அவரும் கொண்டு இருப்பதால் வடக்கில் மட்டும் அல்ல கிழக்கிலும் தமிழரசு சிதறப் போகிறது என்பதே ஜதார்த்தம். விலகினேனா விலக்கப்பட்டேனா....? என்று கேட்டார் செ.இராசதுரை. விலகேன் முடிந்தால் விலக்குங்கள்... பார்க்கலாம் என்று சவால் விடுகிறார் சி.சிறிதரன். இந்த அரசியலுக்கு வயது எழுபத்தியேழு என்ற பெருமை வேறு. பிறப்பின் அடிப்படையிலான மூப்பு அல்ல அரசியல் சாணக்கியம். தமிழரசுக்கட்சி தன்னை புதுமைப் படுத்த வேண்டும். தூய்மைப்படுத்த வேண்டும். ஜனநாயகம் படுத்தவேண்டும். அரசியல் அணுகுமுறையில் மாற்றங்களை செய்ய வேண்டும்.

# சமஷ்டி நூற்றாண்டும் தமிழரசுக்கட்சியும்!

(19ம் பக்கத் தொடர்ச்சி)

1. திம்புக்கோட்பாடு, வட்டுக்கோட்டை பிரகடனம் போன்றவை சிங்கள மக்களுக்கு தங்கள் எதிர்காலம் குறித்து அச்சத்தை ஏற்படுத்துகின்ற முக்கிய விடயங்கள். இவற்றை தமிழரசுக்கட்சி மீளப்பெற்று தமிழ்த்தரப்பு நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும். பிரிவினையற்ற ஒன்றுபட்ட நாட்டுக்குள் வாழவே விரும்புகிறோம் என்பதை உறுதிப்படுத்துகின்ற ஒரு செயலாக இது அமையும்.

2.வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பது போன்ற இனியும் சாத்தியமற்ற போலிக் கோரிக்கைகளை முன் வைப்பதை தவிர்த்தல், மற்றும் அங்கு வாழும் சகல இன மக்களுக்கும் அந்த உரிமையை பிரகடனம் செய்தல். இதில் முக்கியமானது வடக்கு கிழக்கு தமிழர்தாயகம், தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற வார்த்தையாடல்களையும் தவிர்த்துக் கொள்வதாகும். இது பாரம்பரியமாக வாழும் முஸ்லிம்களின் நம்பிக்கையை பெறுவதற்கும் உதவும்.

3.திம்புக்கோட்பாடு பேசுகின்ற மலையக மக்கள் குறித்த விடயங்களுக்கு ஆதரவாக செயற்படுவது வேறு அதை கையில் எடுத்து அரசியல் செய்வது வேறு. பதுளை மற்றும் வடமேற்கு கரையோரங்களை உள்ளடக்கிய தமிழீழ வரைபடத்தை வாபஸ் பெறுவதுடன், மலையக மக்களின் அரசியல் தீர்மானங்களை அவர்களிடமே விட்டு விடல்.

4. கொழும்பில் ஒரு தமிழரசுக்கட்சி கிளை பெயர்ப்பலகை இருக்கிறது. செயற்படுகிறது (?), ஆனால் கொழும்பு தமிழர்கள், தமிழர்கள் என்ற உணர்வோடு இருந்தாலும், அவர்களின் அரசியல் தென்னிலங்கை சார்ந்தது. இவர்களால் வடக்கு, கிழக்கு தமிழர்களின் அரசியலை தீர்மானிக்க முடியாது என்பது கடந்த காலங்களில் பல முறை நிரூபிக்கப் பட்டுள்ளது. அதனால் தானே கொழும்பார்கள் வடக்கு கிழக்கில் அரசியல் செய்கிறார்கள்.

5. தென்னிலங்கை சகல முற்போக்கு சக்திகளுடன் மட்டும் அன்றி அரசாங்கம், எதிர்கட்சி தரப்புகளுடன் தமிழ் தரப்பு நல்லெண்ணத்தை பேண வேண்டும். இதனை தமிழ்மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளான காணி, நிர்வாக, மொழி மற்றும் கலாச்சார பண்பாட்டு வாழ்வுரிமை, மனித உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்தத்தேவையில்லை.

6. மாகாணங்களுக்கு பொலிஸ் நிர்வாக உரிமை கிடைக்குமாயின் அது விரும்பத்தக்கது. ஆனால் அது சிங்கள மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் ஒன்றாக உள்ளது. அதற்கு மாற்றாக இன விகிதாரசாரத்தை பேணும் வகையில் பொலிஸ்சேவை ஆட்சேர்ப்பு இடம் பெறுமாயின் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும். மேலும் முப்படைகளிலும் இதனை கோர முடியும்.

7.ஜனாதிபதி அநுரகுமார தனது சுதந்திர தின உரையில் இந்த நாட்டில் இனவாதத்திற்கும், தீவிரவாதத்திற்கும் இடமில்லை என்று மீண்டும் ஒரு முறை வலியுறுத்தியுள்ளார். இந்த கருத்துக்கு தமிழரசுக்கட்சி எதிரானது அல்லவே. ஆனால் சிறுபான்மை தேசிய இனம் ஒன்று தனது இருப்புக்காக பெரும்பான்மை அடக்குமுறை, ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடுவதை இனவாதம் என்று அரசாங்கமும், சிங்கள தீவிரவாதிகளும் முத்திரை குத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.அதேவேளை அரசாங்க வேலைத் திட்டங்களை தமிழ்தரப்பு ஒட்டு மொத்தமாக இனவாதமாகவும் நோக்க கூடாது.

8.தமிழரசுக்கட்சியும் ஆதரித்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கரிநாள் பேரணியில் வட்டுக்கோட்டை பிரகடனம், சுயநிர்ணய உரிமை கோஷங்கள் எழுப்பப்பட்டன. இந்த வகையான அரசியல் சிங்கள மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துமே அன்றி நல்லிணக்கத்திற்கு உதவாது. காலாவதியான வட்டுக்கோட்டை தீர்மானத்தை மனப்பாடம் செய்து மீட்டல் செய்வதில் இனியும் அர்த்தம் இருக்கிறதா...?

ஆக, எம்.ஏ. சுமந்திரன் கூறியுள்ள சமஷ்டி நூற்றாண்டின் அவரது வேலைத்திட்டம் சாத்தியமற்ற அரசியல் செயற்பாடுகளை நிராகரித்து நடைமுறைச்சாத்தியமான , ஜதார்த்த அரசியலுடன் கூடிய காலத்திற்கு பொருத்தமான வேலைத்திட்டமாக அமையவேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி- என்.பி.பி அரசாங்கம் இந்த நாட்டு மக்கள் அனைவரும் இலங்கையர் என்ற இலக்கை அவர்களின் முகவரி, கடவுச் சீட்டு, அடையாள அட்டை ஊடாக அடையமுடியாது. அனைத்து மக்களினதும் குறிப்பாக சிறுபான்மை மக்களின் இதயங்களில் "நாங்களும் இலங்கையர்'' என்ற உணர்வு ஏற்படும் வகையில் செயற்பட வேண்டும்.

இல்லையேல் சமஷ்டிக்கு நூறு வயது என்பதற்கும், இந்த நாட்டில் இனிமேல் இனவாதத்திற்கும், தீவிரவாதத்திற்கும் இடமில்லை என்று ஒரு காலத்தில் இவை இரண்டையும் சுமந்து இருந்தவர்கள் கூறுவதில் எந்த ஒரு அரசியல் அர்த்தமும் இல்லை.

# காணாமல் போகும் கியூபா?

(12ம் பக்கத் தொடர்ச்சி) ஆட்சியாளர்கள் முன்னால் உள்ளது. பெரும்பாலும் அவர்களின் தேர்வு இரண்டாவதாகவே இருக்க முடியும். மக்களைக் காப்பாற்ற முடியாத இலட்சியங்கள் வெற்றுக் கோசங்களே. உலக வரலாறில் இன்னும் சில நாட்களில், வாரங்களில், மாதங்களில் கியூபாவின் பெருமைமிகு வரலாறு முடிவுக்கு வரக் கூடும். ஆனால், உலக அரங்கில் தலைநிமிர்ந்து நின்ற கியூபாவின் அந்த 67 வருட நினைவுகள் கியூப மக்கள் மனதில் மாத்திரமன்றி, கியூபாவை உலகம் முழுவதிலும் இருந்து நேசித்த மக்கள் அனைவரின் மனதிலும் என்றென்றும் பசுமையாக விளங்கும் என்பதே உண்மை.


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com




# இலங்கை அரசு கோரினால் பொறுப்புக்கூறல் - நல்லிணக்க பொறிமுறை குறித்து ஆதரவு வழங்கத் தயார் - அவுஸ்திரேலியா

இலங்கையின் நல்லிணக்கப் பயணத்துக்கு அவுஸ்திரேலியா தனது ஆதரவை வழங்கும். இது குறித்து அரசாங்கம் அளித்துள்ள சில அறிக்கைகள் எங்களுக்கு மிகுந்த ஊக்கமளிக்கின்றன. இலங்கை அரசாங்கத்துக்கு பயனுள்ள வகையில் எந்த வகையிலும் உதவ நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் இது இலங்கையர்களால் முன்னெடுக்கப்படும் ஒரு செயல்பாடாக அமைய வேண்டும். வெளிநாடு இதனை ஆரம்பித்து வைக்க முடியாது. ஆனால் கோரிக்கை விடுத்தால் எம்மால் ஆதரவு வழங்க முடியும் என்று இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மத்தேவ் டக்வெர்த் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை குறித்த தீர்மானங்களை நாங்கள் நீண்ட காலமாக ஆதரித்து வருகிறோம். ஏனெனில், இந்தச் செயல்பாட்டை முன்னோக்கி நகர்த்த இது ஒரு முக்கியமான வழி என்று நாங்கள் கருதுகிறோம். மேலும், இங்குள்ள சமூகத்தின் சில பிரிவினர், பொறுப்புக்கூறலை மேம்படுத்துவது தொடர்பாக என்னிடம் கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர் என்றும் உயர்ஸ்தானிகர் கூறினார்.

ஜெனிவாவில் இலங்கை குறித்த தீர்மானங்களுக்கு அவுஸ்திரேலியா எப்போதும் ஆதரவளித்து வருகிறது. இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் நிலையை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மத்தேவ் டக்வெர்த் இலங்கையின் நல்லிணக்கப் பயணத்துக்கு ஆஸ்திரேலியா தனது ஆதரவை வழங்கும் என்று குறிப்பிட்டார்.

சமூகத்தின் பல தரப்பினரும் இது குறித்து கவலை கொண்டுள்ளனர் என்பதை நாங்கள் அறிவோம். ஆஸ்திரேலியாவில் வாழும் பெரிய அளவிலான இலங்கை வம்சாவளி சமூகமும் இந்த செயல்பாடுகள் முன்னோக்கி நகர்வதை பார்க்க விரும்புகிறார்கள். சமீபத்திய ஆண்டுகளில் கவனிக்கப்படாமல் விடப்பட்ட இந்த விவகாரங்களை முன்னெடுத்துச் செல்வது குறித்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அளித்துள்ள சில அறிக்கைகள் எங்களுக்கு மிகுந்த ஊக்கமளிக்கின்றன. இலங்கை அரசாங்கத்திற்கு பயனுள்ள வகையில் எந்த வகையிலும் உதவ நாங்கள் தயாராக இருக்கிறோம்' என்று குறிப்பிட்டார் உயர்ஸ்தானிகர் மத்தேவ். ஆனால் இந்த பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் இலங்கையர்களால் முன்னெடுக்கப்படும் ஒரு செயல்பாடாக அமைய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிச்சயமாக இது இலங்கையர்களால் முன்னெடுக்கப்படும் ஒரு செயல்பாடாக (Sri Lankan-driven process) இருக்க வேண்டும், ஆஸ்திரேலியா போன்ற ஒரு வெளிநாடு இதனை கட்டாயப்படுத்தவோ அல்லது தீர்த்து வைக்கவோ முடியாது. ஆனால் எங்களால் செய்யக் கூடியது என்னவென்றால், நல்லிணக்கத்தைக் கொண்டு வருவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எங்களால் முடிந்த ஆதரவை வழங்குவது தான்' என்று குறிப்பிட்டார் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மத்தேவ் டக்வெர்த்.

இது குறித்து மேலும் விளக்கமளித்த உயர்ஸ்தானிகர் நாங்கள் எங்கள் கருத்துக்களையும், குறிப்பாக எங்களது விழுமியங்களையும் இலங்கை அரசாங்கத்துக்கு தெரிவிக்கிறோம். சில சமயங்களில், அரசாங்கம் இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும் என்று நாங்கள் விரும்பும் விடயங்கள் குறித்து கடினமான உரையாடல்களை மேற்கொள்ள வேண்டியிருக்கலாம். ஆனால், இங்கு மிக முக்கியமான விடயம் என்னவென்றால், இலங்கையின் நல்லிணக்கப் பயணத்தில் ஆஸ்திரேலியா ஒரு பங்காளியாக இருக்க விரும்புகிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை குறித்த தீர்மானங்களை நாங்கள் நீண்டகாலமாக ஆதரித்து வருகிறோம். ஏனெனில், இந்தச் செயல்பாட்டை முன்னோக்கி நகர்த்த இது ஒரு முக்கியமான வழி என்று நாங்கள் கருதுகிறோம். மேலும், இங்குள்ள சமூகத்தின் சில பிரிவினர், பொறுப்புக்கூறலை மேம்படுத்துவது தொடர்பாக தாங்கள் விரும்பும் சில விடயங்கள் குறித்து என்னிடம் கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர்.

அந்த விவகாரங்களை எழுப்பவும், நடைமுறை ரீதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளை ஊக்குவிக்கவும் கிடைக்கும் எந்தவொரு வாய்ப்பையும் நாங்கள் பயன்படுத்துகிறோம் என்றும் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

இதேவேளை தற்போது அரசாங்கம் 'உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பற்றி பேசி வருகிறது. இந்த முயற்சியில் ஆஸ்திரேலியா உதவுவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதேனும் உள்ளனவா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த உயர்ஸ்தானிகர் இத்தகைய ஒரு செயல்பாடு இலங்கையர்களால் முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே அது பயனுள்ளதாக இருக்கும். இது இலங்கையரால் வழி நடத்தப்படும் ஒரு முயற்சியாக இருக்க வேண்டும். இப்போது, இலங்கை முன்னெடுத்துச் செல்லும் ஒரு செயல்பாட்டிற்கு ஆதரவாக எங்களால் பயனுள்ள பங்களிப்பை வழங்க முடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்டாலோ அல்லது அதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டாலோ, நிச்சயமாக நாங்கள் உதவத் தயாராக இருக்கிறோம்.



ஆஸ்திரேலியாவோ அல்லது வேறு எந்த நாடோ இதனைத் தொடங்கி வைக்கவோ அல்லது இயக்கவோ முடியும் என்று நான் நினைக்கவில்லை. இது சமூகத்திற்குள்ளிருந்தும் அரசாங்கத்திடமிருந்தும் வர வேண்டிய ஒன்றாகும். ஆனால் எங்களால் இயன்ற எந்த வகையிலும் நாங்கள் அதற்கு ஆதரவளிப்போம் என்று குறிப்பிட்டார்.

இது இவ்வாறிருக்க புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளிடம் எடுத்துறைத்துள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கிடையிலான சந்திப்பொன்று 10 பெப் 2026 செவ்வாய்க்கிழமை நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சில் இடம் பெற்றது.

இந்த கலந்துரையாடலின் போது புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. இந்த சட்ட மூலத்துக்காக பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை எதிர்வரும் 28ஆம் திகதிவரை தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்க முடியும் என்பதுடன் அவ்வாறு அனுப்பப்படும் கருத்துக்கள் மற்றும் யோசனைகள் தொடர்பில் சாதகமான முறையில் ஆராய்ந்து பார்த்த பின்னர், புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஐரோப்பிய சங்கத்தின் பிரதிநிதிகளுடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது அமைச்சர் தெரிவித்தார்.